
# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - நவம்பர் 2020

**www.tnpscthervupettagam.com**










SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ....10
தமிழ்நாடு செய்திகள் ....19
கற்போம் எழுதுவோம் இயக்கம் ....19
யாதும் ஊரே கருத்தரங்கு ....19
மதுரை எய்ம்ஸ் ....19
பெரம்பலூரில் புதைபடிவங்கள் ....19
தமிழ்நாட்டின் புதிய வேளாண் துறை அமைச்சர் ....20
தமிழ்நாடு குறித்த கல்வி நிலை அறிக்கை ....20
மின்சார வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரி விலக்கு ....21
நடமாடும் அம்மா உணவகங்கள் ....21
இந்தியாவில் உரக் கட்டமைப்பு பொன் விழா ஆண்டு விருது – 2020 ....22
தீ (Thee) செயலி ....22
தேசியச் செய்திகள் ....22
குழந்தை நல விடுப்பு ....22
குரு தேஜ் பகதூரின் 400வது பிறந்த தினம் ....22
பொதி கட்டுதலுக்கான கட்டாய விதிமுறைகள் ....22
ஆரம்பக் 2020 ....23
NCLAT ....23
ஐஎஸ்ஓ 17020: 2012 ....23
பொது விவகாரங்கள் குறியீடு 2020 ....24
பை பை கொரோனா ....25
நிலப் பட்டங்கள் குறித்த வரைவு மாதிரிச் சட்டம் ....25
ASER அறிக்கை ....25
லடாக்கில் முதலாவது எழுச்சி தினம் ....26
இராணுவ விமானப் படை ....26
கங்கை உத்சவம் - 2020 ....27
நீதிமன்ற அவமதிப்பு ....27
வேளாண் சட்டங்கள் குறித்து ராஜஸ்தான் ....27
செறிவூட்டப்பட்ட அரிசி ....28
தொலைக்காட்சி மதிப்பீட்டு முறையை மதிப்பாய்வு செய்வதற்கான குழு ....29
உலக முதலீட்டாளர் வட்டமேசை மாநாடு ....29
13வது நகர்ப்புற இயக்க இந்தியக் கருத்தரங்கு 2020 ....29
வளர்ந்து வரும் சுற்றுப்புறத்திற்கான சவால் ....30
கோவிட் – 19 ஸ்ரீ சக்தி சவால் ....30
நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரசம் (திருத்தம்) அவசரச் சட்டம், 2020 ....30
சாகர் கவாச் பயிற்சி ....31
“Bull Strike” போர்ப் பயிற்சி ....31
தரவு முதிர்ச்சி மதிப்பீட்டுக் கட்டமைப்பு ....31
ஒரே தரவரிசை ஒரே ஓய்வூதியம் ....31

புதிய தலைமைத் தகவல் ஆணையர் ... 31
பட்டியலிடப்பட்ட வகுப்பினர் (SC)/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் ... 32
தேசிய நீர் விருதுகள் 2019 ... 32
அடல் புத்தாக்கத் திட்டம் – சிரஸ் திட்டம் ... 33
தேசியக் குங்குமப்பூ திட்டம் ... 33
முதலாவது ஹைப்பர் லூப் பயணிகள் பயணம் ... 33
மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகத்தின் பெயர் மாற்றம் ... 34
செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு ... 34
புலம்பெயர்வு கொள்கைக் குறியீடு ... 35
இந்தியக் கைபேசி மாநாடு (IMC) ... 35
ஹுனார் ஹாத் ... 35
எடெல்கிவ் ஹுருன் இந்திய நன்கொடைப் பட்டியல் 2020 - 7வது பதிப்பு ... 36
11வது வருடாந்திர நிமோனியா (கபவாதம்) மற்றும் வயிற்றுப் போக்கு செயல்பாட்டு அறிக்கை ... 36
பாரத் தர்ஷன்-தக்சிண பாரத் யாத்திரை ... 36
அமைப்புசாராத் துறையின் தேசிய தரவுதளம் ... 37
நதியின் மீதான இந்தியாவின் மிக நீளமான பாலம் ... 37
அமைதிக்கான சிலை ... 37
குடிமைப் பதிவுகள் முறையை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் இன்றியமையாத புள்ளியியல் குறித்த 2018 ஆம் ஆண்டு அறிக்கை ... 38
பிரிவு 167 குறித்த இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ... 38
ஆத்ம நிர்பர் (தற்சார்பு இந்தியா) பாரத் அபியான் 3.0 ... 39
மீன் வளத் துறையில் விருதுகள் ... 39
இந்தியப் புலனாய்வு அமைப்பிற்கு வேண்டிய ஒப்புதல் ... 39
லீலாவதி விருதுகள் ... 40
பெங்களூரு தொழில்நுட்ப மாநாடு 2020 ... 40
தீவிரமயமாக்கல் (தீவிரவாதம்) குறித்த ஆய்வு ... 40
உள்நாட்டு நுழைவு அனுமதிப் படிவம் (ILP) – மேகாலயா ... 41
ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள் ... 41
இந்தியாவில் தடுப்பு மருந்துகளின் கையாளுகை ... 41
பிராந்திய அளவில் தட்டம்மை ஒழிப்பு நோக்கிய செயல்பாடு 2000 - 2019 ... 42
சஃபாய் மித்ரா சுரக்சா சவால் ... 42
கலிசோ நடவடிக்கை ... 42
உமாங் செயலியின் சர்வதேசப் பதிப்பு ... 43
பூல்சங்கி நாவல் ... 43
ஏர் இந்தியா ஒன் - B777 விமானம் ... 44
இந்தியாவிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) முதலீட்டு செயல் திட்டம் ... 45
அகில இந்திய சபாநாயகர்கள் கருத்தரங்கு ... 45
சர்வதேசச் செய்திகள் ... 46
புவியிட ஒத்துழைப்பிற்கான அடிப்படைப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (BECA) ... 46
எமி கோனே பேரட் – அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் இணை நீதிபதி ... 47
6வது பிரிக்ஸ் நாடாளுமன்ற மன்றம் ... 47
மலபார் பயிற்சி 2020 – 24வது பதிப்பு ... 47

இந்தியா-மத்திய ஆசியா பேச்சுவார்த்தை ..... 48
சிங்கப்பூர் பன்னாட்டு நடுவர் மையம் ..... 48
'வரிகளுக்கு இடையேயான சிந்தனைகள்: ஆசிரியர்கள் பற்றி உலகம் உண்மையில் என்ன நினைக்கின்றது' - அறிக்கை ..... 49
சிலியில் வாக்கெடுப்பு ..... 49
இடப்பெயர்வு மற்றும் மேம்பாட்டு சுருக்கம் 33 - அறிக்கை ..... 49
உலகளாவிய பருவகாலப் புதுப்பிப்பு அறிக்கை ..... 50
கில்ஜிட் – பலுசிஸ்தான் ..... 50
சாகர் - II திட்டம் ..... 51
ஷி ஜின்பிங் - சீனா ..... 52
சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் ..... 53
இந்தியாவால் முன்மொழியப்பட்ட ஐ.நா. தீர்மானம் ..... 53
காரட் - கூட்டுக் கடற்படைப் பயிற்சி ..... 54
எதிர்காலக் கொள்ளை நோய்களின் வாய்ப்புகள் குறித்த அறிக்கை ..... 54
2020 ஆம் ஆண்டு அமெரிக்கத் தேர்தலின் சிறப்பம்சங்கள் ..... 54
அயல்நாட்டுப் பணியாளர்களுக்கான சுதந்திரம் – சவுதி அரேபியா ..... 55
கத்தாரின் முதலாவது தேசியத் தேர்தல் ..... 55
உடல் பருமன் குறியீடு – இந்தியா ..... 55
முதலாவது இந்திய நார்டிக் பால்டிக் மாநாடு ..... 56
இந்திய - இத்தாலி இருதரப்பு உச்சி மாநாடு ..... 57
அமெரிக்கத் தேர்தல் 2020 ..... 57
கல்வி சுதந்திரக் குறியீடு ..... 59
உணவுக் கூட்டிணைவு ..... 59
ஐக்கிய அரபு அமீரகத்தில் சீர்திருத்தங்கள் ..... 60
டைக்ரே பகுதி ..... 60
மகாத்மா காந்தி குறித்த சிறப்புத் தொகுப்பு ..... 60
SCO மன்றத்தின் அரசத் தலைவர்களின் 20வது மாநாடு ..... 60
கர்தார்பூர் பெருவழிப் பாதை ..... 61
ஷேக் கலீஃபா - பஹ்ரைன் ..... 61
PIWTT பாதை ..... 62
இங்கிலாந்தின் உள்நாட்டுச் சந்தை மசோதா ..... 62
மியான்மர் தேர்தல் முடிவுகள் ..... 62
17வது இந்தியா – ஆசியான் மாநாடு ..... 62
15வது கிழக்கு ஆசிய மாநாடு ..... 63
இடி (Thunder) நடவடிக்கை ..... 63
RCEP : 15 நாடுகள் ஒப்பந்தம் ..... 64
ஜி20 வரலாற்றுக் கடன் ஒப்பந்தம் ..... 65
3வது ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ..... 65
டிரிஸ்டன் டா குன்ஹா ..... 65
புவேர்ட்டோ ரிக்கோ ..... 66
12வது பிரிக்ஸ் உச்சி மாநாடு ..... 66
மலபார் கடற்பயிற்சி ..... 67
டீம் ஹேலோ (Team Halo) ..... 67

ஜி20 உலகளாவிய பொலிவுறு நகரங்கள் கூட்டிணைவு ..... 67
தங்க அட்டை நுழைவு இசைவு ..... 67
APEC மாநாடு ..... 67
அமெரிக்கா மற்றும் பாரிஸ் ஒப்பந்தம் ..... 68
ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றம் ..... 68
கர்ப்பப் பை கழுத்துப் புற்றுநோய் ஒழிப்பைத் துரிதப் படுத்துவதற்கு வேண்டிய ஒரு உலகளாவிய உத்தி ..... 68
உலகின் சிறந்த நகரங்கள் 2021 ..... 68
பாகிஸ்தானில் விஷ்ணு ஆலயம் ..... 69
திபெத்திற்காக அயல்நாட்டில் அமைந்த நாடாளுமன்றம் (TPiE) ..... 69
ஆசியா-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) மாநாடு ..... 69
15வது ஜி-20 தலைவர்கள் உச்சி மாநாடு ..... 70
இந்தியா மற்றும் தாய்லாந்து - CORPAT ..... 70
உலகளாவிய லஞ்ச அபாயம் 2020 ..... 71
இந்தியா-லக்ஸம்பர்க் இணைய வழி உச்சி மாநாடு ..... 71
UNICRI அறிக்கை ..... 72
2020 ஆம் ஆண்டில் ஆசியா மற்றும் பசிபிக்கில் நீடித்த மேம்பாட்டிற்கான புவியிடங்காட்டி நடைமுறைகள் ..... 73
ரோஹிங்கியா பிரச்சினை ..... 73
IPU அயலக தணிக்கையாளர் ..... 73
கோவிட் மூலமான தலைமுறை இழப்பைத் தவிர்த்தல் என்ற ஒரு அறிக்கை ..... 73
அர்ரியா திட்டம் ..... 74
திறந்த வான் ஒப்பந்தம் ..... 74
நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு குறித்த ஒரு சுகாதார உலகளாவிய தலைவர்கள் குழு ..... 74
அணுசக்தி கூட்டாண்மைக்கான உலகளாவிய மையம் ..... 74
2020 ஆப்கானிஸ்தான் மாநாடு ..... 75
பொருளாதாரச் செய்திகள் ..... 76
மாவட்ட அளவில் PFMS ..... 76
METLDEX ..... 76
தேசியத் திட்டம் மற்றும் திட்ட மேலாண்மை கொள்கைக் கட்டமைப்பு ..... 76
இந்தியாவில் மின்சார அணுகல் மற்றும் விநியோக பயன்பாடுகளைத் தரப்படுத்தல் ..... 77
அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் - கட்டம் II மற்றும் கட்டம் III ..... 77
2020 ஆம் ஆண்டின் உலகின் பாதுகாப்பான வங்கிகள் ..... 77
இந்தியாவில் வணிகம் செய்தல் குறித்த அறிக்கை – 2020 ..... 78
தொழில்துறை உறவுகள் குறியீடு 2020 ..... 78
வாட்ஸ்அப் பண வழங்கீடு ..... 79
பதினைந்தாவது நிதி ஆணைய அறிக்கை ..... 79
நிலக்கரி சுரங்க ஏலத்தின் முதலாவது பகுதி ..... 80
தேசியப் பொது இயக்கப் பற்று அட்டை ..... 81
எம்எஸ்எம்இ பணி உருவாக்கம் ..... 81
PM-KUSUM திட்டம் ..... 81
ஆத்ம நிர்பர் பாரத் ரோஸ்கர் யோஜனா ..... 82
கோவிட் சுரக்சா திட்டம் ..... 82

வரலாறு காணாத மந்தநிலையில் இந்தியா ... 82
ரிசர்வ் வங்கி புத்தாக்க மையம் ... 83
லட்சுமி விலாஸ் வங்கி ... 83
தனியார் துறை வங்கிகள் - சீர்திருத்தங்கள் ... 83
பிரதான் மந்திரி மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டம் ... 83
கிரானா திட்டம் ... 84
நுண் நீர்ப்பாசனத் திட்டங்கள் ... 84
சஹாகர் பிரக்யா ... 84
தேசிய உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி ... 84
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ... 85
இந்திஜென் திட்டம் 2019 ... 85
ஹைட்ரஜன் உற்பத்தி தொழில்நுட்பம் ... 86
SERB - POWER முன்னெடுப்பு ... 86
16 சைக் ... 86
இந்திய கடலோரக் காவல்படைக் கப்பல் சி-452 ... 87
பினாகா ஏவுகணை அமைப்பு ... 87
ஒற்றை ஏவுகலன் மூலம் (ராக்கெட்) 13 செயற்கைக் கோள்கள் ... 88
லேஷ்மானியா டோலாவானி ... 88
வேகமான ரேடியோ அலை வெடிப்புகள் ... 89
அனைத்து வானிலை புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோள் ... 89
மலேரியா நோய் வெடிப்பு முன்னறிவிப்பு ... 90
உயிர் வாழ்வதற்கு உகந்த வெளிக்கோள்கள் ... 91
EOS-01 ... 91
கொரோனாவின் மூலக் காரணமாக மிங்க் (Minks) ... 92
தீயைக் கண்டறிதல் மற்றும் தீயை அணைக்கும் அமைப்பு ... 92
முப்பது மீட்டர் தொலைநோக்கி திட்டம் ... 93
புவி மேற்பரப்பு நிறை ... 93
"TataMD CHECK" ... 93
BNT162b2 ... 94
உலகின் முதல் 6ஜி செயற்கைக்கோள் ... 94
வாகிர் நீர்மூழ்கிக் கப்பல் ... 95
ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நாசா ... 95
விரைவான எதிர்வினையாற்றும் நில-வான் ஏவுகணை ... 95
லியோனிட் விண்கல் பொழிவு ... 95
திட்டம் க்ரூ 1 ... 96
nCOP2 தடுப்பூசி ... 96
பரம் சித்தி ... 97
இந்தியாவின் எச்ஜவி தடுப்பு மாதிரி ... 97
ககன்யான் ... 98
P-8I ... 98
அலைவாங்கி விண்வெளித் திட்டம் ... 98
கோவேக்ஸின் மருந்திற்கான மூன்றாம் கட்ட சோதனை ... 99
mRNA ... 99

உலகளாவிய ரேடியோ கண்காணிப்பு அமைப்பு ........ 99
பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய பதிப்பு ........ 100
வருணாஸ்திரா நீர்மூழ்கி ஏவுகணை ........ 100
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 101
2 புதிய ராம்சார் தளங்கள் ........ 101
இந்தியாவில் மணல் மேடு பூங்கா ........ 102
சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டம் ........ 102
சர்தார் விலங்கியல் பூங்கா ........ 102
மஞ்சள் தூசு ........ 103
புது தில்லியில் பசுமைப் பட்டாசுகள் ........ 103
புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள் ........ 104
புதிய இறால் இனங்கள் ........ 104
பன்னா உயிர்க் கோளக் காப்பகம் ........ 105
மன்சார் ஏரி மேம்பாட்டுத் திட்டம் ........ 106
யமுனையில் அம்மோனியாவின் அளவுகள் அதிகரிப்பு ........ 107
2050 ஆம் ஆண்டில் கடுமையான நீர் பற்றாக்குறை ........ 107
காலநிலை மாற்றம் குறித்த இந்திய சிஇஓ மன்றம் ........ 108
கடாகீ குழு ........ 108
காற்றுத் தர மேலாண்மைக்கான ஆணையம் ........ 109
கோட்டூர் யானைகள் புனர்வாழ்வு மையம் ........ 109
இமயமலையில் தார் உருண்டைகள் ........ 109
பெருந் தடுப்புப் பவளத்திட்டு ........ 110
புயல்கள் இல்லாத அக்டோபர் மாதம் – 2020 ........ 110
கங்கை நதியில் 49% அதிக பல்லுயிர்ப் பெருக்கம் ........ 111
பன்னாட்டுப் பறவைத் திருவிழா - 2021 ........ 111
அமூர் வல்லூறுகள் ........ 111
லோனார் மற்றும் சுர் சரோவர் ஏரி ........ 112
அந்தமானில் புதிய மரத்தவளை இனம் ........ 113
இந்தியாவின் முதலாவது குவியத் திட்டம் (ஒருங்கிணைக்கப் பட்டது) ........ 113
நிகர்நிலைக் காடுகள் ........ 114
மேகாலயாவின் ஒளிரும் காளான்கள் ........ 114
பிலிபித் புலிகள் காப்பகம் ........ 114
நிவர் புயல் ........ 115
மாநிலச் செய்திகள் ........ 116
தரணி இணையதளம் ........ 116
காய்கறிகளுக்கான குறைந்த பட்ச ஆதார விலையை (MSP) நிர்ணயித்த முதலாவது மாநிலம் ........ 116
கெவாடியா சுற்றுலாச் சுற்றுப் பகுதி ........ 117
கேரளாவில் 10% ஒதுக்கீடு ........ 117
லுஹ்ரி முதல் கட்ட நீர்மின் திட்டம் ........ 117
பசுமையை நோக்கிச் செல்லுங்கள் பிரச்சாரம் – ஆந்திரப் பிரதேசம் ........ 117
சுற்றுலா வசதி மையம் ........ 118
தனியார் துறையில் இட ஒதுக்கீடு ........ 118
ஹசிரா-கோஹா ரோ-பாக்ஸ் படகுச் சேவை ........ 118

திரும்ப அழைத்தலுக்கான உரிமை ..... 118
பீகார் தேர்தல் முடிவுகள் 2020 ..... 119
சேச்சா சமதன் - ஒடிசா ..... 119
சர்னா விதிமுறை ..... 119
கேரளாவின் ஒளியிழை வலைப்பின்னல் திட்டம் ..... 119
பசு அமைச்சரவை ..... 120
விஜயநகரம் மாவட்டம் ..... 120
இந்தியா - சர்வதேச செர்ரி மலர்த் திருவிழா ..... 120
அபயம் செயலி ..... 120
கேரள காவல் துறைச் சட்டம், 2011 ..... 121
ஹவேரி இரயில் நிலையம் ..... 121
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 122
போஸ்டனின் மூன்றாம் இந்தியா சர்வதேச திரைப்பட விழா ..... 122
கேசுபாய் படேல் (1928-2020) ..... 122
சீன் கானரி ..... 122
28 ஆவது எழுத்தச்சன் புரஸ்காரம் ..... 123
எம்மெட் லீஹி விருது ..... 123
நாம் வெல்லும் வரை (Till We Win) - புத்தகம் ..... 123
14வது ஆசிய திரைப்பட விருதுகள் 2020 ..... 124
நேபாள இராணுவத்தின் கௌரவ ஜெனரல் பட்டம் ..... 124
ஹாக்கி இந்தியாவின் தலைவர் ..... 125
காந்திய இளம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு ..... 125
இலண்டன் உலகப் பயணச் சந்தை விருது ..... 126
இலக்கியத்திற்கான ஜேசிபி விருது ..... 126
டாக்டர் துளசி தாஸ் சுக் விருது 2020 ..... 127
டாடா இலக்கியம் வாழ்க! 2020 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 127
குழந்தைகளுக்கான சர்வதேச அமைதிப் பரிசு 2020 ..... 127
2020 ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை விருது ..... 128
ஜான் தாமஸ் கோஸ்லின் பெரேரா (97) ..... 128
எடின்பெர்க் விருது ..... 128
புக்கர் பரிசு 2020 ..... 129
வாதாயன் வாழ்நாள் சாதனை விருது ..... 130
சர்வதேச எம்மி விருதுகள் 2020 ..... 130
மரடோனா (60) – மறைவு ..... 131
விளையாட்டுச் செய்திகள் ..... 132
ஷேன் வாட்சன் ஓய்வு ..... 132
ரபேல் நடால் – 1000வது வெற்றி ..... 132
ஐபிஎல் 2020 வெற்றியாளர் ..... 133
ITTF மகளிர் உலகக் கோப்பைப் பட்டம் ..... 133
மகளிர் உலகக் கோப்பை ..... 134
சர்வதேச கிரிக்கெட்டுக்கான குறைந்தபட்ச வயது ..... 134
முக்கிய தினங்கள் ..... 135
தமிழ்நாடு தினம் / மாநில உருவாக்க தினம் – நவம்பர் 01 ..... 135

புதுச்சேரி விடுதலை தினம் – நவம்பர் 01 ..... 135
10வது உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு வாரம் - அக்டோபர் 24 முதல் 31 வரை ..... 136
உலக சைவ உணவு தினம் – நவம்பர் 01 ..... 136
பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – நவம்பர் 02 ..... 137
உலக சுனாமி விழிப்புணர்வு நாள் - நவம்பர் 05 ..... 137
பள்ளிகளில் இணைய வழித் துன்புறுத்தல் உள்ளிட்ட வன்முறை மற்றும் கொடுமைப் படுத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – நவம்பர் 05 ..... 137
போர் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் போது சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – நவம்பர் 06 ..... 138
சிசுப் பாதுகாப்பு நாள் - நவம்பர் 07 ..... 138
தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு நாள் - நவம்பர் 07 ..... 139
தேசியச் சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 09 ..... 139
உலக சுதந்திர தினம் - நவம்பர் 09 ..... 139
அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான உலக அறிவியல் நாள் - நவம்பர் 10 ..... 140
உத்தரகாண்ட் தினம் – நவம்பர் 09 ..... 140
சர்வதேச மன அழுத்த விழிப்புணர்வு வாரம் – நவம்பர் 02/06 ..... 141
உலகக் கதிரியக்க நாள் - நவம்பர் 08 ..... 141
உலக நோய்த் தடுப்பு நாள் - நவம்பர் 10 ..... 141
தேசிய கல்வி நாள் - நவம்பர் 11 ..... 142
உலக தரத்திற்கான நாள் - நவம்பர் 12 ..... 142
தேசிய ஆயுர்வேத தினம் – நவம்பர் 13 ..... 143
தேசிய குழந்தைகள் தினம் - நவம்பர் 14 ..... 143
உலக நீரிழிவு நாள் - நவம்பர் 14 ..... 144
சாலைப் போக்குவரத்து நெரிசலால் பலியானோருக்கான உலக நினைவு நாள் - நவம்பர் 15 ..... 144
ஜார்க்கண்ட் நாள் - நவம்பர் 15 ..... 144
பொதுச் சேவை ஒளிபரப்பு நாள் - நவம்பர் 12 ..... 145
சர்வதேச சகிப்புத் தன்மை தினம் – நவம்பர் 16 ..... 146
தேசியப் பத்திரிக்கை தினம் – நவம்பர் 16 ..... 146
சர்வதேச மாணவர் தினம் - நவம்பர் 17 ..... 146
இஸ்லாமிய கலையின் சர்வதேச நாள் - நவம்பர் 18 ..... 146
உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் (COPD) – நவம்பர் 18 ..... 147
தேசியப் பறவை தினம் – நவம்பர் 12 ..... 147
நுண்ணுயிர் எதிர்ப்பிகள் விழிப்புணர்வு வாரம் ..... 147
தேசிய ஒருமைப்பாட்டுத் தினம், நவம்பர் 19 ..... 148
உலகக் கழிப்பறை தினம் – நவம்பர் 19 ..... 148
சர்வதேச ஆண்கள் தினம் – நவம்பர் 19 ..... 148
உலகத் தத்துவ தினம் – நவம்பர் 19 ..... 149
தேசிய இயற்கை மருத்துவ தினம் – நவம்பர் 18 ..... 149
உலக குழந்தைகள் தினம் – நவம்பர் 20 ..... 149
திருநர் நினைவு தினம் - நவம்பர் 20 ..... 150
ஆப்பிரிக்காவிற்கான தொழில்மயமாக்கல் தினம் – நவம்பர் 20 ..... 150
புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான தேசிய வாரம் – நவம்பர் 15/21 ..... 151

உலகத் தொலைக்காட்சி தினம் - நவம்பர் 21 ........ 151
மகளிர் தொழில்முனைவோர் தினம் – நவம்பர் 19 ........ 151
உலக மீன்வள தினம் – நவம்பர் 21 ........ 152
குவாமி ஏக்தா வாரம் - தேசிய ஒருங்கிணைப்பு வாரம் ........ 152
உலக ஆலிவ் மர நாள் - நவம்பர் 26 ........ 153
சட்ட நாள் / அரசியலமைப்பு நாள் - நவம்பர் 26 ........ 153
தேசிய பால் தினம் - நவம்பர் 26 ........ 154
ஆவாஸ் திவாஸ் மற்றும் ஆவாஸ் வாரம் - நவம்பர் 20 ........ 154
72வது நிறுவன தினம் ........ 154
உலகப் பாரம்பரிய வாரம் - நவம்பர் 19/25 ........ 155
விமானப் போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 23/27 ........ 155
பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் ........ 155
இரசாயனப் போரினால் பாதிப்பிற்கு உள்ளான அனைவருக்குமான நினைவு தினம் – நவம்பர் 30 ........ 156

# TNPSC துளிகள்

- போலந்தின் அரசியலமைப்புத் தீர்ப்பாயமானது தவறான வடிவமைப்பில் உருவான கருக்களின் கருக்கலைப்பை அனுமதிக்கும் தற்போதையச் சட்டமானது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று அறிவித்துள்ளது.
- இந்தியா-ஆஸ்திரேலியா முழு பொருளாதார ஹேக்கத்தான் ஆனது ஆஸ்திரேலியாவின் சிஎஸ்ஐஆர்ஓ அமைப்புடன் இணைந்து அடல் புத்தாக்கத் திட்டத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் ஜப்பானின் புதிய பிரதமரான யோஷிஹைடு சுகா அவர்கள் அந்நாடு 2050 ஆம் ஆண்டில் சுழியக் கரிம உமிழ்வை அடையும் என்று அறிவித்துள்ளார்.
- சர்வதேச இயங்குபடத் தினமானது அக்டோபர் 28 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்கள், இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் 'பசுமைக் கட்டிட மகாசபை 2020' என்ற ஒரு மாநாட்டைத் துவக்கி வைத்தார்.
  - இந்த நிகழ்வின் போது, இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பானது வலிவூட்டப் பட்ட எஃகிற்கான (Steel Rebars) GreenPro Ecolabel Standard எனும் ஒரு தரநிலையை அறிமுகப் படுத்தியது.
- ஹைதராபாத்தின் ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையமானது இந்தியாவில் காகிதமில்லாத மின்னணுப் பயண ஏற்பாடு (இ-போர்டிங்) என்ற ஒரு வசதியைத் தொடங்கிய முதல் விமான நிலையமாகும்.
  - சர்வதேச விமானங்களுக்கான இ-போர்டிங் வசதிக்கான முதல் படி இதுவாகும்.
- இந்திய இரயில்வேயானது அனைத்து மண்டலங்களிலும் பெண்களின் பாதுகாப்பு குறித்த நடவடிக்கையின் மீது கவனம் செலுத்துவதற்காக “மேரி சஹேலி” என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
  - இதன் நோக்கம் இரயில் பயணம் தொடங்கும் இடத்திலிருந்து இரயில் பயணம் முடியும் வரை இரயில் பயணம் மேற்கொள்ளும் பெண் பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும்.
- கர்நாடக மாநில அரசானது அம்மாநில அரசு ஊழியர்கள், திரைப்படங்கள் மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் நடிப்பதற்குத் தடை விதிக்கப் பரிந்துரைத்துள்ளது.
- இந்தியக் கடற்படையானது வங்காள விரிகுடாவில் ஐஎன்எஸ் கோராவிலிருந்து ஒரு கப்பல் எதிர்ப்பு ஏவுகணையைச் சோதனை செய்தது.
- இந்திய இராணுவமானது இணையத்திற்கான பாதுகாப்புச் செயலி எனப்படும் ஒரு செய்தி அனுப்பும் செயலியைத் தொடங்கியுள்ளது.
  - இது தனது வீரர்களுக்குப் பாதுகாப்பாக குரல் வழிச் செய்தி, குறுஞ்செய்தி மற்றும் காணொலிச் சேவைகள் ஆகியவற்றை வழங்குகின்றது.
- இந்திய விமானப் படையானது சுகோய் போர் விமானத்திலிருந்து பிரம்மோஸ் மீயொலி வேக ஏவுகணையைச் சோதனை செய்துள்ளது.
  - இது வான்வெளியிலிருந்துச் செலுத்தப்படும் பிரம்மோஸின் ஒரு பதிப்பாகும்.
- காங்கிரஸ் தலைவரும், மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வருமான கமல்நாத்திற்கு வழங்கப்பட்டு இருந்த அக்கட்சியின் 'நட்சத்திரப் பிரச்சாரகர்' (star campaigner) என்ற அந்தஸ்து இந்திய தேர்தல் ஆணையத்தால் ரத்து செய்யப் பட்டுள்ளது.
  - இது "மாதிரி நடத்தை விதிகளை மீண்டும் மீண்டும் மீறியதற்காகவும், அவருக்கு வழங்கப்பட்ட ஆலோசனையை முற்றிலும் புறக்கணித்ததற்காகவும்" ரத்து செய்யப் பட்டுள்ளது.

- ரோலி அல்லது கோனி என்ற ஒரு சூறாவளியானது (டைபூன்) சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கியது.
- பெண்களுக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் முதன்மைப் பங்காளராக ஜியோ நிறுவனம் இருக்கும் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது.
    - இது ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஷார்ஜாவில் நடத்தப் பட இருக்கின்றது.
- மத்திய நிதித் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் ஜிஎஸ்டி வருவாயாக ரூ.1,05,155 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது என்று அறிவித்துள்ளது.
    - கடந்த எட்டு மாதத்தில் வசூலிக்கப் பட்டதில் இதுவே அதிகமாகும்.
- ராஜஸ்தான் மாநில அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக அங்கு பட்டாசுகளின் விற்பனைக்குத் தடை விதித்துள்ளது.
- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது கோவிட் – 19 வைரஸ் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "IITM COVID GAME" என்ற ஒன்றை உருவாக்கியுள்ளது.
- பாகிஸ்தானின் அலீம் தர் என்பவர் மிக அதிக அளவில் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நடுவராகப் பணியாற்றி (210) தென் ஆப்பிரிக்காவின் ரூடி கோர்ட்சென் என்பவரின் சாதனையை முறியடித்துள்ளார்.
- மனுதாரர்களுக்கு விரைவாக நீதி வழங்க வழிவகை செய்யும் வகையில் போக்குவரத்திற்கான இந்தியாவின் முதலாவது மின்னணு வள மையம் மற்றும் மெய்நிகர் மையமான "நியாய் கௌசல்" ஆனது நாக்பூரில் தொடங்கப் பட்டுள்ளது.
- புகழ்பெற்ற வயலின் இசைஞானி மற்றும் பத்ம பூஷண் விருது பெற்ற டி.என்.கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் காலமானார்.
    - இவர் 1973 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ மற்றும் 1992 ஆம் ஆண்டில் பத்ம பூஷண் ஆகிய விருதுகளால் கௌரவிக்கப் பட்டார்.
- நிறுவனங்கள் தங்கள் உள்ளடக்கத்தை மேம்படுத்த உதவும் வகையில், ட்விட்டரானது இந்தியாவில் ஆர்ட்ஹவுஸ் (ArtHouse) எனும் வசதியை அறிமுகப்படுத்துகிறது.
- 'நேபாள ராணுவத்தின் ஜெனரல்' என்ற கௌரவ பதவியைப் பெற இந்திய ராணுவ தலைமைத் தளபதியான எம்.எம்.நரவனே அவர்கள் நேபாளம் செல்ல இருக்கின்றார்.
- சூரிய ஆற்றலால் இயக்கப்படும் முதல் இரயிலானது கேரளாவில் முதல்வர் பினராயி விஜயனால் தொடங்கப் பட்டது.
    - நாட்டில் இவ்வகையிலான முதல் ரயில் இதுவே ஆகும்
- நியூசிலாந்தின் முதல் இந்திய வம்சாவளி அமைச்சராக பிரியங்கா ராதாகிருஷ்ணன் என்பவர் அந்நாட்டின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்னால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஐ.டி.எஃப் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே என்பவர் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் பட்டத்தை வென்றுள்ளார்.
    - இந்தப் போட்டி எகிப்தின் ஷர்ம் எல் ஷேக்கில் நடத்தப் பட்டது.
- தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத் தலைவர் திலீப் ராத் அவர்கள் சர்வதேச பால் பண்ணைக் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவிற்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- "பருவமழைத் திட்டம் மற்றும் உயர் செயல்திறன் கொண்ட கணினி வசதிகளில் முதலீட்டின் பொருளாதார நன்மைகளை மதிப்பிடுதல்" என்ற தலைப்பில் தேசிய பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சிக் குழு தயாரித்த ஒரு அறிக்கையை மத்திய மந்திரி டாக்டர் ஹர்ஷவர்தன் அவர்கள் அண்மையில் வெளியிட்டார்.

- ஐ.சி.ஐ.சி.ஐ லம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனமானது பார்தி ஆக்ஸா ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பொதுக் காப்பீட்டு வணிகத்தை கையகப்படுத்த, இந்தியப் போட்டி ஆணையமானது (Competition Commission of India) ஒப்புதல் அளித்து உள்ளது.
- ஐவரி கோஸ்ட்டின் தற்போதைய அதிபரான அலசேன் ஒட்டாரா மூன்றாவது முறையாக ஒரு மகத்தான வெற்றியை (அடுத்த ஐந்தாண்டு கால அதிபர்) பெற்று உள்ளார்.
- மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு சிபிஐக்கு வழங்கப்பட்ட பொது ஒப்புதலைத் திரும்பப் பெற்ற 5வது மாநிலம் கேரளா ஆகும்.
- அதானி எரிவாயு நிறுவனமானது லூதியானா, ஜலந்தர் மற்றும் கட்ச் (கிழக்கு) ஆகிய 3 புவியியல் பகுதிகளில் நகர எரிவாயுப் பகிர்ந்தளிப்பு அமைப்பை கையகப் படுத்தியுள்ளது.
- ஐரோப்பாவில் உள்ள ரோமாவானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 05 அன்று சர்வதேச ரோமானிய மொழி தினத்தை அனுசரிக்கின்றது.
  - யுனெஸ்கோ அமைப்பானது ரோமானிய மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்து ஊக்குவிப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் இத்தினத்தைப் பிரகடனப் படுத்தியது.
- ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தரவுதளத்தின்படி, உலகில் உள்ள முதல் 2% விஞ்ஞானிகளில் குறைந்தது 100 விஞ்ஞானிகளை தமிழ்நாடானது கொண்டுள்ளது.
  - இதில் மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் முன்னணியில் உள்ளது.
- அமெரிக்காவானது 2015 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்திலிருந்து அதிகாரப் பூர்வமாக வெளியேறி இருக்கின்றது.
- நமாமி கங்கைத் திட்டத்திற்கான விளம்பரத் தூதராக சச்சா சௌத்ரி என்பவர் உருவெடுத்துள்ளார்.
- அசாமில் உள்ள ருப்சி விமான நிலையமானது பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
  - இது அசாமின் 7வது விமான நிலையம் மற்றும் வடகிழக்கின் 14வது விமான நிலையம் ஆகும்.
- புதுதில்லியின் ராஜ்காட்டில் உள்ள காந்தி தர்ஷனில் நிறுவப் பட்டுள்ள ஒரு வட்ட குவி மாடத்தில் மகாத்மா காந்தி குறித்த 360 டிகிரி வீடியோ அனுபவம் மற்றும் டிஜிட்டல் கண்காட்சியானது சமீபத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- வங்க தேசமானது திருநர் முஸ்லீம்களுக்காக என்று மதகுருக்களுடன் கூடிய தனது முதலாவது இஸ்லாமியப் பள்ளியைத் திறந்துள்ளது.
- நொய்டா பெருநகர மெட்ரோவின் 50வது பிரிவு நிலையமானது திருநர் சமூகத்திற்கு என்று அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
  - இது தற்பொழுது "வானவில் நிலையம்" என்றும் "பெருமை நிலையம்" என்றும் அழைக்கப் படும்.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது "துரிதச் சீட்டுகள்/பாஸ்ட் டேக்குகள்" (FASTAG) குறித்த ஒரு அறிவிக்கையை வெளியிட்டு உள்ளது.
  - இந்த அறிக்கையானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியிலிருந்து நான்கு சக்கர வாகனங்களுக்கு "பாஸ்டேக்குகளை" கட்டாயமாக்குகின்றது.
- எடா என்ற ஒரு சூறாவளியானது கௌதிமாலாவில் கரையைக் கடந்தது.

- இது ஒரு மத்திய அமெரிக்க நாடாகும்.

❖ இந்தியத் தூதரான விதிஷா மைத்ரா என்பவர் நிர்வாகம் மற்றும் நிதிநிலைக் கேள்விகள் குறித்த ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக் குழுவிற்கு (Advisory Committee on Administrative and Budgetary Questions - ACABQ) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- ACABQ ஆனது ஐக்கிய நாடுகளின் கீழ் உள்ள ஒரு துணை அமைப்பாகும்.

❖ மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சரான கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் நாட்டில் சூரிய ஒளியை அடிப்படையாகக் கொண்ட முதலாவது பல்முனை-கிராமக் குடிநீர் விநியோகத் திட்டத்தை அருணாச்சலப் பிரதேசத்தில் தொடங்கி வைத்துள்ளார்.

❖ ஜப்பான் ஆனது டோக்கியோவில் நடைபெற்ற ரிகோஷி நோ ரேய் என்ற ஒரு நிகழ்ச்சியில் புமிஹிட்டோ கிரீடம் சூடியுள்ள பட்டத்து இளவரசர் அகிஷினோவை சிம்மாசனத்திற்கு உரிய வாரிசாக அறிவித்துள்ளது.

- இவருடைய மூத்த சகோதரரான பேரரசர் நாருஹிட்டோ கடந்த ஆண்டு மன்னராக அறிவிக்கப் பட்டார்.

❖ சூடான் நாடானது தீவிரவாதத்திற்கு ஆதரவளிப்போர் நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டுள்ளது.

- இது அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட ஒரு பட்டியலாகும்.

❖ யூடியூப் அலைவரிசையில் நீதிமன்றச் செயல்பாடுகளை நேரலையில் ஒளிபரப்பிய முதலாவது உயர்நீதிமன்றம் குஜராத் உயர்நீதிமன்றம் ஆகும்.

❖ நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் தலைமையிலான தேசிய பசுமைத் தீர்ப்பாயமானது தேசிய தலைநகரப் பிராந்தியத்திலும், காற்றின் தரம் குறைவாக உள்ள பிற நகரங்களிலும் பட்டாசுகளை விற்பனை செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் தடை விதித்துள்ளது.

❖ தனது மாநிலத்தில் உள்ள வழக்குகளை விசாரிக்க மத்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு (சிபிஐ) வழங்கப் பட்டிருந்த பொது ஒப்புதலை பஞ்சாப் மாநில அரசு திரும்பப் பெற்று உள்ளது.

❖ அஸ்ஸாமின் குவஹாத்தியில் இந்திய-ஆஸ்திரேலிய நீர் மையமானது திறக்கப் பட்டு உள்ளது.

❖ அமெரிக்க அதிபரான ஜே பிடன் அவர்கள் டாக்டர் விவேக் மூர்த்தி என்பவரை கோவிட் -19 பணிக் குழுவிற்குத் தலைவராக நியமித்துள்ளார்.

- டாக்டர் விவேக் மூர்த்தி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு நபராவார்.

❖ இந்தியாவானது பிரிக்ஸ் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் முதலாவது சந்திப்பில் கலந்து கொண்டது.

- இந்தச் சந்திப்பில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

❖ இந்தியாவின் மிக நீளமான ஒற்றைவழி இயக்கத் தொங்கு பாலம் உத்தரகாண்ட்டின் டெஹ்ரி-கார்வால் மாவட்டத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

- டெஹ்ரி ஏரியின் மீது கட்டப் பட்டுள்ள இந்தப் பாலமானது 725 மீட்டர் நீளம் உடையது.

❖ அசாமின் தேஸ்பூர் லிட்சிக்கு புவிசார் குறியீடானது வழங்கப் பட்டுள்ளது.

❖ உலகக் கருணை தினமானது நவம்பர் 13 அன்று அனுசரிக்கப் படுகின்றது.

❖ இந்திய அரசின் மின்சாரத் துறை அமைச்சகமானது ஓர் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

- அதன்படி அனைத்து மின்சார விநியோக நிறுவனங்களையும் எரிசக்தி பாதுகாப்புச் சட்டம், 2001 என்ற சட்டத்தின் படி இணங்க அது வலியுறுத்துகிறது.

❖ நோகோர்னோ-காராபாக் பிராந்தியத்தில் நடந்து வரும் மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஆர்மீனியாவும் அஜர்பைஜானும் ஒரு சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளன.

- இந்த நாடுகளுக்கு இடையிலான சமாதான ஒப்பந்தத்திற்கு இரஷ்யா நடுவண் முறை செய்தது.

❖ எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட் அவர்கள் 'ஹொவ் டு பீ அ ரைட்டர்' (How To Be A Writer) என்ற ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

❖ ஜோ பிடனின் கோவிட்-19 பணிக் குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டாக்டர் செலின் கவுண்டர் என்பவர் இடம் பெற்றுள்ளார்.

- இவரது தந்தை ஈரோட்டிற்கு அருகிலுள்ள மொடக்குறிச்சியின் அருகேயுள்ள பெருமாள்பாளையம் என்ற ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

❖ இந்திய இராணுவமானது பயிற்சியளிக்கப்பட்ட இருபது குதிரைகள் மற்றும் கண்ணி வெடிகளைக் கண்டறியும் நாய்களை வங்கதேச இராணுவத்திற்குப் பரிசளித்துள்ளது.

❖ இணைய வழிச் செய்திகள், திரைப்படங்கள், காணொளி நிகழ்ச்சிகள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்க வழங்குநர்களான நெட்ஃபிளிக்ஸ் ஆகியவற்றை மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் கீழ் கொண்டு வரும் ஒரு உத்தரவை மத்திய அரசானது பிறப்பித்து உள்ளது.

- இதுவரை டிஜிட்டல் உள்ளடக்கத்தை நிர்வகிக்க தன்னாட்சி அமைப்பு எதுவும் இந்தியாவில் இல்லை.

❖ 'இந்தியா-பிரேசில்-தென்னாப்பிரிக்கா ஆகியவற்றில் ஒத்துழைப்பினை ஆழமடையச் செய்தல்: முக்கிய துறைகளின் மீதான பார்வைகள்' குறித்த இந்தியா-பிரேசில்-தென்னாப்பிரிக்கா என்ற ஒரு அறிக்கையை இந்திய வெளியுறவு விவகார அமைச்சகமானது வெளியிட்டுள்ளது.

❖ அபுதாபி அரசின் சொத்து நிதியானது (Sovereign wealth fund) இந்தியாவில் முழு வருமான வரி விலக்கைப் பெறும் முதலாவது நிதியாகும் என்று அரசாங்கம் அறிவித்து உள்ளது.

❖ இரண்டாவது உலக சுகாதாரக் கண்காட்சியானது சீனாவின் வூஹானில் நடத்தப் பட்டது.

❖ பெங்களூரிவில் உள்ள நானோ மற்றும் சாஃப்ட் மேட்டர் சயின்சஸ் என்ற மையத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சியாளர்கள் குழுவானது சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு அளிக்காத வகையில் நிலக்கடலை ஓடுகளிலிருந்து ஒரு திறன் திரையை (smart screen) உருவாக்கியுள்ளது.

❖ புதுச்சேரி அரசானது தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் பள்ளி மாணவர்களுக்கு இலவச காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

❖ உலக சுகாதார அமைப்பானது இந்தியாவில் ஒரு பாரம்பரிய மருத்துவ மையத்தை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

❖ இந்தியாவில் முதன்முறையாக, மும்பை மெட்ரோ இரயிலானது அதிர்வுகளை தாங்கும் தடங்களை அமைக்கவுள்ளது.

- இது 22 அதிர்வு டெசிபில்கள் வரை அதிர்வுகளைத் தாங்கும் திறன் கொண்டது.

❖ இந்தியாவின் முதலாவது சந்தன அருங்காட்சியகம் கர்நாடகாவின் மைசூருவில் அமைக்கப் பட்டு வருகின்றது.

❖ பாலிவுட் நடிகரான சோனு சூட் அவர்கள் "நான் ஒரு மேசியா அல்ல" என்ற தனது சுயசரிதையை வெளியிட உள்ளார்.

- குருகிராமில் அதிகரித்து வரும் காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக ஹரியானா மாநில முதல்வரான மனோகர் லால் கட்டார் "காற்று நலத் திட்டம்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளார்.
- அமெரிக்காவின் முன்னாள் அதிபரான பாரக் ஒபாமா அவர்களால் எழுதப்பட்ட "வாக்குறுதியளிக்கப்பட்ட ஒரு நிலம்" என்ற புத்தகமானது வெளியிடப்பட உள்ளது.
- இந்தியாவில் தேசிய கை-கால் வலிப்பு தினமானது நவம்பர் 17 அன்று கொண்டாடப் படுகின்றது.
    - கை-கால் வலிப்பு என்பது நாள்பட்ட அளவில் மூளையில் ஏற்படும் ஒரு பிரச்சினை ஆகும்.
- ஒவ்வோர் ஆண்டும் தேசிய இதழியல் நாளானது இந்தியாவில் நவம்பர் 17 அன்று கொண்டாடப் படுகிறது.
- அயோத்தியின் 'தீப உத்சவம்' கொண்டாட்டங்கள் கின்னஸ் உலக சாதனைகளில் இடம் பெற்றுள்ளன.
    - சரயு ஆற்றின் கரையில் சுமார் 5,84,572 மண் விளக்குகள் ஏற்றப் பட்டன.
- பெங்காலி மொழி சினிமா நட்சத்திரமும், தாதா சாஹேப் பால்கே விருது வென்றவருமான சௌமித்ரா சாட்டர்ஜி அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- எழுத்தாளர் ரச்னா பிஷ்ட் ராவத் அவர்கள் சமீபத்தில் தனது 'தூக்கமின்மை: இராணுவக் கதைகள்' (Insomnia: Army Stories) என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- ஒருங்கிணைந்த ஜனதா தளக் கட்சியின் தலைவரான நிதிஷ் குமார் அவர்கள் பீகார் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து பீகார் மாநிலத்தின் முதல்வராக ஏழாவது முறையாகவும் தொடர்ந்து நான்காவது முறையாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.
    - இந்த மாநிலமானது தர்கிஷோர் பிரசாத் மற்றும் ரேணு தேவி ஆகிய 2 புதிய துணை முதல்வர்களைக் கொண்டிருக்கும்.
- ஆசியாவின் முதலாவது சூரிய ஆற்றல் கொண்டு இயங்கக் கூடிய ஜவுளி உற்பத்தி ஆலையானது மகாராஷ்டிராவின் பர்பானி மாவட்டத்தில் வர உள்ளது.
- உலக வங்கியும் முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறையும் இணைந்து (Department of Investment and Public Asset Management) ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளன.
    - இந்த ஒப்பந்தத்தின் கீழ், உலக வங்கியானது சொத்தைப் பணமாக்குதல் (asset monetisation) குறித்து முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறைக்கு ஆலோசனை வழங்க உள்ளது.
- தென் சீனக் கடலிலும் பசிபிக் தீவு நாடுகளிலும் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கை எதிர்கொள்ள வேண்டி ஜப்பானும் ஆஸ்திரேலியாவும் ஒரு "பரஸ்பர அணுகல் ஒப்பந்தத்தில்" (Reciprocal Access Agreement) கையெழுத்திட உள்ளன.
    - 1960 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜப்பானின் இறையாண்மையில் வெளிநாட்டு இராணுவ இருப்பை அனுமதிக்கும் முதல் ஒப்பந்தம் இதுவாகும்.
- பெருவின் அதிபர் மானுவல் மெரினோ அந்நாட்டின் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப் பட்டு உள்ளார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான ஆசியான் அமைப்பிற்குத் தலைமை தாங்கும் வியட்நாம் 37வது ஆசிய உச்சி மாநாட்டை இணைய வழியில் நடத்தியது.
- லாரசன் மற்றும் டூப்ரோ நிறுவனமானது ஆனது ககன்யான் திட்டத்தின் முதலாவது வன்பொருளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

- ஐயோட்டா என்ற ஒரு சூறாவளியானது (ஹரிக்கேன்) மத்திய அமெரிக்காவில் உள்ள நிகரகுவாவில் கரையைக் கடந்தது.
- இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது கடந்த 16 ஆண்டுகளில் முதன்முறையாக 2021 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் நாட்டிற்குத் தனது முதலாவது பயணத்தை மேற்கொள்ள இருக்கின்றது.
- வன உரிமைகள் சட்டம், 2006 என்ற சட்டமானது ஜம்மு காஷ்மீரில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
    - இந்தச் சட்டமானது அந்த ஒன்றியப் பிரதேசத்தில் முதன்முறையாக வனப் பொருட்கள் சேகரிப்போர் சமூகத்தின் உரிமைகளை அங்கீகரிக்கின்றது.
- அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையமானது "சப்பேர்" எனப்படும் ஒரு கொடிய வைரஸ் தற்பொழுது மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுவதை உறுதி செய்துள்ளது.
    - தற்பொழுது பொலிவியா ஆனது இந்த வைரஸ் பரவுதலை எதிர்கொண்டு வருகின்றது.
- அமெரிக்க அரசானது ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைகள் குறைக்கப் படும் என்று அறிவித்துள்ளது.
- சர்வதேச மோசடி விழிப்புணர்வு வாரமானது நவம்பர் மாதத்தின் 15 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை அனுசரிக்கப் படுகின்றது.
- நவம்பர் 19 ஆம் தேதியானது உலகக் குடிமக்கள் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- மால்டோவா நாடானது அந்நாட்டின் முன்னாள் பிரதமரான மையா சாண்டு என்பவரைத் தனது முதலாவது பெண் அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- தற்பொழுது கென்யாவில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும் உலகின் ஒரேயொரு வெள்ளை ஒட்டகச் சிவிங்கிக்கு ஒரு புவியியல் இடங்காட்டி கருவி (GPS tracking device) பொருத்தப் பட்டுள்ளது.
    - "லியூசிசம்" (Leucism) எனப்படும் ஒரு அரிய மரபணு நிலையே இந்த ஒட்டகச் சிவிங்கியின் இந்த வெள்ளை நிறத்திற்குக் காரணமாகும்.
- சோனு சூட் இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் பஞ்சாப் மாநிலத் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மூத்த பத்திரிக்கையாளர் மற்றும் செய்தி நிறுவனமான ஏஎன்ஐ என்ற அமைப்பின் தலைவரான பிரேம் பிரகாஷ் அவர்கள் "இந்தியாவைப் பற்றிக் கூறுதல்" என்ற தனது புதிய ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- சர்வதேச கிரிக்கெட் மன்றமானது பெண்களுக்கான 20:20 ஓவர் உலகக் கோப்பைப் போட்டி 2022 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டிற்கு மாற்றப்படுவதாகவும் அது தென் ஆப்பிரிக்காவில் நடத்தப்பட இருப்பதாகவும் அறிவித்துள்ளது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் "குடியரசு நெறிமுறையின் மூன்றாம் பாகம்" மற்றும் "லோக்தந்த்ரா கே ஸ்வர்" என்ற இரு புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.
    - இது குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்த் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகளின் ஒரு தொகுப்பாகும்.
- நிலை 4+ என்ற கரிம அங்கீகாரத்தைப் பெற்றதில் ஆசிய-பசிபிக் பகுதியில் உள்ள முதலாவது விமான நிலையம் தில்லி விமான நிலையமாகும்.
- மத்திய வர்த்தகத் துறை அமைச்சரான பியூஷ் கோயல் அவர்கள் 2020 ஆம் ஆண்டின் ஆசிய சுகாதார மாநாட்டில் உரையாற்றினார்.

- இந்த மாநாடு இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பினால் ஒருங்கிணைக்கப் பட்டது.

❖ முதன்முறையாக இந்திய இராணுவமானது தனது டி-72 மற்றும் டி-90 என்ற பிரதான போர் பீரங்கி வகைகளுக்கான சிறப்புமிகு வெடிபொருட்களின் மேம்பாடு மற்றும் விநியோகத்திற்காக வேண்டி ஒசோகார்ப் குளோபல் (OshoCorp) என்ற நிறுவனத்திற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

- தனியார் நிறுவனத்துடன் இந்திய இராணுவம் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

❖ ஆல்டோ பார்ட்னர்ஸின் நிறுவன உறுப்பினர் மற்றும் அக்கார்டு இந்தியாவின் நிறுவனத் தலைவரான டாக்டர் பிஷ் அகர்வால் என்பவருக்கு 2020 ஆம் ஆண்டின் ஏஇஎஸ்சி வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- ஓர் ஆசியருக்கு அதிலும் ஓர் இந்தியருக்கு இந்த விருது வழங்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

❖ ஆடம் யாவ் லியூ என்பவர் இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் 2020 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் பொருளாதார ஆராய்ச்சி என்ற விருதின் வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

❖ மத்தியப் பிரதேசத்தின் முதல்வரான சிவராஜ் சிங் சௌகான் அவர்கள் 2023 ஆம் ஆண்டில் தற்சார்பு மத்தியப் பிரதேசத்தை அடைவதற்கான ஒரு செயல் திட்டத்தை வெளியிட்டு உள்ளார்.

- பிரதமர் நரேந்திர மோடியின் ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் உத்தி மீதான தற்சார்பிற்காக ஒரு செயல்திட்டத்தை வெளியிட்ட முதலாவது மாநிலம் மத்தியப் பிரதேசம் ஆகும்.

❖ இந்தியாவின் முதலாவது பாசித் தோட்டமானது உத்தரகாண்ட்டின் நைனிடாலில் உருவாக்கப் பட்டுள்ளது.

- இந்த தோட்டமானது பாசிகள் மற்றும் இதர பிரையோபைட்டுகளின் பல்வேறு இனங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ ஒரு துடிப்பான கழிவுநீர் மேலாண்மைக்காக வேண்டி (Faecal Sludge & Septage Management - FSSM) ஐஎஸ்ஓ - 9001: 2015 என்ற ஒரு சான்றிதழைப் பெற்ற முதல் நகரமாக ஒடிசாவின் புவனேஸ்வர் திகழ்கிறது.

❖ ஒடிசாவின் மகாநதி ஆற்று வடிநிலத்தில், ஆயில் இந்தியா நிறுவனத்தின் நில அதிர்வு மீதான ஒரு ஆய்வுத் திட்டத்தை பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் எஃகு அமைச்சகம் தொடங்கியுள்ளது.

❖ இந்தியா-ஜப்பான் பரஸ்பர ஒப்பந்தமானது (Mutual Agreement Procedure) பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பின் 'பரஸ்பர ஒப்பந்தம் 2019' என்ற ஒரு விருதை வென்றுள்ளது.

❖ பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பூடான் பிரதமர் லோட்டேய் ஷெரிங் ஆகியோர் இந்தியாவில் ரூபே பண வழங்கீட்டு அமைப்புகளை அணுகுவதற்கு பூடான் குடிமக்களை அனுமதிக்கும் வகையில் ரூபே அட்டையின் இரண்டாவது நிலையைக் கூட்டாகத் தொடங்கியுள்ளனர்.

- இதன் முதலாவது நிலையானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப் பட்டது.

❖ தனது நகர மேலாண்மைத் திட்டத்தில் பெண்களுக்காக என்று தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டமைப்புகளுடன் செயல்பட இருக்கும் முதலாவது இந்திய நகரம் மும்பை ஆகும்.

❖ அடுத்து வரவிருக்கும் புயலின் நிலையை மதிப்பீடு செய்வதற்கான தேசிய நெருக்கடி கால மேலாண்மைக் குழுவின் (National Crisis Management Committee) ஒரு கூட்டத்திற்கு

மத்திய அமைச்சரவைச் செயலாளர் ராஜீவ் கௌபா அவர்கள் தலைமை தாங்கினார்.

- ❖ மடகாஸ்கருடனான உறவை வலுப்படுத்த மடகாஸ்கரின் தலைநகரான அன்டனனரிவோவில் பாபட்ரான் (Bhabhatron) என்ற ஒரு கதிரியக்க சிகிச்சை இயந்திரத்தை இந்தியா அமைத்துள்ளது.
- ❖ இணையவழியில் நடைபெற்ற ஜி 20 நாடுகளின் உச்சி மாநாட்டில் கொரோனாவுக்குப் பிந்தைய உலகத்திற்கான "ஒரு புதிய உலகளாவியக் குறியீட்டிற்கு" இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
- ❖ இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் மாடுகளுக்கான முதல் மருத்துவமனை அசாமின் திப்ருகரில் திறக்கப் பட்டுள்ளது.
- ❖ அசாம் மாநிலத்தின் முன்னாள் மற்றும் நீண்ட காலம் முதலமைச்சராக இருந்தவரான தருண் கோகோய் (87) காலமானார்.
  - ○ இவர் இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாக 2001 முதல் 2016 வரை மூன்று முறை அம்மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றி உள்ளார்.
- ❖ இந்தியாவின் வணிகப் பற்றாக்குறை கடுமையாகக் குறைந்துள்ளதால், ஏப்ரல்-ஜூன் மாதங்களில் நடப்புக் கணக்கு உபரியானது 19.8 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- ❖ விர்ஜின் ஹைப்பர்லூப் தொழில்நுட்பத்தின் தொழில்நுட்ப மற்றும் வணிக நம்பகத் தன்மையை ஆராய நிதி ஆயோக்கானது ஒரு குழுவை அமைத்துள்ளது.
  - ○ இந்தக் குழு நிதி ஆயோக்கின் உறுப்பினர் வி.கே.சரஸ்வத் அவர்களைத் தலைவராக கொண்டு இருக்கும்.
- ❖ நாட்டில் முதல் முறையாக வில்லோ வார்ப்ளர் (Willow Warbler) என்ற ஒரு பறவையானது சமீபத்தில் கேரளாவின் புஞ்சகரி என்ற பகுதியில் காணப் பட்டது.
  - ○ வடக்கு மற்றும் மிதவெப்பமண்டல ஐரோப்பா முழுவதும் வாழக்கூடிய மற்றும் நீண்ட தூரம் வலசை செல்லக் கூடிய சிறிய பறவை வகைகளுள் இதுவும் ஒன்றாகும்.
- ❖ மலையாள திரைப்படமான ஜல்லிக்கட்டானது வெளிநாட்டு மொழி என்ற திரைப்பட பிரிவில் ஆஸ்கார் விருதிற்குப் போட்டியிட இந்தியாவினால் அதிகாரப்பூர்வமாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- ❖ நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த கிரேக் பார்க்லே என்பவர் சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
  - ○ இவர் இந்தியாவின் சஷாங்க் மனோகர் என்பவருக்கு மாற்றாக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- ❖ உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது அம்மாநிலத்தில் கட்டாய மத மாற்றத்திற்கு எதிரான ஒரு அவசரச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
  - ○ மேலும் இது மதமாற்றத்திற்காக நடத்தப்படும் திருமணங்களை செல்லாதவை என்று அறிவிக்க உள்ளது.
- ❖ ஜெர்மனியானது அந்நாட்டில் உள்ள பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் உள்ள உயரிய மேலாண்மைப் பதவிகளில் பணியாற்றும் பெண்களுக்காக கட்டாய இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளது.
- ❖ சர்வதேசக் கணினிப் பாதுகாப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
  - ○ இது தகவல் பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகளை ஊக்கப்படுத்துவதற்காகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கற்போம் எழுதுவோம் இயக்கம்

- பள்ளிக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் "கற்போம் எழுதுவோம் இயக்கம்" எனப்படும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.
- இது 15 வயதிற்கு மேற்பட்டக் கல்வியறிவுயற்ற நபர்களுக்கு அடிப்படைக் கல்வியறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மாநிலப் பள்ளி அல்லாத மற்றும் பதின்மக் கல்வி இயக்குநரகத்தால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது முழுவதும் தன்னார்வலர்களினால் நவம்பர் மாதத்திலிருந்துச் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 15 வயதிற்கும் மேற்பட்ட 1.24 கோடி மக்கள் தமிழ்நாட்டில் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர்.

## யாதும் ஊரே கருத்தரங்கு

- தமிழக முதல்வரான எடப்பாடி பழனிச்சாமி 29.10.2020 அன்று யாதும் ஊரே கருத்தரங்கு எனப் பெயரிடப்பட்ட 3 நாட்கள் நடைபெறும் காணொலி வாயிலான ஒரு கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.
- இந்தக் கருத்தரங்கில் 38 நாடுகளைச் சேர்ந்த 10,000 தொழில்முனைவோர்கள் கலந்து கொள்கின்றனர்.
- தமிழக முதல்வர் அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் "யாதும் ஊரே" எனும் திட்டத்தை அறிமுகப் படுத்தினார்.

## மதுரை எய்ம்ஸ்

- தற்போது ஜிப்மர் மருத்துவ மனையின் தலைவராக இருக்கும் முன்னாள் ஐ.சி.எம்.ஆர் இயக்குனர் வி.எம்.கடோச் அவர்கள், மதுரை தோப்பூரில் வரவிருக்கும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் (எய்ம்ஸ்) தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்திய சுகாதார அமைச்சகமானது டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனையும் அதன் உறுப்பினராக நியமித்துள்ளது.
- புற்றுநோயியல் மருத்துவ நிபுணர் மற்றும் அகில் பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் தலைவர் சண்முகம் சுப்பையா அவர்கள் அதன் ஒரு உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மக்களவையில் இருந்து இரண்டு பேரும், மாநிலங்களவையில் இருந்து ஒருவரும் இக்குழுவின் இதர மூன்று உறுப்பினர்களாக இருப்பர்.

## பெரம்பலூரில் புதைபடிவங்கள்

- குன்னத்தில் (பெரம்பலூர்) 25க்கும் மேற்பட்ட கூட்டுப் பொருட்கள் (அம்மோனியம் படிவுகள்) காணப்பட்டன.
- உத்தத்தூர் உருளைக்கிழங்கு என்று அழைக்கப் படும் வட்ட வடிவ பாஸ்பேடிக் திரள்களும் குன்னம் மற்றும் காரை பகுதிகளில் கிடைத்தன.

- இப்பகுதியில் உள்ள ஆனைவரி என்ற நீரோட்டத்தில் ஒரு புதைபடிவ மரம் (fossilised tree) மற்றும் அம்மோனைட் படிவுகள் காணப்பட்டன.
- அம்மோனைட் (அம்மோனாய்டுகள்) என்பவை ஒரு பெரிய மற்றும் மாறுபட்ட கடல்வாழ் இனமாகும்.
- இது சுமார் 416 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டெவோனியன் காலத்தில் தோன்றியது.
- அம்மோனாய்டுகள் மூன்று பேரழிவுகளிலிருந்து தப்பியுள்ளன.
- அதில், பெர்மியன் அழிவு என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
- இது சுமார் 252 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எரிமலைச் செயல்பாட்டினால் ஏற்பட்ட ஒரு புவி வெப்பமடைதல் நிகழ்வு ஆகும்.
- இது பூமியின் கடல் உயிரினங்களில் 96 சதவீதத்தை அழித்தது.
- சில ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாட்டின் அரியலூர் பகுதியில் 6.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர்கள் வாழ்ந்ததாக தொல்பொருள் சான்றுகள் தெரிவிக்கின்றன.
- ஆனால் அதற்கான முட்டைகளின் எச்சங்கள் அரிதாகவே காணப்படுகின்றன.
- தற்போதைய தமிழ்நாட்டில் இருக்கும் முந்தைய காலத்திய அரியலூர் மற்றும் பெரம்பலூர் பகுதிகள் கடலில் மூழ்கியிருந்தன.
- சுமார் ஒன்பது பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு துரோனியன் - செனோமானியன் கிரெட்டேசியஸ் காலத்தில் (Turonian-Cenomanian Cretaceous period) கடலின் ஆழம் சுமார் 100 மீட்டர் என்ற அளவில் இருந்த போது குன்னத்தில் இருக்கும் இந்தப் புதைபடிவங்கள் உருவாகியிருக்கலாம்.

## தமிழ்நாட்டின் புதிய வேளாண் துறை அமைச்சர்

- தமிழ்நாட்டின் ஆளுநரான பன்வாரிலால் புரோகித் அவர்கள் உயர்கல்வித் துறை அமைச்சரான K.P. அன்பழகனுக்கு வேளாண் துறையை ஒதுக்கியுள்ளார்.
- அன்பழகன் அவர்கள் உயர் கல்வி மற்றும் வேளாண் துறை அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றுள்ளார்.
- இதற்கு முன்பு, முன்னாள் வேளாண் துறை அமைச்சராக இருந்த R. துரைக்கண்ணு, தனது 72வது வயதில் காலமானார்.
- கோவிட்-19 நோய்த் தொற்றினால் மரணமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்றாவது மக்கள்மன்ற உறுப்பினர் துரைக்கண்ணு ஆவார்.
- கன்னியாகுமரி மக்களவை உறுப்பினரான H. வசந்த் குமார் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர் J. அன்பழகன் ஆகியோர் இதர மற்ற 2 உறுப்பினர்களாவர்.

## தமிழ்நாடு குறித்த கல்வி நிலை அறிக்கை

- 15 ஆவது 'வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை 2020' என்ற அறிக்கையானது சமீபத்தில் பிரதாம் கல்வி அறக்கட்டளையால் வெளியிடப் பட்டது.
- பிரதாம் அறக்கட்டளையானது நாட்டின் மிகப் பெரிய அரசு சாரா நிறுவனங்களில் ஒன்றாகும். இது விளிம்புநிலையில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காகச் செயல்படுகிறது.
- கோவிட்-19 தொற்றுக் காலத்தில் பள்ளிக் கல்வியின் பல்வேறு அம்சங்களையும் அதன் தாக்கத்தையும் கவனிப்பதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பள்ளிச் சேர்க்கை முறைகள், கிடைக்கக் கூடிய வீட்டு வளங்கள், கற்றலுக்கான வீட்டு ஆதரவு மற்றும் கற்றல் பொருள்களுக்கான அணுகல் ஆகியவை இதில் அடங்கும்.
- சமீபத்திய கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அரசு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களில் கிட்டத்தட்ட 93.7% மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் கிடைத்து இருக்கின்றன. அதே நேரத்தில் 68.1% தனியார் பள்ளி மாணவர்களிடம் மட்டுமே பாடப் புத்தகங்களைக் கொண்டு உள்ளனர்.
- கணக்கெடுக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளிலும், தமிழ்நாட்டில் 64.6% பேர் மட்டுமே திறன்பேசிகள் மூலம் கற்றலுக்கான இணைய வழி அணுகலைக் கொண்டு இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

### *பிற தரவுகள்*

- பள்ளிப் படிப்பு இடைநிற்றல் வீதம் அதிகரித்ததில் மேற்கு வங்கம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- அம்மாநிலத்தின் 99.7 சதவீத மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்கிய அடிப்படையிலும் மேற்கு வங்கம் மாநிலமானது நாட்டில் முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.

## மின்சார வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரி விலக்கு

- மின்சார வாகனங்களுக்கு 100% அளவிற்கு மோட்டார் வாகன வரியில் இருந்து விலக்கு அளிப்பதாக தமிழக மாநில அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இம்மாநிலத்தில் மின்சார வாகனப் பூங்காவை நிறுவவும் தமிழ்நாடு அரசு முன்மொழிந்துள்ளது.
- இது நாட்டின் இம்மாதிரியான பூங்காவில் முதலாவதாகும்.
- 2019 ஆம் ஆண்டில், தமிழக அரசு மின்சார வாகனக் கொள்கையை அறிவித்தது.
- தில்லி அரசு, ஆகஸ்ட் 2020 ஆம் ஆண்டில், மின்சார வாகனக் கொள்கை 2020' என்ற கொள்கையை வெளியிட்டது.

## நடமாடும் அம்மா உணவகங்கள்

- வண்டிகளில் நடமாடும் அம்மா உணவகங்களை தமிழ்நாடு முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.
- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்குச் செல்லும் இது கட்டுமானத் தளங்கள் மற்றும் இதர இடங்களில் பணிபுரியும் தினக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும்.



## இந்தியாவில் உரக் கட்டமைப்பு பொன் விழா ஆண்டு விருது – 2020

- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போராசிரியரான டாக்டர் கே எஸ் சுப்பிரமணியன் இந்த விருதிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- நானோ உரங்கள் துறை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதன் மேம்படுத்தப்பட்ட பயன்பாட்டின் பங்களிப்பு ஆகிவற்றிற்கு இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக இவர் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- 2010 ஆம் ஆண்டில் நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிறுவனத் தலைவர் சுப்பிரமணியன் ஆவார்.

## தீ (Thee) செயலி

- இந்தச் செயலியை தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை சேவைகளைப் பெறுவதற்காக பொது மக்களின் பயன்பாட்டிற்காக வேண்டி உருவாக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## குழந்தை நல விடுப்பு

- மத்தியப் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையானது அரசின் ஆண் ஊழியர்களுக்கும் குழந்தை நல விடுப்பு வழங்கப் படும் என்று அறிவித்துள்ளது.
- ஆனால், இது "ஒரே ஆண் பெற்றோராக" இருக்கும் ஆண் பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட உள்ளது.
- இது மனைவியை இழந்தோர், விவாகரத்து பெற்றோர் அல்லது திருமணமாகாதவர்கள் ஆகியோருக்கு இது பொருந்தும்.

## குரு தேஜ் பகதூரின் 400வது பிறந்த தினம்

- மத்திய அரசானது குரு தேஜ் பகதூரின் 400வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஓர் உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தி உள்ளது.
- சீக்கிய மதத்தின் 10 குருக்களில் 9வது குரு இவராவார்.
- இவர் 1621 ஆம் ஆண்டில் அமிர்தசரஸில் பிறந்தார். இவர் 6வது குருவான குரு ஹர்கோபிந்தின் இளைய மகன் ஆவார்.
- இவர் தில்லியில் முகலாய அரசர் ஔரங்கசீப்பின் ஆணையின் பேரில் 1675 ஆம் ஆண்டில் பொது வெளியில் கொல்லப் பட்டார்.

## பொதி கட்டுதலுக்கான கட்டாய விதிமுறைகள்

- சணல் பொருட்களில் கட்டாய பொதி கட்டுதலுக்கான விதிமுறைகளை நீட்டிக்க பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்து உள்ளது.

- இம்முடிவின் படி, 100 சதவீத உணவு தானிய மூட்டைகள் மற்றும் 20 சதவீத சர்க்கரை மூட்டைகள் ஆகியவற்றைப் பொதி கட்ட வேண்டி பன்முகப்படுத்தப்பட்ட சணல் பைகள் கட்டாயமாக பயன்படுத்தப்பட வேண்டும் .

## ஆரம்பக் 2020

- இந்தியப் பிரதமர் அவர்கள் குஜராத்தின் கெவாடியாவிலிருந்து முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகப் பயிற்சி மையத்தில் (Lal Bahadur Shastri National Academy of Administration - LBSNAA) பயிற்சி பெற்று வரும் குடிமைப் பணி அதிகாரிகளிடையே காணொலி வாயிலாக உரையாற்றினார்.
- இது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட "ஆரம்பக்" என்ற ஒருங்கிணைந்த அடிப்படைப் படிப்பின் ஒரு பகுதியாகும்.
- "ஆரம்பக்" என்பது குடிமைப் பணி அதிகாரிகளின் பணித் தொடக்க காலத்தில் துறைகள் மற்றும் அரசுச் சேவைகள் குறித்த பிம்பங்களை (அச்சங்களை) குறைக்கும் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் அகில இந்தியப் பணி, குரூப்-A மத்தியப் பணி மற்றும் அயல்நாட்டுப் பணி அதிகாரிகளை ஒரு பொது அடிப்படைப் பயிற்சிக்காக ஒன்றிணைக்கும் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த ஆண்டு, ஆரம்பக் – 2020 என்ற நிகழ்வின் 2வது பதிப்பானது அக்டோபர் 14 ஆம் தேதியிலிருந்து 31 ஆம் தேதி வரை LBSNAA நிலையத்தில் நடைபெறுகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துரு, "இந்தியாவில் ஆளுகை@100" என்பதாகும்.

## NCLAT

- பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (NCLAT - National Company Law Appellate Tribunal) நிர்வாகத் தலைவராக நீதிபதி (ஓய்வு) பன்சி லால் பட் என்பவரின் பதவிக் காலத்தை நீட்டித்துள்ளது.
- நீதிபதி பன்சி லால் பட், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதல் தலைவரான நீதிபதி எஸ்.ஜே.முகோபாத்யாவிற்குப் பின்னர் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டார்.
- நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம், 2013 என்ற சட்டத்தால் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் நிறுவப் பட்டது.
- இது தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்கு எதிரான முறையீடுகளை விசாரிக்கிறது.
- மேலும் இது தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (National Company Law Tribunal), திவால் மற்றும் நொடித்தல் நிலை வாரியம் மற்றும் இந்தியப் போட்டி ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவை விசாரிப்பதற்கான ஒரு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் ஆகும்.

## ஐஎஸ்ஓ 17020: 2012

- தேசிய உற்பத்தித் திறன் ஆணையத்திற்கு ஐஎஸ்ஓ 17020: 2012 என்ற நிலைக்கு இணங்க ஒரு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.
- இது சான்றிதழ் அமைப்புக்கான தேசிய அங்கீகார வாரியம், இந்தியத் தரநிர்ணய ஆணையம் ஆகியவற்றால் வழங்கப் பட்டது.
- உணவுப் பாதுகாப்புத் தணிக்கை மற்றும் வேளாண் பொருட்களின் அறிவியல் பூர்வச்

சேமிப்பு ஆகியவற்றில் ஆய்வு மற்றும் தணிக்கைப் பணிகளை மேற்கொள்வதற்காக இது வழங்கப் பட்டது.

- ❖ தேசிய உற்பத்தித் திறன் ஆணையமானது 1958 ஆம் ஆண்டில் இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் நிறுவப்பட்டது.

## பொது விவகாரங்கள் குறியீடு 2020

- ❖ இதை ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான பொது விவகார மையம் வெளியிட்டது.
- ❖ முன்னாள் இஸ்ரோ தலைவரான கஸ்துரிரங்கன் தலைமையிலான ஒரு குழுவால் இது வெளியிடப் பட்டது.
- ❖ வளர்ச்சி, பங்கேற்புத் தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகிய மூன்று தூண்களின் அடிப்படையில் மாநிலங்களின் ஆளுகைத் தன்மையின் மீது பகுப்பாய்வு செய்யப் பட்டது.
- ❖ இதன்படி பெரிய மாநிலங்கள் பிரிவில் சிறப்பாக நிர்வாகம் நடத்தும் மாநிலம் கேரளம் ஆகும்.
- ❖ அதைத் தொடர்ந்து தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ❖ அதே பிரிவில் உத்தரப் பிரதேசம், ஒடிசா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் கடைசி இடத்தில் உள்ளன.
- ❖ சிறிய மாநிலங்கள் பிரிவில் கோவா முதலிடத்திலும், மேகாலயா மற்றும் இமாச்சலப் பிரதேசம் அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன.
- ❖ இந்தப் பிரிவில் இறுதியாக பட்டியலில் உள்ள மாநிலங்கள் மணிப்பூர், டெல்லி மற்றும் உத்தரகாண்ட் ஆகும்.
- ❖ ஒன்றியப் பிரதேசங்களின் பிரிவில் சண்டிகர் முதலிடம் வகிக்கும் பிராந்தியமாக உள்ளது. அதைத் தொடர்ந்து புதுச்சேரி மற்றும் இலட்சத்தீவுகள் உள்ளன.
- ❖ தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், ஜம்மு-காஷ்மீர் ஆகியவை ஒன்றியப் பிரதேசங்களில் மிகக் குறைவான செயல்திறன் கொண்டவையாக உள்ளன.

**PUBLIC AFFAIRS INDEX**

| BEST | WORST |
|---|---|
| **LARGE STATE CATEGORY** | |
| Kerala | UP |
| Tamil Nadu | Odisha |
| Andhra Pradesh | Bihar |
| **SMALL STATE CATEGORY** | |
| Goa | Manipur |
| Meghalaya | Delhi |
| Himachal | U'khand |

- **Chandigarh** the best governed UT, followed by **Puducherry** and **Lakshadweep**
- **Dadra and Nagar Haveli, Andaman, J&K** least performers

## பை பை கொரோனா

- உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் ஒரு 'சயின்ஸ்டூன்' (sciencetoon) புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இது கோவிட் 19 தொற்றைப் பற்றி விரிவான தகவலைக் கொண்டு இருக்கின்றது
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் விக்யான் பிரச்சார் என்ற அமைப்பால் வெளியிடப் பட்டது.
- லக்னோவின் சி.எஸ்.ஐ.ஆர்-மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் மூத்த முதன்மை விஞ்ஞானி பிரதீப் ஸ்ரீவஸ்தவா என்பவரால் இந்தப் புத்தகம் எழுதப் பட்டு உள்ளது.
- இது கொரோனா வைரஸைப் பற்றிய உலகின் முதல் சயின்ஸ்டூன் புத்தகமாகும்.
- 'சயின்ஸ்டூன்' என்பது அறிவியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு கார்ட்டூன் ஆகும்.

## நிலப் பட்டங்கள் குறித்த வரைவு மாதிரிச் சட்டம்

- நிதி ஆயோக் ஆனது நிலப் பட்டங்கள் குறித்து மாநிலங்களுக்கான விதிகள் மற்றும் வரைவு மாதிரிச் சட்டத்தை வெளியிட்டுள்ளது.
- இது உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்தலை எளிதாக்குதல் மற்றும் வழக்குகளைக் குறைப்பதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசுகள், அசையாச் சொத்துகளின் பட்டப் பதிவு அமைப்புகளின் உருவாக்கம், நிர்வாகம் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கான ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.
- நிலப் பிரச்சினைத் தீர்வு அதிகாரியின் ஆணையுடன் முரண்பட்டுள்ள தரப்பினர் இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டு 30 நாட்களுக்குள் நிலப் பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் மனுத் தாக்கல் செய்ய வேண்டும்.
- நிலப் பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிராக மனுக்களை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்தின் ஒரு சிறப்பு அமர்வு அமைக்கப் படும்.

### *பின்னணி*

- நிலப் பதிவுகளின் தற்போதைய முறையானது காலனித்துவ காலத்தில் ஜமீன்தாரி முறையிலிருந்துப் பின்பற்றப்பட்டு வருகின்றது.
- தற்பொழுது, நிலப் பட்டங்களுக்கான விதிமுறைகள் சொத்துகள் பரிமாற்றச் சட்டம், 1882 என்ற சட்டத்தால் வழங்கப்படுகின்றன.
- நிலம் தொடர்பான ஆவணங்களின் பதிவுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் ஒரு முதன்மையான சட்டம் 'பதிவுகள் சட்டம் – 1908' என்ற சட்டம் ஆகும்.


## ASER அறிக்கை

- சமீபத்தில் ஊரகப்புற இந்தியாவிற்கான வருடாந்திரக் கல்வியின் நிலை குறித்த ஒரு அறிக்கையானது (Annual Status of Education Report - ASER) பிரதாம் கல்வி அறக்கட்டளையினால் வெளியிடப்பட்டுள்ளது.

### *முக்கிய அம்சங்கள்*

- இந்த ஆய்வின் படி, ஆய்வு செய்யப்பட்ட குழந்தைகளில் மூன்றில் 1 குழந்தை மட்டுமே நிகழ்நேர கற்றல் வசதியைப் பெறுகின்றன.
- 2020 ஆம் ஆண்டில் 3% ஊரகக் குழந்தைகள் பள்ளிகளில் சேராமல் உள்ளனர்.

- ஏறத்தாழ மூன்றில் 1 குழந்தை கற்றல் செயல்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.
- ஆய்வு செய்யப்பட்ட குழந்தைகளில் 47.4% குழந்தைகள் மேற்கு வங்கத்தில் திறன்பேசிகளை அணுகும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.
- இது ஜம்மு காஷ்மீரில் 77.1% ஆகவும், பஞ்சாப்பில் 88% ஆகவும், இமாச்சலப் பிரதேசத்தில் 90% ஆகவும், ஹரியானாவில் 82.3% ஆகவும் உள்ளன.
- கேரளாவில் உள்ள குழந்தைகள் 94.3% என்ற அளவுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளன.
- கற்றல் பொருட்களை அனுப்புவதற்கு மிகவும் பொதுத் தகவல் தொடர்பு ஊடகமாக கட்செவி அஞ்சல் (வாட்ஸ்அப்) விளங்குகின்றது.
- இந்தியாவில் முதல் தலைமுறையாக பள்ளிக் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.




## லடாக்கில் முதலாவது எழுச்சி தினம்

- லடாக் ஒன்றியப் பிரதேசமானது தனது முதலாவது எழுச்சி தினத்தை அக்டோபர் 31 ஆம் தேதி அனுசரித்தது. இது அந்த ஒன்றியப் பிரதேசத்தின் நிறுவன தினமாக விளங்குகின்றது.
- ஒன்றியப் பிரதேசமாக லடாக்கின் முதலாமாண்டுக் கொண்டாட்டத்திற்கான கருத்துரு, "வளர்ச்சி, செழுமை, மேம்பாடு ஆகியவற்றின் 1 ஆண்டு" என்பதாகும்.
- இந்தப் பகுதியானது தொடக்கத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- இது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று மத்திய அரசினால் ஆளப்படும் ஒரு ஒன்றியப் பிரதேசமாக உருவெடுத்தது.

## இராணுவ விமானப் படை

- இராணுவ விமானப் படையானது நவம்பர் 01 அன்று தனது 35வது படைப் பிரிவு தினத்தைக் கொண்டாடியது.
- இந்திய இராணுவத்தின் மிகச் சமீபத்திய படைப்பிரிவு இதுவாகும்.
- இந்தப் படையானது 1986 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று ஒரு தனிப் படையாக உருவாக்கப் பட்டது.

## கங்கை உத்சவம் - 2020

- ❖ இது கங்கை நதியைத் தேசிய நதியாக அறிவிக்கப்பட்டதின் 12வது நினைவு தினத்தைக் கொண்டாடுவதற்காக தேசியத் தூய்மை கங்கைத் திட்டத்தினால் அனுசரிக்கப் பட்டு வருகின்றது.
- ❖ இந்த நிகழ்ச்சியானது மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தினால் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இந்தியாவின் மிக நீளமான நதி கங்கை ஆகும்.
- ❖ கங்கை நதியானது கங்கோத்திரி பனிப் பாறையில் இருந்து பாகீரதி நதியாக உற்பத்தி ஆகின்றது.
- ❖ பின்னர் இது உத்தரகாண்டில் உள்ள தேவபிரயாக் என்ற இடத்தில் அலக்நந்தா நதியுடன் இணைந்து, கங்கையாக உருவெடுக்கின்றது.
- ❖ இந்த நதியானது உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், பீகார், பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பாய்கின்றது.
- ❖ கங்கை நதியானது பிரம்மபுத்திரா நதியுடன் இணைந்து வங்க தேசத்தில் பத்மா என்ற நதியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.





## நீதிமன்ற அவமதிப்பு

- ❖ ஆந்திர முதல்வர் ஜெகன் ரெட்டி மீது அவமதிப்பு வழக்கைத் தொடங்க இந்திய அரசாங்கத் தலைமை சட்ட அதிகாரி மறுத்துள்ளார்.
- ❖ கடந்த மாதம் முதல்வர் ஜெகன் ரெட்டி அவர்கள் ஆந்திர மாநில உயர்நீதி மன்றமானது ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தனது அரசாங்கத்தைச் சீர்குலைக்க மற்றும் கவிழ்க்க பயன்படுத்தப் படுவதாகக் குற்றம் சாட்டி, இந்தியத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டேவுக்கு கடிதம் எழுதியிருந்தார்.
- ❖ இந்திய அரசியலமைப்பின் 129 மற்றும் 215 ஆவது சட்டப் பிரிவுகள், முறையே உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்திற்கு, அதனை அவமதிக்கும் பொருட்டு மக்களைத் தண்டிக்க அதிகாரம் அளிக்கின்றன.
- ❖ 1971 ஆம் ஆண்டின் நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் கீழுள்ள கீழமை நீதிமன்றங்களை அவமதிப்பதைத் தண்டிக்கும் அதிகாரத்தையும் வரையறுக்கிறது.

## வேளாண் சட்டங்கள் குறித்து ராஜஸ்தான்

- ❖ மத்திய அரசின் 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து ராஜஸ்தான் அரசானது மூன்று மசோதாக்களை நிறைவேற்றியுள்ளது.

- மத்திய அரசின் 3 வேளாண் சட்டங்களும் விவசாயம் மற்றும் சந்தையைச் மையப் படுத்தி இருக்கிறது. இவை அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் அடிப்படையில் மாநிலப் பட்டியலில் இருக்கின்றன.
- ஆனால், பொதுப் பட்டியலின் 33 ஆவது உட்கூறானது விவசாயம் உட்பட எந்தவொரு தொழிற்துறையின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்த மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் அதிகாரங்களை வழங்குகிறது.
- வழக்கமாக, பொதுப் பட்டியலில் உள்ள ஒரு கூறின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு மத்தியச் சட்டத்தை ஒரு மாநிலம் திருத்த விரும்பினால், அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப் படுகிறது.
- ஒரு மாநிலச் சட்டம் அதே விவகாரத்தில் மத்தியச் சட்டத்திற்கு முரணாக இருக்கும் போது, பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் மேலோங்கி நிற்கிறது.
- அரசியலமைப்பின் பிரிவு 254 (2) பொதுப் பட்டியலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்களில் மத்தியச் சட்டங்களை மறுக்கும் வகையில் சட்டங்களை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- பிரிவு 254 (2) என்பதின் கீழ் நிறைவேற்றப் பட்ட ஒரு மாநிலச் சட்டத்திற்கு இந்திய ஜனாதிபதியின் ஒப்புதல் தேவைப் படுகிறது.
- மேலும் ஒரு மாநிலத்தின் அனைத்து மாநில வேளாண் சந்தைகளுக்கும் குறைந்த ஆதார விலையானது செல்லுபடியாகும் வகையில் ஒரு விதியை அந்த மாநிலத்தின் ஒரு சட்டம் கொண்டிருக்க முடியும்.




## செறிவூட்டப்பட்ட அரிசி

- இந்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறையானது, மத்திய அரசின் நிதியுதவியோடு செறிவூட்டப்பட்ட அரிசி மற்றும் பொது விநியோக முறை மூலம் அதன் விநியோகம் குறித்த ஒரு சோதனைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.
- இந்தத் திட்டமானது 2019-20 முதல் 2022-23 வரை மூன்று ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்பட உள்ளது.
- ஊட்டச்சத்துப் பாதுகாப்பை (Nutritional security) நோக்கி நாட்டைக் கொண்டுச் செல்ல இந்தத் திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, அரிசிக்கு நுண்ணூட்டச் சத்து தூள் சேர்ப்பதன் மூலம் அரிசியானது செறிவூட்டப் படுகிறது.
- குஜராத், ஆந்திரா, மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் மற்றும் தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களில் செறிவூட்டப் பட்ட அரிசி விநியோகமானது ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது.




## தொலைக்காட்சி மதிப்பீட்டு முறையை மதிப்பாய்வு செய்வதற்கான குழு

- தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது தொலைக்காட்சி மதிப்பீட்டு நிறுவனங்களின் தற்போதைய வழிகாட்டுதல்களை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைக்கவுள்ளது.
- பிரசார் பாரதியின் தலைமை செயல் அதிகாரியான சஷி சேகர் வேம்பதி என்பவரது தலைமையில் நான்கு உறுப்பினர்களுடன் இந்தக் குழு அமைக்கப் பட்டுள்ளது.
- குழுவில் உள்ள மற்ற இதர மூன்று உறுப்பினர்கள்,
    - ராஜ்குமார் உபாத்யாயா (சி-டாட்டின் நிர்வாக இயக்குநர்),
    - ஐ.ஐ.டி கான்பூரின் புள்ளியியல் பேராசிரியர் டாக்டர் ஷலப் மற்றும்
    - பொதுக் கொள்கைக்கான அறிவியல் முடிவுகள் மையத்தின் பேராசிரியர் புலக் கோஷ் ஆகியோர் ஆவர்.
- டிஆர்பி என்பது ஒரு தொலைக்காட்சி மதிப்பீட்டு அளவாகும்.
- ஒரு சேனலை எத்தனை பேர் பார்க்கிறார்கள் என்பதைக் காட்டும் ஒரு வகை தரவு இது ஆகும்.

## உலக முதலீட்டாளர் வட்டமேசை மாநாடு

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.
- இது தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்துடன் இணைந்து மத்திய நிதித் துறை அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- இந்தக் கருத்தரங்கில் நடைபெற்ற விவாதத்தின் முக்கிய நோக்கம் 5 டிரில்லியன் அமெரிக்க டாலராக உருவெடுக்க இருக்கும் இந்திய அரசின் தொலைநோக்குப் பார்வையைப் பற்றியதாகும்.

## 13வது நகர்ப்புற இயக்க இந்தியக் கருத்தரங்கு 2020

- 13வது நகர்ப்புற இயக்க இந்தியக் கருத்தரங்கு 2020 என்ற கருத்தரங்கை மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தொடங்கி வைத்தார்.
- இந்தக் கருத்தரங்கின் கருத்துரு, "நகர்ப்புற இயக்கத்தில் வளர்ந்து வரும் போக்குகள்" என்பதாகும்.

- வருடாந்திர நகர்ப்புற இயக்க இந்தியக் கருத்தரங்கு என்பது இந்தியாவின் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப் படும் ஒரு தலைமைக் கருத்தரங்காகும்.
- இந்தக் கருத்தரங்கின் தோற்றமானது 2006 ஆம் ஆண்டில் இந்திய அரசின் தேசிய நகர்ப்புற போக்குவரத்து கொள்கையிலிருந்து மேற்கொள்ளப் பட்டதாகும்.

## வளர்ந்து வரும் சுற்றுப்புறத்திற்கான சவால்

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி அவர்கள் இதனைத் தொடங்கி வைத்தார்.
- இது நெதர்லாந்தில் உள்ள பெர்னார்டு வன் லீர் அமைப்பின் உதவியுடன் நடத்தப் படுகின்றது.
- இந்தச் சவாலிற்கான தொழில்நுட்ப உதவியானது டபிள்யூ ஆர்ஐ இந்தியா (WRI India) என்ற அமைப்பினால் வழங்கப் படுகின்றது.

## கோவிட் – 19 ஸ்ரீ சக்தி சவால்

- இது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்புடன் இணைந்து "My Gov" என்பதனால் நடத்தப்பட்டது.
- பெண்களின் தலைமையிலான 6 ஸ்டார்ட்அப்கள் (புதிதாகத் தொழில் தொடங்குதல்) கோவிட் – 19 ஸ்ரீ சக்தி சவால் விருதை வென்றுள்ளன.
- இதன் நோக்கம் கோவிட் -19 நோய்த் தொற்றுத் போராட்டத்திற்கு உதவுவதற்காக புத்தாக்கக் கருத்துகள் மற்றும் தீர்வுகளுடன் செயல்படும் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட் அப் அமைப்புகளைப் பங்கு கொள்ளச் செய்து மற்றும் அவற்றை ஊக்கப் படுத்துவதாகும்.




## நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரசம் (திருத்தம்) அவசரச் சட்டம், 2020

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் இந்த அவசரச் சட்டத்திற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- இது நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரச சட்டம், 1996 என்ற சட்டத்தைத் திருத்தியுள்ளது.
- இந்தப் புதிய சட்டத்தின் கீழ், மோசடி அல்லது ஊழல் ஆகியவற்றினால் தூண்டப் பட்ட சமரச ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்பட்ட சமரசத் தீர்ப்புகளின் அமலாக்கத்தின் மீது நிபந்தனையற்ற தடையாணையைக் கோருவதற்கான ஒரு வாய்ப்பினை அனைத்துப் பங்குதாரர்களுக்கும் வழங்குகின்றது.

## சாகர் கவாச் பயிற்சி

- ஒரு கூட்டுக் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான இது ஒடிசாவில் உள்ள பாரதீப் கடற்கரையில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஒடிசா மாநில அரசு மற்றும் மேற்கு வங்க மாநில அரசு ஆகியவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப் படுகின்றது.
- இந்தப் பயிற்சியானது கடற்கரை வழியாக நிகழ்த்தப் பட்ட மும்பை தாக்குதல் போன்று மீண்டும் தாக்குதல் எதுவும் ஏற்படாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.

## "Bull Strike" போர்ப் பயிற்சி

- இந்தியாவின் முதலாவது மற்றும் ஒரே புவியியல் செயல்பாட்டுப் படைக் கட்டுப்பாட்டகமான அந்தமான் நிக்கோபர் படைக் கட்டுப்பாட்டகமானது இந்தக் கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டது.
- இது நிக்கோபர் தீவுக் கூட்டத்தில் உள்ள தெரசா என்ற தீவில் நடத்தப்பட்டது.
- இதில் இந்திய இராணுவத்தின் வான் குடை மிதவைப் படைப் பரிவு (பாராசூட் படைப் பிரிவு), மார்கோஸ் மற்றும் சிறப்புப் படைகள் கலந்து கொண்டன.
- இந்தப் படைக் கட்டுப்பாட்டகத்தில் குறிப்பிட்ட போர் கட்டுப்பாட்டகப் படைப் பரிவில் உள்ள தரைப் படை, விமானப் படை, கடற்படை ஆகியவற்றின் அனைத்து போர் உபகரணங்களும் மூன்று நட்சத்திர அடையாளம் கொண்ட ஒரு அதிகாரியின் கீழ் வைக்கப் படுகின்றன.

## தரவு முதிர்ச்சி மதிப்பீட்டுக் கட்டமைப்பு

- இது மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது நகரங்களின் தரவு சூழலியல் குறித்து ஆய்வு செய்தவற்கான ஒரு கட்டமைப்பாகும்.

## ஒரே தரவரிசை ஒரே ஓய்வூதியம்

- ஆயுதப் படைகளின் 'ஒரே தரவரிசை ஒரே ஓய்வூதியம்' என்ற திட்டமானது அதன் 5 ஆண்டு காலப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- தற்பொழுது ஓய்வு பெறும் பாதுகாப்புத் துறைப் பணியாளர்களுக்கு அவர்களின் தரவரிசை மற்றும் பணிக்காலம் ஆகியவற்றைக் கருதாமல் ஒரே அளவில் சீரான ஒரு ஓய்வூதியமானது வழங்கப் பட்டு வருகின்றது.
- இது அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தின் 50% என்பதாகும்.
- 2014 ஆம் ஆண்டு ஜுன் 30 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆயுதப் படைப் பணியாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்றனர்.

## புதிய தலைமைத் தகவல் ஆணையர்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் யஷ்வர்தன் K சின்ஹா என்பவரை இந்தியாவின் புதிய தலைமைத் தகவல் ஆணையராக (Chief Information Commissioner - CIC) நியமித்துள்ளார்.

- இவர் பிரதமர் தலைமையிலான மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவினால் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இந்தக் குழுவில் பிரதமர் மோடியைத் தவிர மக்களவையின் எதிர்க் கட்சித் தலைவரான அதிர் ரஞ்சன் சௌத்ரி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் அன்று தனது பதவிக் காலத்தை நிறைவு செய்த பீமல் ஜுல்கா என்பவருக்குப் பிறகு 2 மாதங்களாக இந்தப் பதவி காலியாக இருந்தது.
- பின்னர், உதய் மகுர்கர் (பத்திரிக்கையாளர்) ஹீரா லால் சாமாரியா (முன்னாள் தொழிலாளர் நலத் துறை செயலாளர்) மற்றும் சரோஜ் புன்கானி (முன்னாள் துணை சிஏஜி) ஆகியோர் தகவல் ஆணையர்களாக குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பட்டு உள்ளனர்.
- CIC ஆணையத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 என்ற சட்டத்தினால் வரையறுக்கப் பட்டுள்ளன.
- இவர் தகவல் அறியும் உரிமை (திருத்தம்) சட்டம், 2019 என்ற திருத்தப்பட்ட சட்டத்தின் படி மூன்று ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் நீடிப்பார்.
- இதற்கு முன்பு அந்த பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருந்தது.
- CIC ஆனது 2005 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.




## பட்டியலிடப்பட்ட வகுப்பினர் (SC)/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள்

- வரலாற்றில் முதன்முறையாக கேரள மாநிலமானது திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியத்தில் ST சமூகத்தின் பிரிவைச் சேர்ந்த ஒருவரை அர்ச்சகராக நியமிக்க உள்ளது.
- திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியமானது சபரிமலை கோயில் உள்பட 1200 கோயில்களை நிர்வகிக்கின்றது.
- இது SC/ST பிரிவைச் சேர்ந்த அர்ச்சகர்களைப் பகுதி நேர அர்ச்சகர்களாக நியமிக்க முடிவு செய்துள்ளது.

## தேசிய நீர் விருதுகள் 2019

- இந்த விருதுகள் மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தால் வழங்கப் பட்டன.
- தமிழகமானது 'சிறந்த மாநிலம்' என்ற பிரிவின் கீழ் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- தமிழ்நாட்டைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை அப்பிரிவின் கீழ் சிறந்த மாநிலங்களாக இடம் பிடித்துள்ளன.

- வேலூர் மற்றும் கருர் மாவட்டங்களுக்கு முறையே முதல் மற்றும் இரண்டாவது இடங்கள் 'நதிக்குப் புத்துயிர் அளித்தல்' என்ற ஒரு துணைப் பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளன.
- பெரம்பலூர் மாவட்டமானது 'நீர்ப் பாதுகாப்பு' என்ற பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- தெற்கிற்கான 'நீர்ப் பாதுகாப்பு' என்ற பிரிவின் கீழ் தூத்துக்குடியைச் சேர்ந்த சாஸ்தவிநாதுார் கிராமப் பஞ்சாயத்தானது முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- 'சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு' என்ற பிரிவில் முதல் இடம் மதுரை மாநகராட்சிக்கு வழங்கப் பட்டுள்ளது.

## அடல் புத்தாக்கத் திட்டம் – சிரஸ் திட்டம்


- அடல் புத்தாக்கத் திட்டம் சிரஸ் புத்தாக்கத் திட்டம் ஆனது இந்தியா மற்றும் ரஷ்யப் பள்ளிக் குழந்தைகளுக்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது இந்தியா மற்றும் ரஷ்யாவிற்கான தொழில்நுட்பத் தீர்வுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிரஸ் (Scientific International Research in Unique Terrestrial Station - SIRUS) என்பது தனித்துவம் வாய்ந்த நில அமைப்பு நிலையத்தில் அறிவியல்சார் சர்வதேச ஆராய்ச்சி என்பதைக் குறிக்கின்றது.
- இது நிலவிற்கான பயணத்தை ஆய்வு செய்யும் பல்வேறு சோதனைகளின் ஒரு தொடராகும்.

## தேசியக் குங்குமப்பூ திட்டம்

- தேசியக் குங்குமப்பூ திட்டத்தின் கீழ் குங்குமப்பூ உற்பத்தியானது காஷ்மீரில் மட்டுமே காணப் படுகின்றது.
- இது முக்கியமாக இந்தியாவில் பேம்பூர் பகுதியில் வளர்க்கப் படுகின்றது.
- இந்தப் பகுதியானது "காஷ்மீரின் குங்குமப்பூ கிண்ணம்" என்று அழைக்கப் படுகின்றது.
- இது தற்பொழுது வடகிழக்குப் பகுதியில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- காஷ்மீர் குங்குமப்பூ ஆனது 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.

## முதலாவது ஹைப்பர் லூப் பயணிகள் பயணம்

- விர்ஜின் ஹைப்பர்லூப் என்ற நிறுவனமானது தனது முதலாவது வெற்றிகரமான பயணிகள் பயணத்தை நடத்தி உள்ளது.
- இந்தச் சோதனையானது அமெரிக்காவில் லாஸ் வேகாஸில் நடத்தப்பட்டது.
- இது 25 நிமிடங்களில் மும்பை மற்றும் புனேவை இணைக்கத் திட்டமிட்டுள்ளது.
- ஹைப்பர்லூப் என்பது ஒரு மணி நேரத்தில் 1000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் ஒரு புதிய வகையான போக்குவரத்தாகும்.
- இந்தக் கருத்தானது 2012ல் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் ஆகியவற்றால் முன்மொழியப் பட்டது.




## மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகத்தின் பெயர் மாற்றம்

- மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தை மத்தியத் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித் துறைகள் அமைச்சகம் என்று பிரதமர் நரேந்திர மோடி பெயர் மாற்றியுள்ளார்.
- தற்பொழுது மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறையின் அமைச்சர் மன்சுக் L மாண்டாவியா ஆவார்.

## செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் புதுதில்லியில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் (DRDO) தலைமையகத்தில் செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பின் மாதிரியைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகியவை செயற்கைக் கோள் எதிர்ப்புத் தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ள நாடுகளாகும்.
- இந்தியாவானது தனது செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணைச் சோதனையை 2019 ஆம் ஆண்டில் "சக்தி நடவடிக்கை" என்ற குறியீட்டுப் பெயரின் கீழ் நடத்தியது.



## புலம்பெயர்வு கொள்கைக் குறியீடு


- சமீபத்தில் மும்பையில் உள்ள ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமான "தற்பொழுது இந்தியப் புலம்பெயர்வு" (India Migration Now) என்ற நிறுவனமானது "மாநிலத்திற்கு இடையேயான புலம்பெயர்வு கொள்கைக் குறியீடு" என்ற ஒரு குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- இந்தக் குறியீடானது மாநிலத்திற்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர்களின் ஒருங்கிணைப்பை அளவிடுகின்றது.
- இந்தக் குறியீட்டின்படி, கேரளா, கோவா, இராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் புலம்பெயர் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதில் மிகவும் வெற்றி பெற்றுள்ள மாநிலங்களாகும்.
- மறுமுனையில் தில்லியானது மாநிலத்திற்கு இடையேயான குறைந்த புலம்பெயர் கொள்கைக் குறியீட்டைக் கொண்டுள்ளது.

## இந்தியக் கைபேசி மாநாடு (IMC)

- IMC (India Mobile Congress) மாநாட்டின் 4வது பதிப்பானது சமீபத்தில் தொடங்கி வைக்கப் பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு"Inclusive Innovation – Smart I Secure I Sustainable" என்பதாகும்.
- IMC ஆனது "தொலைத்தொடர்பு துறை மற்றும் இந்திய செல்லுலார் செயல்பாட்டாளர்கள் கூட்டமைப்பு" ஆகியவற்றினால் கூட்டாக ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- IMC ஆனது ஆசியாவின் மிகப்பெரிய டிஜிட்டல் தொழில்நுட்ப மன்றமாகக் கருதப் படுகின்றது.

## ஹுனார் ஹாத்

- 'ஹுனார் ஹாத்' என்ற ஒரு கண்காட்சியை மத்திய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சரான முக்தார் அப்பாஸ் நக்வி தில்லியில் திறந்து வைத்தார்.
- ஹுனார் ஹாத்தின் கருத்துரு "உள்ளூர் மக்களுக்கான குரல்" என்பதாகும்.
- ஹுனார் ஹாத் என்பது சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகத்தினால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாரம்பரியப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களின் ஒரு கண்காட்சி ஆகும்.
- பாரம்பரிய கலை / மேம்பாட்டிற்கான கைவினைப் பொருட்களில் திறன்கள் மற்றும் பயிற்சியினை மேம்படுத்துதல் (USTTAD - Upgrading the Skills and Training in Traditional Arts/ Crafts for Development) என்ற திட்டத்தின் கீழ் இது தொடங்கப் பட்டது.



## எடெல்கிவ் ஹுருன் இந்திய நன்கொடைப் பட்டியல் 2020 - 7வது பதிப்பு

- விப்ரோவின் நிறுவனரும் தலைவருமான அசிம் பிரேம்ஜி அவர்கள் 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் தொண்டு செய்வோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- அவர் ஒரு நாளைக்கு ரூ.22 கோடி என்ற அளவில் நன்கொடை அளித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் HCL நிறுவனத்தின் சிவ் நாடார் அவர்கள் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானி அவர்கள் இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.




## 11வது வருடாந்திர நிமோனியா (கபவாதம்) மற்றும் வயிற்றுப் போக்கு செயல்பாட்டு அறிக்கை

- இதனை சர்வதேச நோய்த் தடுப்பு மருந்துகள் அணுகல் மையம் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவானது உலகளாவிய இலக்கான 5 தடுப்பு மருந்துகளில் 3ல் 90% உள்ளடக்கத்தை (பயன்பாட்டை) எட்டியுள்ளது.
- டிபிடி தடுப்பு மருந்து, தட்டம்மை நோய்த் தடுப்பு மருந்து, பிசிவி தடுப்பு மருந்து, ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்து மற்றும் ஹீமோபிளியஸ் இன்புளூயன்சா வகை பி தடுப்பு மருந்து ஆகியவை இந்தத் தடுப்பு மருந்துகளாகும்.
- உலகில் நிமோனியாவினால் நிகழும் இறப்புகளில் 20% இறப்புகள் இந்தியாவில் ஏற்படுகின்றன.
- உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நாட்டில் அதிக அளவிலான நிமோனியா பாதிப்புகளைக் கொண்டுள்ளவைகளாகக் கணிக்கப் பட்டு உள்ளன.

## பாரத் தர்ஷன்-தக்சிண பாரத் யாத்திரை

- இந்திய இரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலா கழகமானது "பாரத் தர்ஷன் – தக்சிண பாரத் யாத்திரை" என்ற ஒன்றைத் தொடங்க உள்ளது.
- இது ஹைதராபாத் மற்றும் செகந்திராபாத் ஆகியவற்றிலிருந்து தொடங்கப்பட உள்ளது.
- இந்த யாத்திரையின் கருத்துரு, "இந்தியர்களுக்கு இந்தியாவைக் காண்பித்தல்" என்பதாகும்.

## அமைப்புசாராத் துறையின் தேசிய தரவுதளம்

- அமைப்புசாராத் தொழிலாளர்களின் தேசிய தரவுதளம் என்பது தொழிலாளர்களின் தரவுதளத்தை அவர்களின் 12 இலக்க ஆதார் எண்ணைப் பயன்படுத்திப் பராமரிக்கும்.
- இது அமைப்புசாராத் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கான முதல் தேசிய தரவுதளமாக அமையும்.
- இதைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் பராமரிக்கும்.
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முறையான தளத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- அரசாங்கமானது அமைப்புசாராத் துறைக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதையும் இது எளிதாக்கும்.
- கோவிட்-19 போன்ற சூழ்நிலைகளில் தொழிலாளர்களின் இடப்பெயர்தலைக் கண்காணிக்கவும் இது உதவும்.
- அமைப்புசாராத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புச் சட்டம், 2008 என்ற சட்டமானது முதலில் ஒவ்வொரு தொழிலாளியையும் பதிவு செய்து அவர்களுக்குத் திறன் அடையாள அட்டையை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

## நதியின் மீதான இந்தியாவின் மிக நீளமான பாலம்

- இது ஆற்றின் மீது கட்டப்படும் நாட்டின் மிக நீளமான பாலமாக (சுமார் 20 கி.மீ) அமையும்.
- இது பிரம்மபுத்ரா நதியின் மீது தேசிய நெடுஞ்சாலை 127B என்ற சாலையின் மீது கட்டப் படும்.
- இதன் மூலம் அசாமின் துப்ரியில் இருந்து மேகாலயாவின் புல்பாரி வரையிலான பயண தூரமானது 205 கி.மீ என்ற தூரத்தில் இருந்து 19.2 கி.மீ ஆகக் குறைக்கப் படும்.
- இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான குறைந்தபட்ச தொகையைக் கொண்டுள்ள ஏலதாரர் எல் அண்ட் டி நிறுவனமாகும்.

## அமைதிக்கான சிலை


- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் "அமைதிக்கான சிலையை" காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்.
- இது சமணத் துறவியான விஜய் வல்லப் சுரீஷ்வர் ஜி மகாராஜ் (1870 – 1954) என்பவரின் 151வது பிறந்த தினக் கொண்டாட்ட அனுசரிப்பைக் குறிக்கின்றது.



- இது ராஜஸ்தானின் பாலியில் உள்ள ஜெட்புராவில் விஜய் வல்லப் சாதனா கேந்திராவில் அமைக்கப் பட்டுள்ளது.

## குடிமைப் பதிவுகள் முறையை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் இன்றியமையாத புள்ளியியல் குறித்த 2018 ஆம் ஆண்டு அறிக்கை

- சமீபத்தில் இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களின் பாலின விகிதங்கள் குறித்த தகவலைத் தருகின்றது.
- பிறப்பின் போதான பாலின விகிதம் என்பது பிறப்பின் போது 1000 ஆண் குழந்தைகளுக்கு எவ்வளவு பெண் குழந்தைகள் உள்ளனர் என்பதைக் குறிக்கின்றது.
- சிறந்த பாலின விகிதம் கொண்ட மாநிலம் அருணாச்சலப் பிரதேசம் (1084) ஆகும்.
- இதில் அருணாச்சலப் பிரதேசத்திற்கு அடுத்து நாகாலாந்து (965), மிசோரம் (964), கேரளா (963) மற்றும் கர்நாடகா (957) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இதில் மிகவும் மோசமான செயல்பாடு கொண்ட மாநிலமாக மணிப்பூர் (757) விளங்குகின்றது.
- பிறப்புப் பதிவுகளின் நிலையானது 2009 ஆம் ஆண்டில் 81.3% என்ற நிலையிலிருந்து 2018 ஆம் ஆண்டில் 89.3% ஆக அதிகரித்துள்ளது.





## பிரிவு 167 குறித்த இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- இந்திய உச்ச நீதிமன்றமானது விசாரணை அமைப்புகள் ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் விசாரணையை நிறைவு செய்யவில்லையெனில் குற்றம் சாட்டப் பட்டவருக்கு எதிரான வழக்கின் தன்மையைப் பொருட்படுத்தாமல், அவருக்கு "இயல்பு நிலை" மற்றும் "கட்டாயப் பிணை" ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 167 என்பதின் கீழ், குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபரை மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகளுக்கு மேலான ஒரு சிறைத் தண்டனையுடன் கூடிய குற்றங்கள் ஆகியவற்றுக்காக வேண்டி அதிகபட்சம் 90 நாட்கள் வரை தடுப்புக் காவலில் வைக்க முடியும்.
- ஆனால் பிற எந்தவொரு குற்றத்தில் தொடர்புடையவரையும் விசாரணைக்காக வேண்டி 60 நாட்கள் வரை மட்டுமே தடுப்புக் காவலில் வைக்க முடியும்.
- விசாரணை அமைப்புகள் குறிப்பிட்ட கால அளவிற்குள் விசாரணையை நிறைவு செய்யவில்லையெனில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 167(2) என்பதின் கீழ் இயல்புநிலை பிணைக்காக வேண்டி ஒரு "விவரிக்க இயலாத உரிமை நிலையை" ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபர் கொண்டிருக்கின்றார்.

## ஆத்ம நிர்பர் (தற்சார்பு இந்தியா) பாரத் அபியான் 3.0

❖ மத்திய அரசானது ரூ.1.19 இலட்சம் கோடி மதிப்பில் பொருளாதாரத்திற்கான நிவாரண மற்றும் ஊக்க நடவடிக்கைகளின் கீழ் ஒரு புதிய தொகுப்பை அறிவித்து உள்ளது.

❖ இது "ஆத்ம நிர்பர் பாரத் அபியான் 3.0" என்று அழைக்கப்படுகின்றது.




## மீன் வளத் துறையில் விருதுகள்

❖ அசாம் மாநிலமானது தேசிய மீன்வள வளர்ச்சி வாரியத்திடமிருந்து மீன்வளத் துறையில் 4 விருதுகளைப் பெற்றுள்ளது.

❖ அசாம் மாநிலமானது மீன்வளத் துறையில் சிறந்த மலைப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலப் பிரிவு ஆகியவற்றின் கீழ் சிறந்த மாநில விருதை வென்றுள்ளது.

❖ ஒடிசா மாநிலமானது கடல்சார் மாநிலப் பிரிவில் சிறந்த மாநிலம் என்ற விருதைப் பெற்றுள்ளது.

❖ உத்தரப் பிரதேச மாநிலமானது உள்நாட்டு மாநிலப் பிரிவில் சிறந்த மாநில விருதை வென்றுள்ளது.

❖ இந்தியாவானது வருடாந்திரமாக 13.7 மில்லியன் டன்கள் என்ற அளவிற்கு மீனை உற்பத்தி செய்கின்றது.

❖ இதில், மொத்த மீன் உற்பத்தியில் உள்நாட்டு மீன் உற்பத்தியானது 65% என்ற அளவினைக் கொண்டுள்ளது.

## இந்தியப் புலனாய்வு அமைப்பிற்கு வேண்டிய ஒப்புதல்

❖ இந்திய உச்சநீதிமன்றமானது மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் CBI அமைப்பின் விசாரணைக்கு அந்தந்த மாநிலங்களிடம் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயம் என்று அறிவித்துள்ளது.

❖ அந்த மாநிலங்களின் ஒப்புதல் பெறாமல் இந்த முகமையின் வரம்பை நீட்டிப்பதற்கு மத்திய அரசிற்கு அனுமதி வழங்கப் படவில்லை.

❖ இது கூட்டாட்சிக் கொள்கையுடன் ஒன்றிப் பொருந்துவதாக விளங்குகின்றது.

❖ தங்களது அதிகார வரம்பிற்குள் புதிய வழக்குகளின் மீது விசாரணையை மேற்கொள்ள CBI அமைப்பிற்கு வழங்கப் பட்டிருந்த தமது பொது ஒப்புதலை பிஜேபி

அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களான கேரளா, ஜார்கண்ட், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, மிசோரம், சத்தீஸ்கர், இராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகிய 8 மாநிலங்கள் திரும்பப் பெற்ற சமயத்தில் இந்தத் தீர்ப்பானது இந்திய உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப் பட்டுள்ளது.

- ❖ தில்லி சிறப்புக் காவல்துறை உருவாக்கச் சட்டம், 1946 என்ற சட்டமானது CBI-யின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்றது.

## லீலாவதி விருதுகள்

- ❖ மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' அவர்கள் லீலாவதி விருதுகளை வெளியிட்டு உள்ளார்.
- ❖ லீலாவதி விருதுகளானது அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்கான கழகத்தின் (AICTE - All India Council for Technical Education) ஒரு முன்னெடுப்பாகும்.
- ❖ இது AICTEயினால் அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் பெண்கள் மதிக்கப் படுவதை மேற்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த விருதுகளானது பெண்கள் மேம்பாடு என்ற கருத்தின் அடிப்படையில் வழங்கப் படுகின்றது.
- ❖ 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "லீலாவதி" என்ற புத்தகத்தின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் புத்தகமானது கணிதவியலாளரான இரண்டாம் பாஸ்கரா என்பவரால் எழுதப் பட்டு உள்ளது.
- ❖ லீலாவதி என்பவர் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தியக் கணிதவியலாளர் இரண்டாம் பாஸ்கராவின் மகள் ஆவார்.
- ❖ இந்தப் பரிசானது 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சர்வதேசக் கணிதவியலாளர்கள் மாநாட்டில் முதன்முறையாக வழங்கப் பட்டது.

## பெங்களூரு தொழில்நுட்ப மாநாடு 2020

- ❖ இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
- ❖ தொழில்நுட்பத் தீர்வுகள் இந்தியாவில் உருவாக்கப்பட்டு அவை உலகத்தில் செயல்படுத்துவதற்கான தக்க தருணம் இது என்று அவர் இந்த தருணத்தினை வருணித்தார்.
- ❖ இந்த மாநாட்டின் கருத்துரு, "அடுத்தது தற்பொழுதாக இருக்கின்றது" என்பதாகும்.

## தீவிரமயமாக்கல் (தீவிரவாதம்) குறித்த ஆய்வு

- ❖ மத்திய உள்துறை அமைச்சகமானது முதன்முறையாக "இந்தியாவின் தீவிரமயமாக்கலின் நிலை" குறித்த ஒரு ஆராய்ச்சி மீதான ஆய்விற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- ❖ இந்த ஆய்வானது தீவிரமயமாக்கல் என்பதை சட்டப்பூர்வமாக வரையறுக்கவும் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவும் முயற்சி செய்கின்றது.

## உள்நாட்டு நுழைவு அனுமதிப் படிவம் (ILP) – மேகாலயா

- இது ILP (Inner Line Permit) முறையின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு மாநிலத்தினுள் பயணம் மேற்கொள்ள அல்லது அங்கு தங்குவதற்கு வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வைத்திருக்க வேண்டிய ஒரு ஆவணமாகும்.
- தற்பொழுது அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்கள் இந்த முறையின் கீழ் உள்ளன.
- ILP அந்தந்த மாநில அரசுகளினால் வழங்கப்படுகின்றது.
- ILP என்பது வங்காள கிழக்கு எல்லை ஒழுங்குமுறைச் சட்டம் - 1873 என்ற ஒரு சட்டத்தின் நீட்டிப்பாகும்.
- தற்பொழுது மேகாலயாவானது ILP முறையை நடைமுறைப் படுத்தவும் குடியுரிமை (திருத்தம்) சட்டத்தை நீக்கவும் கோருகின்றது.

## ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள்

- இந்தியாவில் இப்போது 50,025 ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள் 678 மாவட்டங்களில் பரவியுள்ளன.
- 2022 ஆம் ஆண்டின் டிசம்பருக்குள் மேலும் 1.5 லட்சம் மையங்கள் நிறுவப்படும் என்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்த மையங்கள் 18,536 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 27,890 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 3,599 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளன.

## இந்தியாவில் தடுப்பு மருந்துகளின் கையாளுகை

- இந்தியாவின் சீரம் மையத்தின் தலைமைச் செயல் அதிகாரியான அடர் பூனவாலா அவர்கள் ஆக்ஸ்போர்டு கோவிட்-19 நோய்த் தடுப்பு மருந்தானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று அறிவித்துள்ளார்.
- மேலும் 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்களும் புதிய கொரானா வைரஸிற்கு எதிரான நோய்த் தடுப்பு மருந்தைப் பெறுவர்.
- ஆரம்பத்தில், ஆக்ஸ்போர்டு ஆஸ்ட்ராசெனேகா நோய்த் தடுப்பு மருந்தானது பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய மூத்தக் குடிமக்கள் மற்றும் சுகாதார நலப் பணியாளர்கள் ஆகியோருக்கு 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத வாக்கில் கிடைக்கப் பெறும்.
- தில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் மற்றும் ஹைதராபாத் ஜிஎம்ஆர் சரக்கு விமான நிலையம் ஆகிய 2 விமான நிலையங்கள் நாடு முழுவதும் கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்து விநியோகத்தில் முக்கியப் பங்கினையாற்ற இருக்கின்றன.
- தேவையான வெப்பநிலைகளில் முக்கியமான சரக்கைக் கையாளுவதற்காக ஜிடிபி - எனும் சான்றளிக்கப்பட்ட, வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட வசதியுடன் கூடிய வகையிலான இந்தியாவின் முதலாவது மருத்துவ மண்டலம் ஜிஎம்ஆர் ஹைதராபாத் சரக்கு விமான நிலையமாகும்.
- ஸ்பைஸ் ஜெட் விமான நிறுவனமானது கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்தைக் கையாளுவதற்கு வேண்டி முழு அளவில் தயாராகிக் கொண்டிருக்கின்றது.

## பிராந்திய அளவில் தட்டம்மை ஒழிப்பு நோக்கிய செயல்பாடு 2000 - 2019

- இது உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் ஆகியவற்றினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, WHO பிராந்தியங்களில் ஆப்பிரிக்காவும் அதனைத் தொடர்ந்து ஐரோப்பாவும் அதிக எண்ணிக்கையிலான பாதிப்புகள் மற்றும் இறப்புகளைக் கொண்டுள்ளன.
- உகாண்டா நாடானது தட்டம்மை இறப்புகளில் 100% அளவிலான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான பச்சிளங் குழந்தைகள் தட்டம்மை நோய்த் தடுப்பு மருந்தைப் பெறாத 6 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- இந்தியாவானது மற்ற (மீதமுள்ள) 5 நாடுகளிடையே உலகின் மொத்த பாதிப்புகள் மற்றும் இறப்புகளில் பாதியளவு பாதிப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- நைஜீரியா, எத்தியோப்பியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை இதர மற்ற நாடுகளாகும்.


## சஃபாய் மித்ரா சுரக்சா சவால்

- பாதாள சாக்கடைகளில் அல்லது கழிவுநீர் தொட்டிகளில் எந்தவொரு மனிதரும் நுழையக் கூடாது என்பதை உறுதி செய்வதற்காக நகர்ப்புற அமைச்சகத்தால் இது தொடங்கப் பட்டுள்ளது.
- இது பாதாள சாக்கடைகளை அல்லது கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் மனிதர்களின் உயிர் பாதுகாப்பாகக் காப்பாற்றப்படுவதை உறுதிபடுத்துகிறது.
- கழிவுகளைச் சுத்தம் செய்ய இயந்திரங்களைக் கட்டாயமாக்கும் பொருட்டு, மனிதக் கழிவுகளை வெளியேற்றுதலுக்கு மனிதர்களைப் பணியமர்த்தலுக்குத் தடை மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை சமூக நீதித்துறை அமைச்சகம் திருத்தவுள்ளது
- மனிதன் நுழையும் சாக்கடைகள் (manhole) என்ற வார்த்தையை அதிகாரப்பூர்வ பயன்பாட்டில் இயந்திரம் நுழையும் சாக்கடை (machine hole) என்று மாற்றவும் முன்மொழியப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 31 ஆம் தேதிக்குள் அனைத்துப் பாதாள சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் பணிகளை இயந்திர மயம் ஆக்குவதாக மாநில அரசுகள் உறுதிமொழி எடுத்துள்ளன.
- இந்தியாவில், 1993 ஆம் ஆண்டில், மனிதக் கழிவுகளை வெளியேற்றுதலுக்கு வேண்டி மனிதர்களைப் பணியமர்த்தல் செய்வது தடை செய்யப் பட்டது.

## கலிசோ நடவடிக்கை

- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் சமீபத்தில் இந்த நடவடிக்கையைத் தொடங்கியது.
- இதன் கீழ், மும்பையில் நாடு கடந்த போதைப் பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டு, 504 கிராம் கோக்கெயின் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.
- இந்த இயக்குநரகம் மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரிய அதிகாரிகளால் நடத்தப் படுகிறது.
- இந்தியாவில் போதைப்பொருள் கடத்தல் அதிகமாக உள்ளது.

- ஏனெனில் இந்தியா உலகின் இரண்டு பெரிய அபின் உற்பத்திப் பகுதிகளுக்கு நடுவில் அமைந்துள்ளது.
- அவை தங்க முக்கோணம் மற்றும் தங்க பிறை என்பவையாகும்.
- தங்க முக்கோணப் பகுதி என்பது லாவோஸ், மியான்மர் மற்றும் தாய்லாந்து போன்ற பகுதிகளைக் குறிக்கிறது.
- தங்க பிறைப் பகுதி என்பது ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கியது.





## உமாங் செயலியின் சர்வதேசப் பதிப்பு

- மத்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ரவி சங்கர் பிரசாத் அவர்கள் உமாங் செயலியின் சர்வதேசப் பதிப்பைத் தொடங்கி வைத்தார்.
- இது ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர் மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றில் தொடங்கப் பட்டு உள்ளது.
- உமாங் (Unified Mobile Application for New-age Governance/UMANG) என்பது புதிய காலத்திய ஆளுகைக்கான ஒருங்கிணைந்த கைபேசி செயலி என்பதைக் குறிக்கின்றது.
- இது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் டிஜிட்டல் இந்தியா என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.
- இது முதன்மையாக பல்வேறு அரசுச் சேவைகளைப் பெற உதவுகின்றது.


## பூல்சங்கி நாவல்

- பூல்சங்கி (Phoolsunghi) என்ற ஒரு வரலாற்று நாவல் போஜ்புரி எழுத்தாளர் பாண்டே கபி என்பவரால் எழுதப் பட்டுள்ளது.
- இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்ட முதல் போஜ்புரி நாவலாக அமையும்.
- இது ஆய்வாளர் கௌதம் சௌபே அவர்களால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- போஜ்புரி என்பது வடகிழக்கு இந்தியப் பகுதி மற்றும் நேபாளத்தின் தராய் பகுதியில் பேசப்படுகின்ற ஒரு இந்தோ-ஆரிய மொழியாகும்.
- இது முக்கியமாக மேற்கு பீகார் மற்றும் கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் பேசப் படுகிறது.
- போஜ்புரியானது மகதி பிராகிருதத்தின் ஒரு வழித்தோன்றலாகும்.




- ❖ ராஜஸ்தானியுடன் சேர்த்து இரண்டும் இந்திய அரசியலமைப்பின் 8வது பட்டியலில் சேர்க்கப்பட வில்லை.

## ஏர் இந்தியா ஒன் - B777 விமானம்




- ❖ குடியரத் தலைவர் ராம் நாத் கோவிந்த் அவர்கள் டெல்லியில் இருந்து திருப்பதி வரை ஏர் இந்தியா ஒன்-B 777 விமானம் மூலமான முதல் அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
- ❖ ஏர் இந்தியா ஒன் என்பது இந்தியாவின் வி.வி.ஐ.பி. விமான வகையாகும்.
- ❖ இந்த விமானத்தை இந்தியாவின் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி மற்றும் பிரதமர் போன்றோர் பயன்படுத்த உள்ளனர்.
- ❖ இதே போன்று வி.வி.ஐ.பிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த பி 747-400 விமானத்தை விடவும் இது அதிக தூர வரம்பைக் கொண்டுள்ளது.
- ❖ புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள இந்திய விமானப்படை விமானத் தலைமையகத் தகவல் தொடர்புப் படையால் இது இயக்கப்பட உள்ளது.
- ❖ இது ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளது.

- ❖ இவ்வாறாக நிறுவப்பட்ட இந்தப் பாதுகாப்பு அமைப்பானது ஏர் இந்தியா ஒன் விமானத்தினை அமெரிக்காவின் ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்திற்கு இணையாகக் கொண்டு வருகிறது.
- ❖ இந்தியாவின் முதல் மூன்று அரசப் பிரமுகர்களை ஏற்றிச் செல்லும் இந்த வகையிலான மூன்று விமானங்களுக்கு ராஜ்தூத், ராஜ்ஹன்ஸ் மற்றும் ராஜ்கமல் என்று பெயரிடப் பட்டுள்ளது.

## இந்தியாவிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) முதலீட்டு செயல் திட்டம்

- ❖ ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் இன்வெஸ்ட் இந்தியா ஆகியவை இதனைத் தொடங்கியுள்ளன.
- ❖ இது SDG (Sustainable Development Goals) செயல்படுத்தப்படும் 6 துறைகளில் முதலீட்டு வாய்ப்பு உள்ள 18 பகுதிகளை அடையாளம் கண்டுள்ளது.
- ❖ கல்வி, சுகாதார நலம், விவசாயம், அது சார்ந்த நடவடிக்கைகள், நிதியியல் சேவைகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் & மாற்று வாய்ப்புகள் & நீடித்த சுற்றுச்சூழல் ஆகியவை இந்தப் பகுதிகளாகும்.




## அகில இந்திய சபாநாயகர்கள் கருத்தரங்கு

- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள் குஜராத்தின் கேவாடியாவில் 80வது அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ❖ 2 நாட்கள் நடைபெறும் இந்தக் கருத்தரங்கானது நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு தினத்தை அனுசரிப்பதற்காக மக்களவையினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கருத்தரங்கின் கருத்துரு, "சட்டத்துறை, நிர்வாகத் துறை மற்றும் நீதித் துறை ஆகியவற்றின் சுமூகமான ஒத்துழைப்பு – வலுவான மக்களாட்சிக்கான அம்சம்" என்பது ஆகும்.
- ❖ இந்தக் கருத்தரங்கின் தலைவர் மக்களவையின் சபாநாயகர் ஓம் பிர்லா ஆவார்.
- ❖ 2020 ஆம் ஆண்டானது சபாநாயகர்கள் மாநாட்டின் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப் படுகின்றது.
- ❖ அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடானது 1921 ஆம் ஆண்டில் தொடங்கியது.




# சர்வதேசச் செய்திகள்

## புவியிட ஒத்துழைப்பிற்கான அடிப்படைப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (BECA)

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை 3வது 2 + 2 அமைச்சரவைச் சந்திப்பின் போது கடைசி அடிப்படை ஒப்பந்தமான "BECA" (Basic Exchange and Cooperation Agreement for Geo-Spatial cooperation) என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது இராணுவ மற்றும் பொதுப் பயன்பாட்டிற்காக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கிடையே புவியிடம் தொடர்பான தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்கின்றது.
- இதற்கு முன்பு இந்த 2 நாடுகளும் 2016 ஆம் ஆண்டில் லெமோயா (LEMOA) என்ற ஒப்பந்தத்திலும் 2018 ஆம் ஆண்டில் கம்காசா (COMCASA) என்ற ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளன.


FOUNDATIONAL AGREEMENTS

**Logistics Exchange Memorandum of Agreement (LEMOA)**
- Provide logistic support, refuelling & berthing facilities for each other's warships & aircraft on barter/equal-value exchange basis
- Will not involve stationing of US troops on Indian soil. Nor will India extend support if US goes to war with "a friendly country"
- Good for US forces re-balancing to Asia Pacific. Indian forces rarely operate far away from their shores but access to Djibouti & Diego Garcia could be useful

**Communication Interoperability & Security Memorandum Agreement (CISMOA)**
- Technology enabler to help transfer high-tech avionics, encrypted communication & electronic systems to India
- US says CISMOA will boost 'interoperability' as well as ensure secrecy of its C4ISR (command, control, communications, computer, intelligence, surveillance and reconnaissance) systems
- But fears that US will be able to track & snoop on Indian warships/aircraft equipped with such systems

**Basic Exchange & Cooperation Agreement for Geo-Spatial Cooperation (BECA)**
- US says BECA will help India with advanced satellite & topographical data for long-range navigation & missile-targeting
- But India, which has its own satellite imaging capabilities, unwilling for American digital sensors to be positioned on its soil

## எமி கோனே பேரட் – அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் இணை நீதிபதி



- அமெரிக்க செனட் சபையானது பழமைவாத (கன்சர்வேட்டிவ்) நீதிபதியான எமி கோனே பேரட் என்பவருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.
- அதிபர் டொனால்டு டிரம்பால் பரிந்துரைக்கப்பட்ட இவர் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்ற இருக்கும் புதிய நீதிபதி ஆவார்.
- இவர் மறைந்த நீதிபதி ரூத் பேடர் ஜின்ஸ்பெர்க் என்பவரால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப உள்ளார்.
- ஜின்ஸ்பெர்க் என்பவர் முதலாவது யூதப் பெண் நீதிபதி மற்றும் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றிய 2வது பெண் நீதிபதி ஆவார்.
- அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் கன்சர்வேட்டிவ் குழுவினருக்கு 6-3 என்ற அளவில் பெரும்பான்மை வழங்கப் பட்டுள்ளது.
- அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் தற்பொழுது 9 நீதிபதிகள் உள்ளனர்.
- அமெரிக்காவில் ஒவ்வொரு நீதிபதியும் வாழ்நாள் முழுவதுமான பதவிக் காலத்தைக் கொண்டிருப்பர். அதாவது அவர்கள் பதவியிலிருந்து விலகல், ஓய்வு பெறுதல், இறப்பு, பதவி நீக்கம் ஆகிய தருணங்களைத் தவிர அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வாழ்நாள் முழுவதுமான பணிக் காலத்தைக் கொண்டிருப்பர்.

## 6வது பிரிக்ஸ் நாடாளுமன்ற மன்றம்

- மக்களவையின் சபாநாயகரான ஓம் பிர்லா தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவினர் 6வது பிரிக்ஸ் நாடாளுமன்ற மன்றத்தில் கலந்து கொண்டனர்.
- இது ரஷ்யாவின் கூட்டாட்சி மன்றமான டுமா என்ற அரச சபையின் தலைவரால் தலைமை தாங்கப் பட்டது.
- இதன் கருத்துரு, "உலக நிலைத் தன்மை, புத்தாக்க வளர்ச்சி மற்றும் பொதுப் பாதுகாப்பு ஆகியவற்றின் நலனில் பிரிக்ஸ் ஒத்துழைப்பு: நாடாளுமன்றப் பரிணாமம்" என்பது ஆகும்.

## மலபார் பயிற்சி 2020 – 24வது பதிப்பு

- 2020 ஆம் ஆண்டில் இந்தியா தலைமையிலான மலபார் கடற்படைப் பயிற்சியில் ஆஸ்திரேலியாவும் இணைய இருக்கின்றது.
- "குவாடு" (Quad) அல்லது நாற்கரம் எனப்படும் நான்கு பேர் கொண்ட ஒரு குழுவின் முதலாவது பயிற்சி இதுவாகும்.

- பசிபிக் ஒத்துழைப்பு நாற்கரம் என்பது ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட ஒரு குழுவாகும்.
- இந்தியாவானது மலபார் பயிற்சியை 1992 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவுடன் இணைந்து நடத்துகின்றது.
- 2015 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சியில் ஜப்பான் ஒரு வருடாந்திரப் பங்கேற்பாளராகப் பங்கேற்றது.
- இதன் முந்தைய நிரந்தரமற்ற பங்கேற்பாளர் சிங்கப்பூர் ஆகும்.
- இந்த வருடாந்திரப் பயிற்சியானது 2018 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் குவாம் கடற்கரையிலும் 2019 ஆம் ஆண்டில் ஜப்பான் கடற்கரைப் பகுதியிலும் நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு, இந்தப் பயிற்சியானது வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் ஆகிய பகுதிகளில் நடக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## இந்தியா-மத்திய ஆசியா பேச்சுவார்த்தை

- சமீபத்தில், இந்தியா-மத்திய ஆசியா பேச்சுவார்த்தையின் இரண்டாவது கூட்டத்தை இந்தியாவானது இணைய வழியில் நடத்தியது.
- தற்போது மத்திய ஆசிய நாடுகளுக்கு இந்தியாவானது கூடுதலாக ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு கடன் வரம்பை நீட்டித்துள்ளது.
- இந்தப் பேச்சுவார்த்தையின் முதல் கூட்டமானது 2019 ஆம் ஆண்டின் ஜனவரியில் உஸ்பெகிஸ்தான் குடியரசின் சமர்கண்டில் நடத்தப் பட்டது.
- இது இந்தியாவிற்கும் மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் இடையிலான அமைச்சர்கள் அளவிலான ஒரு பேச்சுவார்த்தையாகும்.
- பனிப் போருக்குப் பின்பு, 1991 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இந்த ஐந்து நாடுகளும் சுதந்திர நாடுகளாக உருவெடுத்தன.
- துர்க்மெனிஸ்தானைத் தவிர இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் அனைத்து நாடுகளும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர் நாடுகளாகும்.




## சிங்கப்பூர் பன்னாட்டு நடுவர் மையம்

- இது சிங்கப்பூரை மையமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற பன்னாட்டு நடுவர் அமைப்பு ஆகும்.
- இது தனது சொந்த நடுவர் விதிகள் மற்றும் சர்வதேச வர்த்தக சட்ட நடுவர் விதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையம் (United Nations Commission on International Trade

Law Arbitration Rules) ஆகியவற்றின் கீழ் மத்தியஸ்தங்களை நிர்வகிக்கிறது.

- ❖ சமீபத்தில், இது Future-ரிலையன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தை (Future-Reliance deal) நிறுத்தி வைத்து அமேசான் நிறுவனத்திற்கு ஆதரவாக தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.
- ❖ சிங்கப்பூர் பன்னாட்டு நடுவர் மையத்தை 485 வழக்குகளுக்காக நாடிய வகையில், இந்தியாவானது அதில் முதல் இடத்தில் இருக்கின்றது.
- ❖ இந்தியா தற்போது மும்பையில் தனது சொந்த சர்வதேச நடுவர் மையத்தைக் கொண்டுள்ளது.

## 'வரிகளுக்கு இடையேயான சிந்தனைகள்: ஆசிரியர்கள் பற்றி உலகம் உண்மையில் என்ன நினைக்கின்றது' - அறிக்கை

- ❖ இது இங்கிலாந்தை மையமாகக் கொண்ட வர்கி என்ற ஒரு அறக்கட்டளையால் வெளியிடப் பட்டது.
- ❖ இந்தியாவானது தனது ஆசிரியர்களை மதிப்பிடும் இந்தப் பட்டியலில் 35 நாடுகளில் ஆறாவது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் சீனா, கானா, சிங்கப்பூர், கனடா மற்றும் மலேசியா ஆகியவை இந்தியாவை விட முன்னணியில் உள்ளன.
- ❖ அரசாங்கச் செலவினங்களில் கல்விக்கான இந்தியாவின் செலவு 14 சதவீதமாகும்.

## சிலியில் வாக்கெடுப்பு


- ❖ சமீபத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், சிலி நாட்டு மக்கள் அந்த நாட்டின் கிட்டத்தட்ட நாற்பதாண்டு கால அரசியலமைப்பை மாற்றி மீண்டும் எழுதுவதற்கு ஆதரவாக பெருமளவில் வாக்களித்துள்ளனர்.
- ❖ புதிய அரசியலமைப்பை உருவாக்க 155 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் சிலி நாட்டு மக்கள் வாக்களித்துள்ளனர்.
- ❖ 1980களில் எந்தவொரு பிரபலமான உள்ளீடுகளும் இல்லாமல் சர்வாதிகாரியான பினோசேடின் (Pinochet) ஆட்சியின் போது தற்போதுள்ள அமைப்பு நிறுவப்பட்டது.

## இடப்பெயர்வு மற்றும் மேம்பாட்டு சுருக்கம் 33 - அறிக்கை

- ❖ இது உலக வங்கியால் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ சமீபத்திய வரலாற்றில் முதல்முறையாக, சர்வதேச புலம்பெயர்ந்தோரின் பங்கு 2020 ஆம் ஆண்டில் குறைய வாய்ப்புள்ளது.
- ❖ இது ஏனென்றால் புதிய இடம்பெயர்வு குறைந்து, திரும்பும் இடம்பெயர்வு அதிகரித்து உள்ளதால் ஏற்பட்டுள்ளது.
- ❖ குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்குப் பணம் அனுப்புவது 7 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து பணம் பெறவிருக்கும் முதல் 5 நாடுகள் இந்தியா, சீனா, மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ் மற்றும் எகிப்து ஆகியனவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## உலகளாவிய பருவகாலப் புதுப்பிப்பு அறிக்கை

- ❖ உலகப் பருவ கால காலநிலைப் புதுப்பிப்பு அறிக்கையானது உலக வானிலை அமைப்பினால் (World Meteorological Organization - WMO) தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ தற்பொழுது நீண்ட காலத்திற்கு முன்னெச்சரிக்கைகளை வெளியிடும் வகையில் WMO அமைப்பின் 13 உலகளாவிய வெளியீட்டு மையங்கள் உள்ளன.
- ❖ WMO அமைப்பின் படி, கடந்த 10 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்பு லா - நினோ நிகழ்வானது மத்திய மற்றும் கிழக்கு நிலநடுக்கோட்டுப் பசிபிக் கடலில் மீண்டும் நிகழ்கின்றது.
- ❖ 2021 ஆம் ஆண்டு வரை தொடரும் 2020 ஆம் ஆண்டின் லா நினோவானது மிதமானதில் இருந்து வலுவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ❖ லா நினோ என்பது மத்திய மற்றும் கிழக்கு நிலநடுக்கோட்டுப் பசிபிக் கடல் பகுதியில் அதன் மேற்பரப்பு வெப்பநிலையானது அதிக அளவில் குளிர்விக்கப் படுதலைக் குறிக்கின்றது.
- ❖ இது எல் நினோ தெற்கு அலைவுகளின் (El Niño Southern Oscillation- ENSO) வெப்பமான நிலையான எல் நினோ வானிலை மற்றும் காலநிலை மீது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
- ❖ இந்தியாவில், லா நினோவானது வழக்கமான மழைப் பொழிவை, விட அதிகமாக வெள்ளம் ஏற்படும் அளவிற்கு மழைப் பொழிவைத் தருகின்றது.




## கில்ஜிட் – பலுசிஸ்தான்


- ❖ பாகிஸ்தான் நாடானது “கில்ஜிட் - பலுசிஸ்தான்” பகுதிக்கு மாகாண அந்தஸ்து வழங்க முடிவு செய்துள்ளது.
- ❖ “கில்ஜிட் - பலுசிஸ்தான்” பகுதியை அந்நாட்டின் 5வது மாகாணமாக மாற்றும் பாகிஸ்தானின் முயற்சிக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
- ❖ இந்தியாவானது “ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஒன்றியப் பிரதேசங்கள்” கில்ஜிட்-பலுசிஸ்தான் பகுதியையும் உள்ளடக்கியது என்று அறிவித்துள்ளது.
- ❖ இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருடன் ஒரு புவியியல் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றது. இந்தியா இதனை லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் கருதுகின்றது.

- இது வடக்கில் சீனாவுடனும் மேற்கில் ஆப்கானிஸ்தானுடனும் தென்கிழக்கில் காஷ்மீருடனும் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றது.
- சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பெருவழிப் பாதையானது இந்தப் பகுதியின் வழியே செல்கின்றது.





## சாகர் - II திட்டம்

- இந்தியப் போர்க் கப்பலான ஐராவதம் கப்பல் சாகர்-II திட்டத்தின் ஒரு பகுதியாக தெற்கு சூடானில் நுழைந்துள்ளது.
- சாகர் திட்டத்தின் கீழ், இந்தியாவானது கோவிட் – 19 நோய்த் தொற்று மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கு உதவுவதற்காக வேண்டி நட்பு ரீதியில் அயல் நாடுகளுக்கு பல உதவிகளைத் தற்பொழுது அளித்து வருகின்றது.
- சாகர் – II திட்டத்தில், ஐஎன்எஸ் ஐராவதம் கப்பல் சூடான், டிஜிபோட்டி, தெற்கு சூடான் மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளுக்கு உணவுப் பொருட்களை வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்படுத்தப் படுகின்றது.
- சாகர் திட்டத்தின் முதலாவது நிலையின் கீழ், இந்தியாவானது செசல்ஸ், மடகாஸ்கர், கோமரோஸ், மொரீஷியஸ், மாலத் தீவுகள் ஆகிய நாடுகளுக்கு உதவி செய்தது.
- இந்த நிலையின் போது இந்தியா இலவச உணவு மற்றும் மருந்துகளை வழங்கியது.
- இந்தத் திட்டத்தின் முதல் பகுதியில், ஐஎன்எஸ் கேசரி என்ற கப்பலானது பயன்படுத்தப் பட்டது.
- சாகர் என்பது பிராந்தியத்தில் அனைவருக்குமான வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு (SAGAR- Security and Growth for All in the Region) என்பதைக் குறிக்கின்றது.
- இது இந்தியப் பெருங்கடல் பகுதியின் உத்திசார் தொலைநோக்குப் பார்வையின் கீழ் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.




## ஷி ஜின்பிங் - சீனா

- ஆளும் சீன கம்யூனிசக் கட்சியின் முழு அமர்வானது 14வது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2021 - 2025) உருவாக்கத்திற்கான பரிந்துரையை ஏற்றுக் கொண்டது.
- இது தேசியப் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு மற்றும் 2035 ஆம் ஆண்டிற்குள் நீண்ட காலக் குறிக்கோள்கள் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இந்தக் கட்சியானது 2035 ஆம் ஆண்டு வரை, அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஷி-ஜின்பிங் சீனாவின் அதிபராகத் தொடர ஒப்புதல் அளித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தமானது சீன அதிபருக்கான 2 ஐந்து ஆண்டு கால பதவி வரம்பினை நீக்கியது.



- இதற்கு முன்பு, இதற்கான அரசியலமைப்புத் திருத்தமானது (தடை) 1982 ஆம் ஆண்டில் டெங் ஜியோபிங் என்பவரால் மேற்கொள்ளப் பட்டது.
- இது 2 முறையிலான பதவிக் காலத்திற்கு மேல் சீன அதிபராக ஒரு நபர் பதவியில் தொடர்வதைத் தடுக்கின்றது.
- தற்போது சீன அதிபராக இருக்கும் இவருடைய பதவிக் காலம் 2022 ஆம் ஆண்டில் முடிவடைய இருக்கின்றது.
- இவர் அதிபர் பதவியுடன் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதி ஆகிய பொறுப்புகளையும் வகிக்கின்றார்.

## சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம்

- சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் புதிய தலைவராக போர்ச்சுகல் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினரான டுவர்டே பச்சேகோ தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இதற்கு முந்தையத் தலைவர் மெக்சிகோவின் பாராளுமன்ற உறுப்பினர் கேப்ரியல் கியூவாஸ் பரோன் ஆவார்.
- இந்த ஒன்றியத்தின் தலைவரே அந்த அமைப்பின் அரசியல் தலைவராவார்.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ளது.
- இது தேசியப் பாராளுமன்றங்களின் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- இது 1889 ஆம் ஆண்டில் உலகின் முதல் பலதரப்பு அரசியல் அமைப்பாக நிறுவப் பட்டது.
- இதன் முழக்கம் "ஜனநாயகத்திற்காக மற்றும் அனைவருக்காக" (For Democracy, For Everyone) என்பதாகும்.
- இதில் இந்தியாவை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தினார்.




## இந்தியாவால் முன்மொழியப்பட்ட ஐ.நா. தீர்மானம்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதல் குழுவானது இந்தியா முன்மொழிந்த இரு அணு ஆயுதக் குறைப்பு தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த தீர்மானங்கள் 'அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான ஒப்பந்தம்' மற்றும் 'அணுசக்தி ஆபத்தைக் குறைத்தல்' என்பதாகும்.
- ஐ.நா பொதுச் சபையின் முதல் குழுவானது ஆயுதக் குறைப்பைப் பற்றிய விவகாரத்தைக் கையாள்கிறது.
- இது ஜெனீவாவைச் சேர்ந்த ஆயுதக் குறைப்பு மாநாடு மற்றும் ஐ.நா. ஆயுதக் குறைப்பு ஆணையத்துடன் இணைந்து நெருக்கமான ஒத்துழைப்புடன் செயல்படுகிறது.

- அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான மாநாட்டின் தீர்மானம் 1982 ஆம் ஆண்டு முதல் இந்தியாவால் தாக்கல் செய்யப் பட்டு வருகிறது.

## காரட் - கூட்டுக் கடற்படைப் பயிற்சி

- வங்க தேசமும் அமெரிக்காவும் CARAT (காரட்) எனும் ஒரு கூட்டுக் கடற்படைப் பயிற்சியை நடத்தியுள்ளன.
- CARAT என்பது ஒத்துழைப்பு மிதவை தயார்நிலை மற்றும் பயிற்சி (Cooperation Afloat Readiness and Training) என்பதாகும்.
- சிட்டகாங்கில் இந்தப் பயிற்சி நடத்தப் பட்டது.
- இது அமெரிக்க பசிபிக் கடற்படையினால் வங்காள தேசம், கம்போடியா, புருனே, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் நடத்தப் படும் ஒரு வருடாந்திர இருதரப்பு இராணுவப் பயிற்சியாகும்.
- கோவிட்-19 தொற்று காரணமாக, இப்பயிற்சியானது இணைய வழியில் நடத்தப் பட்டது.

## எதிர்காலக் கொள்ளை நோய்களின் வாய்ப்புகள் குறித்த அறிக்கை

- சமீபத்தில் ஐபிபிஇஎஸ் (IPBES) என்ற அமைப்பானது எதிர்காலக் கொள்ளை நோய்கள் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 1918 ஆம் ஆண்டு இன்ஃபுளுயன்சா கொள்ளை நோய்க்குப் பிறகு கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த குறைந்தபட்ச 6வது கொள்ளை நோய் கோவிட் – 19 ஆகும்.
- மூன்று கொள்ளை நோய்கள் இன்ஃபுளுயன்சா வைரஸ்களினால் ஏற்படுகின்றன. அதில் ஒன்று எச்ஐவி என்பதும் அதற்கு அடுத்தது சார்ஸ் மற்றும் கோவிட் - 19 ஆகியனவும் ஆகும்.
- இதுவரை ஏற்பட்ட அனைத்துக் கொள்ளை நோய்களும் விலங்கு வழிப் பரவும் நோய்களாகும்.
- பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சூழலியல் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான அறிவியல் கொள்கைத் தளம் (IPBES) என்பது பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சூழலியல் சேவைகளின் பிரச்சினைகள் குறித்த அறிவியல் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றிற்கிடையேயான இடைமுகத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- 2012 ஆம் ஆண்டில் IPBES (Intergovernmental Science-Policy Platform on Biodiversity and Ecosystem) ஆனது ஐக்கிய நாடுகளினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- ஆனால் இது தன்னிச்சையாக செயல்படுகின்றது.
- இதன் தலைமையகம் ஜெர்மனியின் பான் நகரில் உள்ளது.

## 2020 ஆம் ஆண்டு அமெரிக்கத் தேர்தலின் சிறப்பம்சங்கள்

- அமெரிக்காவில் செனட் சபைக்குத் தேர்வான முதலாவது மூன்றாம் பாலினத்தவர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சாரா மெக்பிரைடு என்பவர் ஆவார்.
- இவர் தெலாவேர் மாகாணத்தில் வெற்றி பெற்றார்.
- இவர் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஸ்டீவ் வாஷிங்டன் என்பவரைத் தோற்கடித்தார்.

- வெர்மோன்ட்ஸின் டெய்லர் ஸ்மால் என்பவர் பிரதிநிதிகள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அதே நேரத்தில் ஒரு மாகாண சட்டப் பேரவைக்குத் இனத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது திருநம்பி கான்சாஸைச் சேர்ந்த ஸ்டீபைன் பயர்ஸ் என்பவராவார்.
- ஒக்லஹோமாவில், மாகாண சட்டமன்றத்தில் இடம் பிடித்த முதலாவது இருபாலின உறுப்பினர் மௌரி டயர்னர் என்வராவார்.
- டாக்டர் அமி பெரா, பிரமிளா ஜெயபால், ரோ கண்ணா மற்றும் ராஜா கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 4 இந்திய-அமெரிக்கர்கள் அமெரிக்கப் பிரதிநிதிகள் அவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



## அயல்நாட்டுப் பணியாளர்களுக்கான சுதந்திரம் – சவுதி அரேபியா

- சவுதி அரேபியாவானது அயல்நாட்டுப் பணியாளர்கள் தங்களது முதலாளிகளை மாற்றுவதன் மூலம் தமது பணிகளை மாற்றிக் கொள்வதற்கான உரிமை, தங்கள் முதலாளியின் ஒப்புதல் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறி விட்டு மீண்டும் நாட்டிற்குள் நுழைதல் மற்றும் இறுதி வெளியேறலுக்கான நுழைவு இசைவினைப் பெறுதல் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கவுள்ளது.
- இந்தச் சீர்திருத்தங்கள் தங்களது முதலாளிகளால் இடப்பெயர்வுத் தொழிலாளர்கள் சுரண்டப் படுவதை ஒழிக்கும்.

## கத்தாரின் முதலாவது தேசியத் தேர்தல்

- கத்தாரின் ஆட்சியாளரான எமீர் ஷேக் தமிம் பின் ஹமது அல்-தானி அவர்கள் அந்த நாட்டின் கொள்கையை மறு பரிசீலனை செய்வதற்காக வேண்டி ஒரு தேர்தல் நடத்தப் படும் என்று அறிவித்துள்ளார்.
- அந்தப் பிராந்தியத்தில் நிகழும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது நிகழ்வு இது ஆகும்.
- கத்தாரில் உள்ள சட்டங்கள் ஒரு சாதாரண ஆணையின் மூலம் திருத்தப்பட முடியும்.

## உடல் பருமன் குறியீடு – இந்தியா

- சமீபத்தில் பல்வேறு நாடுகளின் பிஎம்ஐ (உடல் பருமன் குறியீடு) என்பதின் மீதான ஒரு ஆய்வு முடிவானது ஒரு மருத்துவப் பத்திரிக்கையான தி லான்செட் என்ற பத்திரிகையில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது இந்தியாவை உடல் பருமன் அடிப்படையில் 196வது இடத்தில் தரவரிசைப் படுத்தியுள்ளது.

- இந்தியாவின் 19 வயது சிறுவர் மற்றும் சிறுமிகள் 20.1 % என்ற பிஎம்ஐ அளவைக் கொண்டுள்ளனர்.
- இந்தியாவானது குறைவான உடல் பருமன் குறியீட்டைக் கொண்டுள்ள 19 வயது நிரம்பிய சிறுமிகள் மற்றும் சிறுவர்களைக் கொண்ட நாடுகளிடையேயான தரவரிசையில் கீழ்நிலையில் இருந்து முறையே மூன்றாவது மற்றும் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- உடல் பருமன் குறியீடு என்பது உயரத்தின் செயல்பாட்டைக் குறிக்கின்றது. இது இந்தியப் பதின்ம வயதினர் உலகில் உயரம் குறைந்தவர்களாக உள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.
- இது எடையை (கிலோ கிராம் அலகால்) உயரத்தின் வர்க்க அடுக்கால் (மீட்டர் அலகால்) வகுத்து அளவிடப் படுகின்றது.
- வழக்கமான உடல் பருமன் குறியீடு ஆனது 20 முதல் 25 என்ற வரம்பிற்குள் இருக்கும்.

**LOWER BMI, SHORTER INDIANS**

**10 countries with lowest BMI in 2019 for boys** (19-year-olds)
Ethiopia (19.2), Niger (19.8), DR Congo (19.9), Senegal (20.1), India (20.1), Timor-Leste (20.3), Bangladesh (20.4), Central African Republic (20.5), Nepal (20.5), Chad (20.6)

**10 countries with lowest BMI in 2019 for girls** (19)
Timor-Leste (19.6), Romania (19.9), India (20.1), Vietnam (20.4), Madagascar (20.4), Sri Lanka (20.6), Cambodia (20.6), Myanmar (20.6), Bangladesh (20.6), Japan (20.6)
**Normal BMI: 20 to 25**

| Country | Mean height (cm) | Rank height | Mean BMI (kg/m2) | Rank BMI |
|---|---|---|---|---|
| MALES | | | m2: Height in metres squared | |
| UK | 178.2 | 39 | 23.5 | 60 |
| USA | 176.9 | 47 | 25.4 | 16 |
| China | 175.7 | 65 | 23 | 88 |
| **India** | **166.5** | **180** | **20.1** | **196** |
| France | 178.6 | 34 | 22.5 | 113 |

| Country | Mean height (cm) | Rank height | Mean BMI (kg/m2) | Rank BMI |
|---|---|---|---|---|
| FEMALES | | | | |
| UK | 163.9 | 49 | 23.8 | 50 |
| USA | 163.3 | 58 | 25.4 | 19 |
| China | 163.5 | 54 | 22.2 | 119 |
| **India** | **155.2** | **182** | **20.1** | **198** |
| France | 164.5 | 45 | 21.7 | 151 |

## முதலாவது இந்திய நார்டிக் பால்டிக் மாநாடு

- இந்த நாடுகள் எதிர்காலத்தில் பசுமை, திறன்மிகு, டிஜிட்டல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு ஒப்புக் கொண்டு உள்ளன.
- நார்வே, டென்மார்க், பின்லாந்து, சுவீடன், ஐஸ்லாந்து ஆகியவை நார்ட்டிக் குழும நாடுகளாகும்.
- லாத்வியா, லித்வேனியா மற்றும் எஸ்டோனியா ஆகியவை பால்டிக் குழும நாடுகள் ஆகும்.
- லாத்வியா ஆனது புவியியல் ரீதியாக இந்தியாவிற்கு ஒரு முக்கியமான நாடாகும்.
- லாத்வியா ஆனது "ஆம்பர் வழி" எனப்படும் ஒரு பழமையான பாதையின் மூலம் இணைக்கப் பட்டுள்ளது.
- இது முன்பு பால்டிக் மற்றும் வடக்கு கடல் போன்ற கடலோரப் பகுதிகளிலிருந்து ஆம்பர் என்ற பொருளை (பிசின் பொருள்) மத்தியத் தரைக் கடல் பகுதிக்குக் கொண்டு செல்லப் பயன்படுத்தியதால் "ஆம்பர் வழி" என்று அழைக்கப்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டில், இந்தியா மற்றும் நார்டிக்கின் முதலாவது மாநாடானது சுவீடனில் நடத்தப் பட்டது.

## இந்திய - இத்தாலி இருதரப்பு உச்சி மாநாடு

- இத்தாலியப் பிரதமரான கியூசெப் கோன்டேவுடன் பிரதமர் மோடி இணைய வழியிலான ஒரு இருதரப்பு உச்சி மாநாட்டை நடத்தி உள்ளார்.
- ஆற்றல், வர்த்தகம், கப்பல் கட்டுமானம் மற்றும் கலாச்சாரத் துறையில் 15 ஒப்பந்தங்களில் இரு தலைவர்களும் கையெழுத்திட உள்ளனர்.
- இந்தியாவில் குறிப்பாக பாதுகாப்புத் துறையில் இத்தாலிய முதலீடுகளின் சாத்தியங்களை இந்த உச்சி மாநாடு ஆராயவுள்ளது.
- 2020-24 செயல் திட்டம் இந்த உச்சி மாநாட்டின் போது வடிவமைக்கப்பட்டது.
- இந்த செயல் திட்டத்தின் நான்கு தூண்கள்,
  - பலதரப்பு மன்றங்களில் ஒருங்கிணைப்பு,
  - இருதரப்பு வர்த்தகத்தில் அரசியல் பேச்சுவார்த்தை,
  - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் கூட்டு மற்றும்
  - கலாச்சார ஒத்துழைப்பு.

## அமெரிக்கத் தேர்தல் 2020

- அமெரிக்காவின் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் 59வது அதிபர் தேர்தலானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் 3 அன்று நடைபெற்றது.
- ஜோ பிடன் 290 வாக்குகளை வென்று அமெரிக்க அதிபர் பதவியைக் கைப்பற்றி உள்ளார்.
- இவர் அமெரிக்காவின் 46வது அதிபராவார்.
- இவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமையில் பதவியேற்பார்.
- இவர் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 20 அன்று பதவியேற்க உள்ளார்.
- ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பிடன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் டிரம்பை வீழ்த்தி அதிபர் பதவியைக் கைப்பற்றி உள்ளார்.
- இந்தத் தேர்தல் முடிவு, 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் டொனால்ட் டிரம்பை ஒரு முறை மட்டுமே பதவி வகித்த அதிபராக மாற்றியுள்ளது.
- ஜோ பிடன் (78) அமெரிக்காவின் மிக வயதான அதிபராவார்.
- ஜோ பிடன் அமெரிக்காவின் 47வது துணை அதிபராக 2009 முதல் 2017 வரை பணியாற்றினார்.
- ஒபாமாவும் பிடனும் முதலில் 2008 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பின்னர் 2012 ஆம் ஆண்டில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- துணை அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மைக் பென்ஸைத் தோற்கடித்து உள்ளார்.
- அமெரிக்காவில் முதல் பெண், முதல் அமெரிக்க இந்திய நபர் மற்றும் முதல் கறுப்பினப் பெண் அமெரிக்காவின் துணை அதிபர் ஆனவர் என்ற பெருமையை இவர் பெறுவார்.
- அவரது தாயார் தமிழ்நாட்டில் மன்னார்குடிக்கு அருகிலுள்ள துளசேந்திரபுரம் என்ற ஒரு கிராமத்தில் பிறந்த ஓர் இந்திய அமெரிக்கராவார்.



### *தேர்தல் முறை*

- அமெரிக்க அரசியலமைப்பானது அதன் அதிபரை இரண்டு முறையிலான பதவிக் காலத்திற்கு மேல் அதிபர் பதவியில் நீடிக்க அனுமதிக்காது.
- நேரடியாகத் தேர்ந்தெடுக்க முடியாத இந்தத் தேர்தலில், ஐம்பது அமெரிக்க மாநிலங்கள் அல்லது வாஷிங்டன் டி.சியில் பதிவு செய்துள்ள அமெரிக்கக் குடிமக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வர்.
- இவர்கள் நேரடியாக அதிபருக்கு அல்லாமல், மாறாக தேர்வுக் குழுவிற்கு (electoral college) வாக்களிப்பார்கள்.
- இந்த வாக்காளர்கள் பின்னர் தேர்தல் வாக்குகள் என அழைக்கப்படும் நேரடி வாக்குகளை அதிபர் மற்றும் துணை அதிபர் ஆகியோருக்கு அளிப்பார்கள்.
- தேர்தல் வாக்குகளின் முழுமையான பெரும்பான்மையைப் பெறும் வேட்பாளர் (538 இல் குறைந்தது 270), அந்த அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.
- அமெரிக்காவில், தேர்தல்களை நடத்தும் பொறுப்பு அரசுச் செயலாளரிடம் (secretary of state) உள்ளது.
- சில மாநிலங்களில் அரசுச் செயலாளர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். மற்றவற்றில் அவர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான மாநிலங்கள் தேர்தலில் மின்னணு முறைகளை அனுமதிக்கின்றன.
- இருப்பினும், காகித வாக்குச் சீட்டுகள் நாடு முழுவதும் வழக்கமாக உள்ளன.
- அமெரிக்காவின் மூன்று தேர்தல்களும், அதாவது மத்திய அரசு, உள்ளாட்சி மற்றும் மாநிலங்கள் ஆகியவற்றுக்கு அந்தந்த மாநிலத்தின் அரசாங்கத்தால் நேரடியாக ஏற்பாடு செய்யப் படுகின்றன.
- இதில் வாக்குகளை எண்ணுவதற்கு முன் செயலாக்கம் என்று ஒரு நிலை உள்ளது.
- இந்தச் செயலாக்கத்தில் ஆவணங்களை சரி பார்த்தல், கையொப்பங்களை சரி பார்த்தல், வாக்குச் சீட்டுகளை சரி பார்த்தல் ஆகியவை அடங்கும்.
- பின்னர் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.
- அமெரிக்க அதிபரும் துணை அதிபரும் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுவது இல்லை.
- அதற்குப் பதிலாக, அவர்கள் "தேர்வுக் குழு" என்று அழைக்கப்படும் ஒரு செயல்முறையின் மூலம் "வாக்காளர்களால்" தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- அதிபர் வேட்பாளர் என்பவர்,
    - அமெரிக்காவில் பிறந்த அமெரிக்கக் குடிமகனாக இருக்க வேண்டும்.

- 14 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- குறைந்தது 35 வயது நிரம்பி இருக்க வேண்டும்.
- ஒரு நபர் இரண்டு முறைக்கு மேல் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாது.


***அமெரிக்க தேர்வுக் குழு அமைப்பு***

- அமெரிக்கா தனது அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேர்வுக் குழு முறையைப் பயன்படுத்துகிறது.
- அமெரிக்கத் தேர்வுக் குழு முறையின் கீழ், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட வாக்குகள் வழங்கப் படுகின்றன.
- ஒவ்வொரு மாநிலமும் அதன் மக்கள் தொகை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்காளர்களைப் பெறுகிறது.
- ஒவ்வொரு வாக்காளரும் பொதுத் தேர்தலில் ஒரு தேர்தல் வாக்கினை அளிப்பர்.
- ஒட்டு மொத்தமாக, மொத்தம் 538 தேர்தல் குழு வாக்குகள் உள்ளன.
- எனவே, ஒரு வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற 270 வாக்குகளை அடைய வேண்டும்.

## கல்வி சுதந்திரக் குறியீடு

- இது உலக நேரத் தொடர் தரவின் (1900-2019) ஒரு பகுதியாக உலகப் பொதுக் கொள்கை நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது உலக அளவில் கல்விச் சுதந்திரத்தின் நிலையை ஒப்பிடுகின்றது. இது கல்வியில் உள்ள குறைபாடுகளைப் புரிந்து கொள்வதை மேம்படுத்துகின்றது.
- இந்தியாவானது 0.352 மதிப்பெண்களைப் பெற்று கீழ் இடத்தைப் பிடித்துள்ளது.
- உருகுவே மற்றும் போர்ச்சுக்கல் ஆகியவை இந்தக் குறியீட்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ள நாடுகளாகும்.
- இதற்கு அடுத்து இதில் லாத்வியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இடம் பிடித்து உள்ளன.
- இந்தக் குறியீடானது அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35 நாடுகளுக்கான தரவை வெளியிடவில்லை.

Figure 1: Global Levels of Academic Freedom 2019: Status Groups According to the Academic Freedom Index




## உணவுக் கூட்டிணைவு

- ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது உணவுக் கூட்டிணைவைத் தொடங்கியுள்ளது.
- இது இத்தாலியினால் பரிந்துரைக்கப் பட்டதாகும்.


- இது வேளாண் உணவு முறைகளின் தாங்கு தன்மையை அதிகரிப்பதையும் உலக உணவு அணுகலை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஐக்கிய அரபு அமீரகத்தில் சீர்திருத்தங்கள்

- ஐக்கிய அரபு அமீரகமானது அந்நாட்டின் இஸ்லாமியர்களுக்கான தனிப்பட்டச் சட்டங்களில் பெரும் தளர்வுகளை அறிவித்துள்ளது.
- இது 21 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு மது அருந்துதல், மது விற்பனை மற்றும் அவற்றின் உடைமை போன்ற மது ரீதியான கட்டுப்பாடுகளைத் தளர்த்துகிறது.
- இது திருமணமாகாத தம்பதிகள் ஒன்றாக வசிப்பதை அனுமதிக்கிறது. மேலும் இது கௌரவக் கொலைகளைக் குற்றமாக்குகிறது.
- ஐக்கிய அரபு அமீரகமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் வரை துபாயில் உலகக் கண்காட்சியை நடத்த உள்ளது.

## டைக்ரே பகுதி

- எத்தியோப்பிய நாட்டின் வடக்கு டைக்ரே பிராந்தியத்தில் வன்முறைத் தாக்குதலை எதிர்த்துத் தாக்க எத்தியோப்பிய நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.
- டைக்ரே பகுதியானது எத்தியோப்பியாவின் வடக்கே உள்ளது.




## மகாத்மா காந்தி குறித்த சிறப்புத் தொகுப்பு


- மகாத்மா காந்தியின் 151வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக மகாத்மா காந்தி குறித்த ஒரு சித்திரத் தொகுப்பை நேபாள நாட்டு அதிபரான பித்யா தேவி பண்டாரி வெளியிட்டுள்ளார்.
- இந்தத் தொகுப்பானது நேபாளி மொழியில் எழுதப்பட்டுள்ளது.

## SCO மன்றத்தின் அரசத் தலைவர்களின் 20வது மாநாடு

- இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த மாநாட்டில் காணொலி வாயிலாகக் கலந்துரையாடினார்.
- இந்த மாநாடானது ரஷ்ய அதிபரான விளாடிமிர் புடின் அவர்களால் தலைமை தாங்கப் பட்டது.
- தற்பொழுது நடைபெற்று வரும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இந்த மாநாடானது ரஷ்யா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய உறுப்பு நாடுகளின் தலைவர்களால் கலந்து கொள்ளப் பட்டது.

- இந்த மாநாட்டில் SCO (Shanghai Cooperation Organization) அமைப்பில் பார்வையாளராக உள்ள ஈரான், ஆப்கானிஸ்தான், மங்கோலியா மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.
- இந்த அமைப்பில் முழு உறுப்பினர் அந்தஸ்து பெற்ற பின்பு இந்தியா கலந்து கொள்ளும் 3வது மாநாடு இதுவாகும்.
- இந்தியா 2017 ஆம் ஆண்டில் SCO அமைப்பின் முழு உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றது.
- தற்போதைய SCO மாநாடானது மாஸ்கோ பிரகடனத்தை ஏற்றுக் கொண்டு நிறைவு பெற்றது.

## கர்தார்பூர் பெருவழிப் பாதை




- பாகிஸ்தானின் குருத்வாரா அமைப்பான பாகிஸ்தான் சீக்கிய குருத்வாரா பிரபந்தக் குழு (PSGPL) கர்தார்பூர் பெருவழிப் பாதை தொடங்கப் பட்டதின் முதலாவது ஆண்டு தினத்தை அனுசரிக்க உள்ளது.
- இந்தப் பெரு வழிப் பாதையானது இந்தியாவில் உள்ள தேரா பாபா நானக்கை பாகிஸ்தானில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப்புடன் இணைக்கின்றது.

## ஷேக் கலீஃபா - பஹ்ரைன்

- பஹ்ரைனின் பிரதமர் ஷேக் கலீஃபா (84) அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- இவர் உலகில் பிரதமர் பதவியில் மிக நீண்ட காலம் இருந்தவராவார்.
- 1971 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து பஹ்ரைனின் பிரதமர் பதவியை இவர் வகித்து வந்தார்.



## PIWTT பாதை

- ❖ இந்தியாவானது வங்கதேசத்திலிருந்து நீர் வழியாக முதல் வணிக ரீதியிலான சரக்கு இறக்குமதியைப் பெற்றுள்ளது.
- ❖ உள்நாட்டு நீர் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து (PIWTT - Protocol for Inland Water Trade and Transit) என்ற பாதையில் அசாமின் கரிம்கஞ்ச் என்ற இடத்தில் இது பெறப்பட்டது.




## இங்கிலாந்தின் உள்நாட்டுச் சந்தை மசோதா

- ❖ 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குப் பின்னர் (பிரெக்சிட் மாற்ற காலம் - Brexit transition period) இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, மற்றும் வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகிய ஐக்கியப் பேரரசின் நான்கு நாடுகளுக்கும் வர்த்தக ஏற்பாடுகளை செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஐக்கியப் பேரரசு 2016 ஆம் ஆண்டு நடந்த ஒரு வாக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு அது வெளியேற வாக்களித்தது.
- ❖ பிப்ரவரி 1, 2020 அன்று ஐக்கியப் பேரரசு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியது.

## மியான்மர் தேர்தல் முடிவுகள்

- ❖ மியான்மர் நாட்டின் தலைவரான ஆங் சான் சூ கீ-யின் தேசிய ஜனநாயக லீக் கட்சியானது 2வது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளது.
- ❖ எனினும், சூ கீ அந்நாட்டின் அதிபராவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவருடைய மறைந்த கணவர் மற்றும் குழந்தை ஆகியோர் அயல்நாட்டுக் குடியுரிமை பெற்றவர்களாவர்.

## 17வது இந்தியா – ஆசியான் மாநாடு

- ❖ இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி அவர்கள் வியட்நாமின் பிரதமரான கியூயென் க்யான் பக் என்பவருடன் இணைந்து இந்தியா – ஆசியான் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- ❖ இந்த மாநாட்டின் போது, பிரதமர் அவர்கள் கோவிட் – 19 ஆசியான் மீட்பு நிதிக்கு இந்தியா 1 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி வழங்கும் என்று அறிவித்தார்.
- ❖ இந்த மாநாட்டின் போது 2021-25 ஆண்டிற்கான ஆசியான்-இந்தியா செயல் திட்டமானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- ஆசியான் ஆனது 2030 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய ஒற்றைச் சந்தையாளராக உருவெடுக்கவுள்ளது.
- இந்தியாவின் 4வது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளர் ஆசியான் ஆகும்.

## 15வது கிழக்கு ஆசிய மாநாடு

- இந்த மாநாடானது ஹா நொய் பிரகடனத்தை (Ha Noi Declaration) ஏற்றுக் கொண்டு உள்ளது.
- இது ப்னோம் பென்ஹ் பிரகடனத்தை (Phnom Penh Declaration) முன்னரே செயல்படுத்தும் வகையில் மணிலா செயல் திட்டத்தின் திறன்மிகு செயல்பாட்டின்மீது அழுத்தம் கொடுத்துள்ளது.
- இந்த மாநாடானது ஆசியான் அமைப்பின் தலைவர் என்ற முறையில் வியட்நாம் பிரதமரான க்யூயென் க்யான் பக் என்பவரால் தலைமை தாங்கப்பட்டது.
- இந்தியாவானது தென் சீனக் கடல் பகுதியில் தேய்ந்து வரும் நம்பிக்கைகள் குறித்த தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.
- சீனாவானது தென் சீனக் கடல் பகுதி முழுவதிலும் தனது இறையாண்மையைக் கோரி வருகின்றது.
- கிழக்கு ஆசிய மாநாடு என்பது ஆசிய-பசிபிக் பகுதியில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் உள்ள ஒரு தலைமை மன்றமாகும்.




## இடி (Thunder) நடவடிக்கை

- இண்டர்போல் (சர்வதேச காவல் துறை) மற்றும் உலக சுங்க அமைப்பு ஆகியவை இணைந்து 2020 ஆம் ஆண்டில், 103 நாடுகளில் இடி என்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.
- இந்த நடவடிக்கையானது சுற்றுச்சூழல் குற்றங்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டு உள்ளது.
- இண்டர்போலின் படி, வனவிலங்கு மற்றும் வனங்கள் ஆகியவற்றின் மீதான குற்றமானது உலகில் 4வது மிகப்பெரிய சட்ட விரோத வர்த்தமாக உள்ளது.
- இடி என்ற நடவடிக்கையின் படி, இந்திய சுங்கத் துறையானது ஐக்கிய அரபு அமீரகத்திற்கு கொண்டு செல்லப்பட இருந்த 18 டன்கள் சிவப்பு சந்தன மரங்களை பறிமுதல் செய்துள்ளது.

## RCEP : 15 நாடுகள் ஒப்பந்தம்

- சீனா மற்றும் இதர 14 நாடுகள் இணைந்து உலகின் மிகப்பெரிய வர்த்தகத் தொகுதியை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த 15 நாடுகளும் உலக மக்கள் தொகையில் 30% அளவினையும் உலகின் ஒட்டு மொத்த உற்பத்தியில் 30% என்ற அளவினையும் கொண்டுள்ளன.
- உலகின் மிகப்பெரிய வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தம் இதுவாகும்.
- சீனா மற்றும் ஜப்பான் ஆகியவை இருதரப்பு வரி (கட்டணம்) குறைப்பு ஏற்பாட்டை அடைவது இதுவே முதன்முறையாகும்.
- மேலும், சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவை ஒரே வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தத்தில் ஒன்றிணைவது இதுவே முதன்முறையாகும்.
- இந்த ஒப்பந்தமானது சுங்கக் கட்டணத்தை மேலும் குறைக்கவுள்ளது.
- மேலும் இது டிரான்ஸ்-பசிபிக் வர்த்தகத்தை விட குறைந்த அளவு விரிவாக்கம் கொண்டதாகும்.
- டிரான்ஸ் பசிபிக் பங்களிப்பிற்கான விரிவான மற்றும் செயல்பாட்டு ஒப்பந்தம் (Comprehensive and Progressive Agreement for Trans-Pacific Partnership - CPTPP) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக ஒப்பந்தம் ஆகியவற்றைப் போல் அல்லாமல், இது தொழிலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மீது தரங்களை நிர்ணயிக்கவில்லை.
- CPTPP ஆனது சிலியில் 2018 ஆம் ஆண்டில் கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், மெக்சிகோ, வியட்நாம், சிங்கப்பூர், பெரு, நியூசிலாந்து, மலேசியா, சிலி, புருனே ஆகிய நாடுகளுக்கிடையே கையெழுத்தானது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவானது சீனாவின் உற்பத்திப் பொருட்கள் இந்தியாவில் குவிக்கப் படும் என்ற காரணத்தினால் இந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியது.



## ஜி20 வரலாற்றுக் கடன் ஒப்பந்தம்

- கோவிட்டால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு உதவ ஒரு வரலாற்றுக் கடன் ஒப்பந்தத்தை ஜி20 அமைப்பானது ஏற்படுத்தி இருக்கிறது.
- அரசாங்கக் கடனை மறுசீரமைப்பதற்கான பொதுவான அணுகுமுறைக்கு ஜி20 ஒப்புக் கொண்டது இதுவே முதல் முறையாகும்.
- இதற்கான காரணம் கோவிட் நெருக்கடியானது ஏழை நாடுகளைத் தான் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாத நிலைக்குத் தள்ளக் கூடும் என்பதாகும்.
- இதன் செயல்பாட்டை அமெரிக்கா கண்காணிக்கும்.
- 2019 ஆம் ஆண்டில் ஜி20 நாடுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஒட்டு மொத்தக் கடனில் 63% அளவினை சீனா கொண்டு இருந்தது.
- கோவிட் காலத்தில், வாங்கிய கடனைத் தர இயலாத விளிம்பு நிலையில் உள்ள முதல் நாடாக ஆப்பிரிக்காவின் ஜாம்பியா உள்ளது.
- இந்தத் திட்டம் பாரிஸ் கிளப் என்ற குழுவால் நிறுவப்பட்ட விதிகளிலிருந்து பெரிதும் கடன் விதிமுறைகளைப் பெற்றுள்ளது.

### *பாரிஸ் கிளப் குழு*

- இது 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது பாரிஸில் மாதாந்திர அடிப்படையில் சந்திக்கும் ஒரு முறைசாராக் குழுவாகும்.
- இது கடனாளி நாடுகள் எதிர்கொள்ளும் கட்டணச் சிக்கல்களுக்குத் சாத்தியமான தீர்வுகளைக் காண்கிறது.
- இதில் 19 உறுப்பு நாடுகள் உள்ளன.
- அவற்றில் பெரும்பாலானவை ஸ்காண்டிநேவிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற நாடுகளாகும்.

## 3வது ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

- இந்தியா மற்றம் நேபாளம் ஆகிய நாடுகள் தமது எல்லைகளுக்கிடையே வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காகவும் முறைப்படுத்துவதற்காகவும் வேண்டி நேபாள்கன்ஞ்ச்சில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியின் (ICP - Integrated check post) கட்டுமானத்தை இணைந்து தொடங்கியுள்ளன.
- இந்திய – நேபாள எல்லையில் அமைந்த 3வது ICP இதுவாகும்.
- இதே போன்ற வசதிகள் பிர்கன்ஞ் மற்றும் பிரத்நகரில் 2018 ஏப்ரல் மாதம் மற்றும் 2020 ஜனவரி மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.
- இந்திய அரசானது நேபாளத்தின் பைராஹாவில் 4வது ICPயின் கட்டுமானத்தைத் தொடங்க உள்ளது.
- இந்தியாவானது வங்க தேசம் மற்றும் பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளுடன் இதே போன்ற ICPகளைக் கட்டமைத்து உள்ளது.

## டிரிஸ்டன் டா குன்ஹா

- இது சமீபத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ஒரு மிகப்பெரிய முழுவதும் பாதுகாக்கப்பட்ட கடல் காப்பகம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது ஐக்கியப் பேரரசின் ஒரு கடல் கடந்த ஆட்சிப் பகுதியாகும்.
- இது லண்டனில் இருந்து 6,000 மைல் தொலைவில் தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலில்

அமைந்துள்ளது.

- இதில் 300க்கும் குறைவான மனிதர்கள் வசிக்கின்றனர்.
- இத்தீவைச் சுற்றியுள்ள நீரானது உலகில் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தைக் கொண்டுள்ளது.
- இங்கிலாந்தின் நீலப் பட்டை திட்டத்தில் சேர்ந்த பிறகு இந்தத் தீவானது அட்லாண்டிக் பெருங்கடலில் மிகப்பெரிய நோ-டேக் மண்டலமாக (பாதுகாக்கப்பட்ட கடற் பகுதி) மாறும்.




## புவேர்ட்டோ ரிக்கோ

- அமெரிக்கப் பிராந்தியமான புவேர்ட்டோ ரிக்கோவானது பத்து ஆண்டுகளில் மூன்றாவது முறையாக தன்னை ஒரு தனி நாடாகக் கருதுமாறு வாக்களித்துள்ளது.
- அமெரிக்காவின் மற்ற 50 நாடுகளுடன் சேர்த்து இணையாக நடத்தப்பட வேண்டும் என்று அது கோருகிறது.
- அமெரிக்க அதிபர் தேர்தலில் புவேர்ட்டோ ரிக்கோவின் மக்கள் வாக்களிக்க முடியாது.
- இது கரீபியன் கடலில் அமைந்துள்ள ஸ்பானிஷ் மொழி பேசும் மக்கள் வாழும் ஒரு தீவாகும்.
- இது 1493 ஆம் ஆண்டில் கிறிஸ்டோபர் கொலம்பஸால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1917 ஆம் ஆண்டில், புவேர்ட்டோ ரிக்கோவின் மக்களுக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கப் பட்டது, ஆனால் இந்தத் தீவு ஒரு நாடாகக் கருதப் படவில்லை.
- குவாம், வடக்கு மரியானா தீவுகள், அமெரிக்க சமோவா மற்றும் அமெரிக்க விர்ஜின் தீவுகள் ஆகியவற்றுடன் இதுவும் "அமெரிக்கவின் ஒரு பகுதியாக" உள்ளது.
- இதே போல், வாஷிங்டன் டி.சி.யும் அமெரிக்காவின் 51வது நாடாக மாற வலியுறுத்தி வருகிறது.
- தேசியத் தலைநகரம் என்பது எந்த நாட்டின் ஒரு பகுதியாகவும் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் வாஷிங்டன் டி.சி.யானது 1776 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.

## 12வது பிரிக்ஸ் உச்சி மாநாடு

- இதை ரஷ்யா நடத்துகிறது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துருவானது "உலகளாவிய நிலைத்தன்மை, பகிரப்பட்ட பாதுகாப்பு மற்றும் புதுமையான வளர்ச்சி" என்பதாகும்.
- இது 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடத்தப் பட இருந்தது.

## மலபார் கடற்பயிற்சி

- இரண்டாம் கட்ட மலபார் கடற்பயிற்சியானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் 17 முதல் 2020 நவம்பர் 20 வரை வடக்கு அரபிக் கடலில் நடைபெறுகிறது.
- மலபார் பயிற்சியின் முதல் கட்டப் பயிற்சியானது 2020 ஆம் ஆண்டில் நவம்பர் 3, 2020 முதல் நவம்பர் 6, வரை வங்காள விரிகுடாவில் நடத்தப் பட்டது.
- மலபார் பயிற்சியின் இரண்டாம் கட்டப் பயிற்சியில் இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாட்டின் கடற்படைகள் பங்கேற்றன.
- நான்கு நாடுகளும் சேர்ந்து QUAD என்ற ஒரு குழுவை உருவாக்குவதால் இந்தப் பயிற்சி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- பத்தாண்டுகளில் இந்த நான்கு நாடுகள் சேர்ந்து இவ்வளவு பெரிய ஒரு கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

## டீம் ஹேலோ (Team Halo)

- ஐக்கிய நாடுகள் ஆனது இலண்டன் பல்கலைக்கழகத்தில் "நோய்த் தடுப்பு மருந்து உறுதித் திட்டத்துடன்" இணைந்து "டீம் ஹேலோ" என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்துகள் குறித்த தவறான தகவல்கள் பரவுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஜி20 உலகளாவிய பொலிவுறு நகரங்கள் கூட்டிணைவு

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF - World Economic Forum) பொலிவுறு நகரங்களுக்கான ஒரு செயல்திட்டத்தின் முன்னோட்டத்திற்காக 4 இந்திய நகரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இவை ஜி20 உலகளாவிய பொலிவுறு நகரங்கள் கூட்டிணைவினால் மேம்படுத்தப் படுகின்றன.
- இந்தூர், பெங்களூரு, பரிதாபாத் மற்றும் ஹைதராபாத் ஆகியவை இந்த 4 நகரங்கள் ஆகும்.

## தங்க அட்டை நுழைவு இசைவு

- சமீபத்தில் ஐக்கிய அரபு அமீரகமானது தங்க அட்டை நுழைவு இசைவு வழங்கப் படுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த நுழைவு இசைவானது குறிப்பிட்ட பல்கலைக்கழகத்திடமிருந்து தொழில்சார் வல்லுநர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், முனைவர் பட்டம் பெற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப் படுகின்றது.
- இதற்கு முன்பு, UAE ஆனது தங்களது வேலைவாய்ப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்ட அயல்நாட்டவர்களுக்கு மட்டும் புதுப்பிக்கத்தக்க நுழைவு இசைவை வழங்கியது.

## APEC மாநாடு

- ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் (APEC - Asia Pacific Economic Cooperation) உறுப்பினர்கள் மலேசியாவின் தலைமையின் கீழ் காணொலி வாயிலாக ஒரு அமைச்சரவைச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.
- APEC அமைப்பின் போகர் இலக்குகள் என்பது அதன் தலைமை முன்னெடுப்புகளில் ஒன்றாகும். இந்த இலக்குகளுக்கான கால உச்ச வரம்பு 2020 ஆம் ஆண்டு ஆகும்.

- இந்தியாவானது APEC அமைப்பில் உறுப்பினராக சேர்வதற்கு கோரிக்கை வைத்து உள்ளது.
- இந்தியாவானது பசிபிக் பகுதியை தனது எல்லையாகக் கொண்டிருக்காத காரணத்தினால் இந்தியாவை APEC அமைப்பானது தனது உறுப்பினராக சேர்க்காமல் உள்ளது.
- APEC அமைப்பின் இதர 21 உறுப்பினர்கள் நாடுகள் பசிபிக் கடலுடன் எல்லைப் பகுதியைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

## அமெரிக்கா மற்றும் பாரிஸ் ஒப்பந்தம்

- அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பிடன் அவர்கள், அமெரிக்கா பாரிஸ் ஒப்பந்தத்தில் மீண்டும் இணையும் என்று பொது வெளியில் அறிவித்துள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தமானது தொழில்மயமாக்கலுக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடப்படும் போது உலக வெப்பநிலை உயர்வை 2° செல்ஷியஸ் என்ற அளவிற்குள் கட்டுப்படுத்த வழிவகை செய்கின்றது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் பசுமை இல்ல வாயுக்களை உமிழும் 2வது மிகப்பெரிய நாடு அமெரிக்கா ஆகும்.

## ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 3வது வருடாந்திர ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றத்தில் உரை நிகழ்த்தினார்.
- இது 2018 ஆம் ஆண்டில் மிச்செல் ப்ளூம்பெர்க் என்பவரால் தொடங்கப்பட்டது.

## கர்ப்பப் பை கழுத்துப் புற்றுநோய் ஒழிப்பைத் துரிதப் படுத்துவதற்கு வேண்டிய ஒரு உலகளாவிய உத்தி

- 2020 ஆம் ஆண்டு நவம்பர் 17 அன்று நடத்தப்பட்ட 73வது உலக சுகாதார சபைக் கூட்டத்தின் போது, உலக சுகாதார அமைப்பானது (WHO - World Health Organization) இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இது 2050 ஆம் ஆண்டில் புதிய பாதிப்புகளில் 40% என்ற அளவிற்குப் பாதிப்புகள் ஏற்படுவதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதன்முறையாக WHO ஆனது உலகளவில் கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோயை ஒழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது.
- உலகில் உள்ள பெண்களிடையே ஏற்படும் 4வது மிகப் பொதுவான ஒரு புற்றுநோய் இதுவாகும்.
- உலக கர்ப்பப் பை கழுத்துப் புற்றுநோய் இறப்புகளின் நான்கில் ஒன்று இந்தியாவில் நிகழ்கின்றது.

## உலகின் சிறந்த நகரங்கள் 2021

- இது கனடாவின் ரிசோனன்ஸ் கன்சல்டன்சி என்ற ஒரு நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியா இந்தப் பட்டியலில் ஒரே ஒரு நகரத்தை மட்டுமே கொண்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் தில்லி 62வது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தப் பட்டியலில் தொடர்ந்து 6வது ஆண்டாக இலண்டன் முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.
- இதற்கு அடுத்து இந்தப் பட்டியலில் நியூயார்க், பாரிஸ், மாஸ்கோ மற்றும் டோக்கியோ ஆகிய நகரங்கள் உள்ளன.




## பாகிஸ்தானில் விஷ்ணு ஆலயம்

- 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்டுள்ளதாக நம்பப்படும் ஒரு விஷ்ணு ஆலயமானது சமீபத்தில் பாகிஸ்தான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொல்லியல் வல்லுநர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பானது வடமேற்கு பாகிஸ்தானின் ஸ்வாட் மாவட்டத்தில் உள்ள பாரிகோட் குண்டாய் என்ற மலை மீதான ஒரு அகழாய்வின் போது கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த ஆலயமானது இந்து ஷாகி ஆட்சிக் காலத்தில் போது (850-1026 CE) இந்துக்களால் கட்டப்பட்ட ஒரு இந்து ஆலயமாகும்.

## திபெத்திற்காக அயல்நாட்டில் அமைந்த நாடாளுமன்றம் (TPiE)

- TPiE (Tibetan Parliament-in-Exile) ஆனது இமாச்சலப் பிரதேசத்தின் காங்ரா மாவட்டத்தில் உள்ள தர்மசாலாவில் தனது தலைமையிடத்தைக் கொண்டுள்ளது.
- திபெத்தியர்கள் சொந்த நாடுகளிலிருந்து வெளியேறி இந்தியா மற்றும் உலகில் பிற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் அவர்களுக்கான அடுத்த TPiE அமைப்பைத் தேர்ந்தெடுக்க இருக்கின்றனர்.
- எனினும் இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாடும் இதனை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கவில்லை.

## ஆசியா-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) மாநாடு

- இந்த மாநாட்டின் போது போகர் இலக்குகளுக்கு (Bogor Goals) மாற்றாக புதிய 20 ஆண்டு கால வளர்ச்சிக்கான ஒரு தொலைநோக்குப் பார்வையான 'புட்ராஜ்ஜியா தொலைநோக்குப் பார்வை – 2040 (Putrajaya Vision 2040)' என்ற ஒரு கொள்கை ஆனது ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தக் காணொலி வாயிலான மாநாட்டிற்குப் பிறகு APEC தலைவர்கள் கோலாலம்பூர் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.
- 2020 ஆம் ஆண்டில் இந்த மாநாடானது மலேசியாவினால் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் அதிகாரப்பூர்வக் கருத்துரு "பகிரப்பட்ட வாய்ப்புகளின் மீதான செழுமையான எதிர்காலத்தை நோக்கி மனிதர்களின் சாத்தியக் கூறுகளை மேம்படுத்துதல் : ஒரு முன்னிலை மற்றும் முன்னுரிமைச் செயல்பாடு" என்பதாகும்.

- APEC என்பது பசிபிக் பகுதியில் உள்ள 21 உறுப்பினர் பொருளாதார நாடுகளைக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு மன்றமாகும். இது ஆசியா-பசிபிக் பகுதி முழுவதும் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கின்றது.
- APEC ஆனது சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு 1989 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.




## 15வது ஜி-20 தலைவர்கள் உச்சி மாநாடு


- இது 2020 ஆம் ஆண்டில் நடைபெறும் இரண்டாவது ஜி20 தலைவர்கள் கூட்டமாகும்.
- இந்த உச்சி மாநாட்டின் தலைமை சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அல் சவுத் ஆவார்.
- இதன் கருத்துரு '21 ஆம் நூற்றாண்டின் அனைவருக்குமான வாய்ப்புகளை உணர்ந்து கொள்வது' என்பதாகும்.
- சவுதி அரேபியா மற்றும் இத்தாலியுடன் ஜி20 முத்தரப்பு குழுவின் ஒரு பகுதியாக இந்தியா இருக்கும்.
- இது மூன்று உறுப்பினர் நாடுகளைக் கொண்ட ஒரு குழுவாகும்.
- இது தற்போதைய, முந்தைய மற்றும் அடுத்து தலைமை தாங்கும் நாடுகளால் ஆனது.
- ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 1 ஆம் தேதி இத்தாலி நாடு மேற்கொள்ளும்.
- 2021 ஆம் ஆண்டின் உச்சி மாநாடு இத்தாலியின் ரோம் நகரில் நடத்த திட்டமிடப் பட்டு உள்ளது.
- இந்தோனேசியா இந்த மாநாட்டை 2022 ஆம் ஆண்டில் நடத்த இருக்கின்றது.
- இந்தியா இந்த மாநாட்டை 2023 ஆம் ஆண்டில் டெல்லியில் நடத்த இருக்கின்றது.

## இந்தியா மற்றும் தாய்லாந்து - CORPAT

- 30வது இந்தோ-தாய் CORPAT (Coordinated Patrol) எனப்படும் ஒரு ஒருங்கிணைந்த கடற்படைப் பயிற்சி இந்தியக் கடற்படைக்கும் ராயல் தாய்லாந்துக் கடற்படைக்கும் இடையில் அந்தமான் கடல் பகுதியில் நடத்தப் பட்டது.
- CORPAT பயிற்சியானது பங்கேற்கும் கடற்படைகளுக்கு இடையில் ஒரு ஊடாடும் தன்மையை உருவாக்குகிறது.
- பிராந்தியத்தில் உள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற ஒரு திட்டத்தின் கீழ், இந்தியக் கடற்படையானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்குக் கண்காணிப்பு. மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணங்களுக்கு உதவுகிறது.
- இந்த முன்னெடுப்பின் பயனாளிகளுள் தாய்லாந்தும் ஒன்றாகும்.

- இந்தியாவும் தாய்லாந்தும் 2006 ஆம் ஆண்டு முதல் வருடாந்திர இருதரப்புப் பயிற்சியான MAITREE என்ற ஒரு பயிற்சியை நடத்துகின்றன.
- SITMEX என்பது இந்தியா – தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஒரு கடல்சார் பயிற்சியாகும்.

## உலகளாவிய லஞ்ச அபாயம் 2020




- இதை TRACE இன்டர்நேஷனல் என்ற ஒரு அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இது உலகின் முன்னணி லஞ்ச ஒழிப்பு மீதான ஒரு தர நிர்ணய அமைப்பாகும்.
- இந்தப் பட்டியலில் இந்தியா 77வது இடத்தில் உள்ளது.
- வட கொரியா, துர்க்மெனிஸ்தான், தெற்கு சூடான், வெனிசுலா மற்றும் எரித்திரியா ஆகியவை அதிக ஆபத்தில் உள்ளன.
- டென்மார்க், நார்வே, பின்லாந்து, சுவீடன் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இது குறைந்து காணப்படுகிறது.


## இந்தியா-லக்ஸம்பர்க் இணைய வழி உச்சி மாநாடு

- இந்தியாவும் லக்ஸம்பர்க்கும் கடந்த இருபது ஆண்டுகளில் முதல்முறையாக ஓர் தனித்த உச்சி மாநாட்டை நடத்தியுள்ளன.
- அமெரிக்கா மற்றும் மொரீஷியஸுக்கு அடுத்தபடியாக லக்ஸம்பர்க் நாடானது வெளிநாட்டு நிதி முதலீடுகளுக்கான மூன்றாவது பெரிய மூலமாகும்.
- லக்ஸம்பர்க் உலகின் இரண்டாவது பணக்கார நாடாகும்.
- லக்ஸம்பர்க் ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்று முக்கிய குறைந்த வரி விதிப்பு (Tax Haven) கொண்ட நாடுகளில் ஒன்றாகும்.
- மற்ற இரு நாடுகள் அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகும்.
- Tax Haven என்பது மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விதிக்கும் ஒரு நாட்டைக் குறிக்கின்றது.




## UNICRI அறிக்கை

- இந்த அறிக்கையானது "தவறான தகவல்கள் எனும் வைரஸை நிறுத்துதல் : கோவிட்-19 நோய்த் தொற்று காலத்தில், தீவிரவாதிகள், வன்முறைத் தீவிரவாதிகள் மற்றும் குற்றவியல் குழுக்களினால் பயன்படுத்தப்படும் சமூக ஊடகத்தின் தவறான பயன்பாடு" என்ற தலைப்பினைக் கொண்டது.
- இது ஐக்கிய நாடுகள் பிராந்தியங்களுக்கிடையேயான குற்றம் மற்றும் நீதி ஆராய்ச்சி மையத்தினால் (United Nations Interregional Crime and Justice Research Institute - UNICRI) வெளியிடப் பட்டுள்ளது.
- இது குற்றவாளிகள் மற்றும் வன்முறைத் தீவிரவாதிகள் ஆகியோர் தங்களது உதவி அமைப்புகளைக் கட்டமைத்தல், அரசிற்கு எதிரான செயல்பாடுகளைத் தீவிரப் படுத்துதல் மற்றும் வைரஸை ஆயுதமாகப் பயன்படுத்துதல் போன்றவற்றுக்காக இந்த நோய்த் தொற்றுக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று கூறி உள்ளது.
- அல்கொய்தா மற்றும் ஐஎஸ்ஐஎல் ஆகியவற்றோடுத் தொடர்புடைய குழுக்கள் சதி தொடர்பான கோட்பாடுகளைப் பரப்புவதற்கு கோவிட் - 19 நோய்த் தொற்று காலத்தைப் பயன்படுத்துகின்றனர்.
- உதாரணமாக, ஐஎஸ்ஐஎல் மற்றும் அல்கொய்தா ஆகியவை இந்த வைரஸ் மேற்கு நாடுகள் மீதான கடவுளின் கோபம் என்று கூறி வருகின்றன.



## 2020 ஆம் ஆண்டில் ஆசியா மற்றும் பசிபிக்கில் நீடித்த மேம்பாட்டிற்கான புவியிடங்காட்டி நடைமுறைகள்

- இந்த அறிக்கையானது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியா தற்போதைய நகரங்களின் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுவதில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது என்று கூறுகின்றது.
- இது "புவன்" என்பதனால் மேற்கொள்ளப் படும் செயல்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.
- "புவன்" (BHUVAN) என்பது இஸ்ரோவினால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் ஒரு தேசிய புவியிடங்காட்டித் தளமாகும்.
- இஸ்ரோவானது தேசிய அளவில் நோய்த் தொற்றைக் கண்காணிக்கவும் தற்போதைய நிலைமை குறித்து பொது மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவும் வேண்டி "புவன் - கோவிட்" என்ற ஒரு புவியிடங்காட்டித் தளத்தை உருவாக்கி அதனைத் திருத்தியமைத்து உள்ளது.

## ரோஹிங்கியா பிரச்சினை

- இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட ரோஹிங்கியா பிரச்சினைக்கு வேண்டிய ஒரு அவசரத் தீர்வினை வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகளானது ஏற்றுக் கொண்டது.
- இந்தத் தீர்மானமானது ரோஹிங்கியா மக்களுக்குக் குடியுரிமை வழங்குதல், தங்களின் இல்லங்களுக்கு அவர்கள் பாதுகாப்பாகவும் நிலையாகவும் திரும்புதல் உள்ளிட்ட ரோஹிங்கியாக்களின் பிரச்சினைக்கான மூலக் காரணத்தைக் களைவதற்கு மியான்மரின் சார்பாக குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வலியுறுத்துகின்றது.
- மேலும் இந்தத் தீர்மானமானது இடம்பெயர்ந்த ரோஹிங்கியாக்களுக்கு இடம் அளித்து உதவிய வங்கதேசத்தின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக வேண்டி அந்நாட்டைப் பாராட்டியுள்ளது.

## IPU அயலக தணிக்கையாளர்

- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரான கிரிஷ் சந்திர முர்மு அவர்கள் ஜெனீவாவில் உள்ள பாராளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியத்தின் (Inter Parliamentary Union - IPu) அயலகத் தணிக்கையாளராக 3 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவர் சுவிட்சர்லாந்தின் தலைமைத் தணிக்கை நிறுவனத்திலிருந்து தனது பொறுப்பை ஏற்க உள்ளார்.
- IPU என்பது 1889 ஆம் ஆண்டில் பிரான்சு மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியோரினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

## கோவிட் மூலமான தலைமுறை இழப்பைத் தவிர்த்தல் என்ற ஒரு அறிக்கை

- ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (UNICEF) இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இது கோவிட் நோய்த் தொற்றினால் குழந்தைகளுக்கான அதிகரித்து வரும் மோசமான விளைவுகளை விரிவான முறையில் எடுத்துக் காட்டும் ஒரு முதலாவது யுனிசெப் அறிக்கையாகும்.

## அர்ரியா திட்டம்

- இந்தியாவானது சமீபத்திய ஒரு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் “ஒரு உடனடியான விரிவான போர் நிறுத்தத்திற்கு” அழைப்பு விடுத்து உள்ளது.
- இது அர்ரியா என்ற ஒரு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது ஒரு UNSC உறுப்பினரின் கோரிக்கையைத் தொடர்ந்து அலுவல்சாரா முறையில் கூட்டப் படுகின்றது.

## திறந்த வான் ஒப்பந்தம்

- அமெரிக்காவானது இந்த ஒப்பந்தத்திலிருந்து தானாகவே முறையாக வெளியேறி உள்ளது.
- அமெரிக்காவின் கூற்றுப்படி, ரஷ்யாவானது இந்த ஒப்பந்தத்தின் கீழ் தனது விதிமுறைகளைத் தொடர்ந்து மீறி வருகின்றது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், அனைத்து உறுப்பு நாடுகளும் தங்களது வான்வெளிக் கண்காணிப்பின் மூலம் மற்ற நாடுகளின் இராணுவங்களைக் கண்காணிக்க முடியும்.
- இந்த ஒப்பந்தமானது உறுப்பு நாடுகள் மற்ற உறுப்பு நாடுகளின் வான்வெளி முழுவதையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- இதன் கீழ் எந்தவொரு பகுதியும் கட்டுப்படுத்தப் பட்ட வரம்பிற்கு உட்பட்டவை (தடை செய்யப் பட்டவை) என்று அந்தக் குறிப்பிட்ட ஒரு உறுப்பு நாட்டினால் கோர முடியாது.
- இந்த ஒப்பந்தமானது 35 நாடுகளினால் கையெழுத்திடப் பட்டது.
- இது 1992 ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு 2002 ஆம் ஆண்டில் கையெழுத்திடப் பட்டது.

## நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு குறித்த ஒரு சுகாதார உலகளாவிய தலைவர்கள் குழு

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் ஆனது G20 அமைப்பின் உறுப்பு நாடுகளைக் கொண்ட இந்த உலகளாவியக் குழுவைத் தொடங்கியுள்ளது.
- இது அதிகரித்து வரும் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பின் காரணமாகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இது உணவு மற்றும் வேளாண் அமைப்பு, உலக விலங்குகள் சுகாதார அமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இது பார்படாஸ் மற்றும் வங்கதேசம் ஆகிய நாட்டின் பிரதமர்களால் இணைந்து தலைமை தாங்கப் படுகின்றது

## அணுசக்தி கூட்டாண்மைக்கான உலகளாவிய மையம்

- அணுசக்தி கூட்டாண்மைக்கான உலகளாவிய மையத்தின் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தியாவும் அமெரிக்காவும் 10 ஆண்டுகள் நீட்டித்து உள்ளன.
- இது அணுசக்தித் துறையின் கீழ் நிறுவப் பட்டுள்ள ஹரியானாவில் உள்ள ஒரு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஆகும்.
- இது சர்வதேச சமூகத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது முதன் முதலில் நவம்பர் 2010 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- புதுடில்லியில் நடைபெற்ற 3வது 2 + 2 அமைச்சர்கள் மட்டத்திலான அமெரிக்க-இந்திய பேச்சுவார்த்தையின் போது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீட்டிக்க ஒப்புக் கொள்ளப் பட்டது.
- 2+2 என்பது இரு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சகங்களுக்கு இடையேயான ஒரு பேச்சுவார்த்தையாகும்.
- ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இந்தியா 2 + 2 பேச்சுவார்த்தையை நிறுவியுள்ளது.
- அமெரிக்காவும் இந்தியாவும் 2008 ஆம் ஆண்டில் முக்கியத்துவம் வாய்ந்த இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

## 2020 ஆப்கானிஸ்தான் மாநாடு

- இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் இணைந்து ஷாஹூத் அணையைக் கட்ட ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- ஆப்கானிஸ்தானில் உயர் தாக்கம் கொண்ட சமூக அபிவிருத்தித் திட்டங்களின் மீதான நான்காம் கட்டத்தையும் இந்தியா அறிவித்துள்ளது.
- ஜெனீவாவில் ஏற்பாடு செய்யப்பட்ட 2020 ஆப்கானிஸ்தான் மாநாட்டின் போது இது அறிவிக்கப் பட்டது.
- இந்த மாநாடு ஐ.நா, ஆப்கானிஸ்தான் அரசு மற்றும் பின்லாந்து அரசு ஆகியவற்றால் இணைந்து நடத்தப் பட்டது.
- இந்தியாவானது ஏற்கனவே டெலாரம் முதல் சாரஞ்ச் வரை (ஈரானிய எல்லை) 218 கி.மீ நீளம் கொண்ட சாலை கட்டுமானப் பணிகளை முடித்துள்ளது
- இது ஈரான் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு ஒரு மாற்று இணைப்பை வழங்குகிறது.
- மேலும் இந்தியா-ஆப்கானிஸ்தான் நட்பு அணை மற்றும் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றக் கட்டடத்தையும் கட்ட இந்தியா உதவியுள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## மாவட்ட அளவில் PFMS

- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது மாவட்ட அளவில் பொது நிதியியல் மேலாண்மை அமைப்பை (Public Financial Management - PFMS) செயல்படுத்திய நாட்டின் முதலாவது ஒன்றியப் பிரதேசமாக உருவெடுத்துள்ளது.
- PFMS என்பது இந்திய அரசின் தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர், செலவினத் துறை, நிதித்துறை அமைச்சகம், ஆகியவற்றினால் மேம்படுத்தப்பட்டு, செயல்படுத்தப் படும் இணைய வழி அடிப்படையிலான ஒரு நிகழ்நேர மென்பொருள் செயலியாகும்.
- PFMS ஆனது இந்திய அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியைக் கண்காணிப்பதற்காகவும் திட்டத்தைச் செயல்படுத்துதலில் அனைத்து நிலைகளிலும் அரசுச் செலவினத்தை நிகழ்நேரத்தில் பதிவு செய்வதற்காகவும் வேண்டி 2009 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

## METLDEX

- இந்தியாவின் பல்பொருள் பரிமாற்றமானது (Multi Commodity Exchange - MCX) மூல உலோகக் குறியீடான "METLDEX' என்ற குறியீட்டைத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியாவின் முதலாவது நிகழ்நேர மூல உலோக எதிர்காலக் குறியீடாகும்.
- தற்பொழுது வரை, உள்நாட்டு உலோக விலைகள் இலண்டன் உலோகப் பரிமாற்ற விலையுடன் சேர்த்து முன்னிலைப் படுத்தப்படுகின்றன.
- METLDEX என்பது துத்தநாகம், தாமிரம், நிக்கல், ஈயம் மற்றும் அலுமினியம் ஆகிய 5 மூல உலோகங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- METLDEX என்பது உலோகக் குறியீட்டின் சுருக்கமாகும்.
- MCX என்பது நாட்டில் முதன்மையான சரக்குப் பரிமாற்றச் சந்தையாகும்.

## தேசியத் திட்டம் மற்றும் திட்ட மேலாண்மை கொள்கைக் கட்டமைப்பு

- இதை நிதி ஆயோக் மற்றும் இந்தியத் தரநிர்ணய ஆணையமானது அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியாவில் உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் முறையில் தீவிர சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் வகையில் இது திட்டமிடப்பட்டுள்ளது.

## இந்தியாவில் மின்சார அணுகல் மற்றும் விநியோக பயன்பாடுகளைத் தரப்படுத்தல்

- நிதி ஆயோக் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 92% வாடிக்கையாளர்கள் தங்கள் வளாகத்திலிருந்து 50 மீட்டருக்குள் மின்சார உள்கட்டமைப்பைப் பெற்றுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியாவானது சராசரியாக ஒரு நாளைக்கு 17 மணிநேர மின்சாரம் பெற்று கொண்டிருக்கின்றது.
- இதில் ஏறக்குறைய 85% வாடிக்கையாளர்களுக்கு அளவி பொருத்தப்பட்ட மின்சார இணைப்பு (metered electricity connection) இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.
- மின்சாரக் கட்டமைப்பு வசதியுடன் இணைக்கப்பட்ட வீடுகள் நாட்டில் 59.4% முதல் 100% ஆக உயர்ந்துள்ளன.
- உத்தரப் பிரதேசமானது மற்ற மின்சார விநியோக நிறுவனங்களை விடவும் மிகக் குறைவாகவே திறனாற்றியுள்ளது.

## அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் - கட்டம் II மற்றும் கட்டம் III

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த இரண்டு கட்டங்களும் உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளன.
- இந்தியாவில் உள்ள 736 அணைகளைப் புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- இந்தத் திட்டம் மத்திய நீர் ஆணையத்தின் மத்திய அணைப் பாதுகாப்பு அமைப்பால் செயல்படுத்தப் படுகின்றது.
- பெரிய அணைகளின் எண்ணிக்கையில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்த படியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் 5,264 பெரிய அணைகள் உள்ளன மற்றும் 437 அணைகள் தற்போது கட்டுமானப் பணியில் உள்ளன.

## 2020 ஆம் ஆண்டின் உலகின் பாதுகாப்பான வங்கிகள்

- நியூயார்க்கை மையமாகக் கொண்ட ஒரு வர்த்தக வெளியீடான குளோபல் ஃபைனான்ஸ் (Global Finance) உலகின் பாதுகாப்பான வங்கிகளின் 29வது ஆண்டு தரவரிசையை அறிவித்துள்ளது.
- டிபிஎஸ் வங்கி தொடர்ச்சியாக 12வது ஆண்டாக 'ஆசியாவின் பாதுகாப்பான வங்கி' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மேலும், உலகின் பாதுகாப்பான வணிக வங்கியாக டிபிஎஸ் வங்கி 4வது இடத்தில் உள்ளது.
- இதன் தலைமையகம் சிங்கப்பூரில் உள்ளது.
- உலகின் பாதுகாப்பான வங்கிகள் 2020: கே.எஃப்.டபிள்யூ, ஜெர்மனி (முதலிடம்), ஜூச்சர் கன்டோனல் வங்கி, சுவிட்சர்லாந்து (இரண்டாம் இடம்) மற்றும் பி.என்.ஜி வங்கி, நெதர்லாந்து (மூன்றாம் இடம்) ஆகும்.
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவானது இந்திய நாட்டின் பாதுகாப்பான வங்கியாகும்.

| Rank | Company Name | Country | Fitch | Moody's | S&P | Total Score |
|---|---|---|---|---|---|---|
| 1 | KfW | Germany | AAA | Aaa | AAA | 30 |
| 2 | Zuercher Kantonalbank | Switzerland | AAA | Aaa | AAA | 30 |
| 3 | BNG Bank | Netherlands | AAA | Aaa | AAA | 30 |

## இந்தியாவில் வணிகம் செய்தல் குறித்த அறிக்கை – 2020

- இது ஐக்கிய இராஜ்ஜிய இந்திய வணிக மன்றத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டு முதல் 6வது முறையாக வெளியிடப்பட்டு இருக்கின்றது.
- வணிகம் செய்தலில் இந்தியாவின் மதிப்பெண் ஆனது 2019 ஆம் ஆண்டில் இருந்த 2.74 என்ற மதிப்பெண்ணிலிருந்து 2020 ஆம் ஆண்டில் 229 என்ற மதிபெண்ணாக மேம்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, தொடர்ந்து மூன்றாவது முறையாக மகாராஷ்டிரா மாநிலமானது அதிகபட்ச அளவில் சிறப்பாக மேம்பட்டு வரும் மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- இதற்கு அடுத்து கர்நாடகா, தில்லி, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## தொழில்துறை உறவுகள் குறியீடு 2020

- தொழில்துறை உறவுகள் குறியீடு, 2020 என்பதற்கான வரைவு விதிகளைத் தொழிலாளர் அமைச்சகமானது சமீபத்தில் அறிவித்தது.
- இந்த விதிகள் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் செயல்படுத்தப்பட உள்ளன.
- இந்த விதிகள் பின்வருவனவற்றை மாற்றி அமைக்கின்றன,
    - தொழில்துறைத் தீர்ப்பாயம் (மத்திய நடைமுறை) விதிகள், 1949
    - தொழில்துறைத் தீர்ப்பாயம் (மத்திய நடைமுறை) விதிகள், 1954
    - தொழில்துறை வேலைவாய்ப்பு (நிலை ஆணை) மத்திய விதிகள், 1946 மற்றும்
    - தொழில்துறைத் தகராறுகள் (மத்திய அரசு) விதிகள், 1957.
- இந்தப் புதிய விதிகளின் கீழ், 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள், தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அரசாங்க ஒப்புதலைப் பெற வேண்டும்.
- முன்னதாக, இந்த வரம்பு 100 ஊழியர்களாகும்.
- மேலும், நிறுவனங்களை மூடுவது என்றால் அரசாங்கத்திடம் 60 அல்லது 90 நாட்களுக்கு முன் ஒப்புதல் கோரிய பின்னரே செயல்படுத்தப் பட வேண்டும்.
- இது தொழிற்சங்கங்களுக்குச் சந்தாக் கட்டணங்களையும் பரிந்துரைக்கிறது.

## வாட்ஸ்அப் பண வழங்கீடு


- இந்திய தேசிய பண வழங்கீட்டுக் கழகமானது முகநூலிற்குச் சொந்தமான குறுஞ்செய்தி பரிமாறும் தளமான வாட்ஸ்அப்பிற்குத் தனது பண வழங்கீட்டுச் சேவையை நாட்டில் 'தரப்படுத்தப்பட்ட' முறையில் தொடங்க அனுமதித்துள்ளது.
- ஐசிஐசிஐ வங்கி, இந்தியன் வங்கி, ஆக்சிஸ் வங்கி, எச்.டி.எஃப்.சி வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆகிய ஐந்து வங்கிகளுடன் வாட்ஸ்அப் கூட்டு சேர்ந்துள்ளது.
- இந்த ஐந்து வங்கிகளைத் தவிர, ஜியோ கொடுப்பனவு வங்கியும் இதில் சேர்க்கப் பட்டு உள்ளது.
- ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் அல்லது யுபிஐ என்பது இந்திய தேசிய பண வழங்கீட்டுக் கழகம் உருவாக்கிய ஒரு உடனடி நிகழ்நேரக் கட்டண முறை ஆகும்.
- இது ஒரு சோதனைத் திட்டமாக ஏப்ரல் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இதை இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்துகிறது.

## பதினைந்தாவது நிதி ஆணைய அறிக்கை

- இது என் கே சிங் அவர்களால் தலைமை தாங்கப் படுகின்றது.
- 15வது நிதி ஆணையமானது இரண்டு அறிக்கைகளை வெளியிட வேண்டி இருந்தது.
- முதல் அறிக்கையில் 2020-21 நிதியாண்டிற்கான பரிந்துரைகள் இருந்தன.
- இது 2021/2026 காலத்திற்கான தனது இரண்டாவது அறிக்கையை இந்திய குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளது.
- இது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் தாக்கல் செய்யப் பட்டவுடன், அதன் பரிந்துரைகள் குறித்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மீதான ஒரு அறிக்கையுடன் பொதுவெளியில் கிடைக்கும்.

### *முக்கியமான பரிந்துரைகள்*

- மத்திய வரி வருவாயில் 41% மாநிலங்களுக்குக் கிடைக்கும்.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு 4.3 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு.
- சுகாதாரப் பராமரிப்புக்கு ரூ .1 லட்சம் மானியம்.
- 17 மாநிலங்களுக்கு ரூ .2.9 லட்சம் கோடி வருவாய்ப் பற்றாக்குறை மானியம்.
- முன்னதாக, பதினான்காவது நிதி ஆணையம் 42% என்ற அளவைப் பரிந்துரை செய்து இருந்தது.
- சுகாதாரத் திறன்களை மேம்படுத்துவதற்காக வேண்டி மாநிலங்கள் தங்கள் நிதி அறிக்கையில் குறைந்தது 8% என்ற அளவினை ஒதுக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டு உள்ளன.




- பாதுகாப்பு நவீனமயமாக்கல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நிதியத்தை அமைக்க இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

- இந்த நிதியானது 2021-26 ஆண்டிற்குள் ரூ.2.4 லட்சம் கோடி வரை சேர்க்கப்பட உள்ளது.
- இதில் ரூ .1.5 லட்சம் கோடியானது நேரடியாக இந்தியத் தொகுப்பு நிதிக்கு மாற்றப்பட உள்ளது.
- மாநிலங்களின் பங்கை நிர்ணயிக்கும் போது 15வது நிதி ஆணையம் பின்வரும் அளவுகோல்களைப் பயன்படுத்தி உள்ளது. அவையாவன
    - மாநில வருமானத்தின் பற்றாக்குறை அளவிற்கேற்ப 45%,
    - 2011 ஆம் ஆண்டில் கணக்கெடுக்கப்பட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப 15%,
    - மாநிலத்தின் பரப்பளவிற்கேற்ப 15%,
    - காடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப 10%,
    - மக்கள் தொகைசார் செயல்திறனுக்குஏற்ப 12.5%,
    - வரி முயற்சிக்கு (tax effort)ஏற்ப 2.5%.

| Criteria | 14th Finance Commission Weightage (2015-20) | 15th Finance Commission Weightage (2021-26) |
|---|---|---|
| Income Distance | 50.0 | 45.0 |
| Population - 1971 | 17.5 | ----- |
| Population - 2011 | 10.0 | 15.0 |
| Area | 15.0 | 15.0 |
| Forest Cover | 7.5 | ----- |
| Forest & Ecology | ----- | 10.0 |
| Demographic Performance | ----- | 12.5 |
| Tax Effort | ----- | 2.5 |
| Total | 100.00 | 100.00 |

- உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை 2020-21 ஆம் ஆண்டுகளுக்கான அதிகமான நிதிப் பகிர்வுகளைப் பெற்றுள்ளன.
- கர்நாடகா மற்றும் கேரளா ஆகியவை அதன் பங்குகளில் மிகப்பெரிய குறைவைக் கண்டுள்ளன.
- நிதி ஆணையத்தின் குறிப்பு விதிமுறைகள், மாநிலங்களுக்கு மானிய உதவிகளைப் பரிந்துரைக்க வேண்டும். இதில் பின்வருவன அடங்கும்
    - வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள்,
    - உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் மற்றும்
    - பேரிடர் மேலாண்மை மானியங்கள்.

## நிலக்கரி சுரங்க ஏலத்தின் முதலாவது பகுதி

- இந்த ஏலத்தின் முதலாவது பகுதியானது ரூ.7000 கோடி வருமானத்தை ஈட்ட இருக்கின்றது.
- ஏலம் விடப்பட்ட சுரங்கங்கள் ஒடிசா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ளன.
- சமீபத்தில் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வணிக ரீதியான சுரங்கத்திற்காக 41 தொகுதிகளில் ஏலச் செயல்முறையை இந்தியா தொடங்கியது.
- நிலக்கரியின் 2வது மிகப்பெரிய இறக்குமதியாளர் இந்தியா ஆகும்.
- உலகில் 5வது மிகப்பெரிய நிலக்கரி கையிருப்பு கொண்டு உள்ள நாடு இந்தியா ஆகும்.

## தேசியப் பொது இயக்கப் பற்று அட்டை

- கர்நாடக வங்கி நிறுவனமானது தேசியப் பொது இயக்கப் பற்று அட்டையை (National Common Mobility Debit - NCMC) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது அந்த வங்கியின் முதலாவது நேரடி தொடர்பற்ற பற்று அட்டை மற்றும் முன்கூட்டியே செலுத்தப் பட்ட ஒரு ரூபே அட்டையாகும்.
- இது பல்வேறு தளங்களில் இயங்கக் கூடிய ஒரு போக்குவரத்து அட்டையாகும்.
- இந்தப் பற்று அட்டையானது மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் தொலைநோக்குப் பார்வையின் வரிசையில் தொடங்கப் பட்டு உள்ளது.




## எம்எஸ்எம்இ பணி உருவாக்கம்

- இந்த அறிக்கையானது இந்திய ரிசர்வ் வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது.
- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையில் (Micro, Small & Medium Enterprises - MSME) அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ள மாநிலங்களின் பட்டியலில் மகாராஷ்டிரா முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் தமிழ்நாடு, குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை மகாராஷ்டிராவிற்குப் பிறகு முன்னிலையில் உள்ள 4 மாநிலங்களாகும்.
- முதல் 10 மாநிலங்களின் பட்டியலில் கர்நாடகா, ராஜஸ்தான், தில்லி, ஹரியானா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களுக்கு முன்பாக உத்தரப் பிரதேசமானது தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் MSME வரிசையின் கீழ் “ஒரு மாவட்டம் ஒரு பொருள்” என்ற ஒரு தொலைநோக்குத் திட்டமானது நோய்த் தொற்று காலத்தில் மிக முக்கியமானதாக உருவெடுத்துள்ளது.

## PM-KUSUM திட்டம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது PM-KUSUM இலக்கை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 30.8 ஜிகாவாட் (25.7 ஜிகாவாட்டிலிருந்து) சூரிய மின்சக்தியை அடைய வேண்டும் என்பது இந்தத் திட்டத்தின் புதிய இலக்காக மேம்படுத்தப் பட்டுள்ளது.
- விவசாயிகளுக்கு சூரிய ஆற்றலால் இயங்கும் பம்புகள் மற்றும் பிற புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ உதவும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப் பட்டது.

## ஆத்ம நிர்பர் பாரத் ரோஸ்கர் யோஜனா

- இது ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் கீழ் நான்காவது பொருளாதார ஊக்கத் தொகுப்பாகும்.
- கோவிட் - 19 மீட்புக் கட்டத்தில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக இது தொடங்கப் படுகிறது.
- ரூ.15,000க்கும் குறைவான மாத ஊதியத்தோடு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் உள்ள ஊழியர்களுக்கு இது பயனளிக்கும்.

## கோவிட் சுரக்சா திட்டம்

- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கோவிட் சுரக்சா என்ற திட்டத்தை அறிவித்தார்.
- இந்தப் பணியின் கீழ், இந்தியாவில் கோவிட் -19 தடுப்பூசிகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்காக இந்திய அரசு ரூ.900 கோடி ஒதுக்கியுள்ளது.
- இதில் ஒதுக்கப்பட்ட நிதி தடுப்பூசிகளின் செலவு மற்றும் விநியோகத்தை கணக்கில் கொள்ளாது.
- தற்போது இந்தியாவில் மூன்று தடுப்பூசிகள் பரிசோதனையில் உள்ளன.
- அவை கோவாக்சின், கோவிஷீல்ட் மற்றும் ஜைகோவ்-டி ஆகும்.
- கோவாக்சின் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் மற்றும் பாரத் பயோடெக்கால் உருவாக்கப் பட்டது.
- கோவிஷீல்டை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் சீரம் தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- ஜைகோவ்-டி தடுப்பூசியை சைடஸ் காடிலா நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- இரஷ்ய தடுப்பூசியான ஸ்பூட்னிக் வி என்ற தடுப்பூசியும் நாட்டில் சோதனையில் உள்ளது.

## வரலாறு காணாத மந்தநிலையில் இந்தியா

- இந்திய ரிசர்வ் வங்கியானது முதன்முறையாக 'nowcast' என்பதை வெளியிட்டுள்ளது.
- இது உயர் அதிர்வெண் தரவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதிப்பீடாகும்.
- இந்தியா தனது வரலாற்றில் முதல் முறையாக 2020-21 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தொழில்நுட்ப ரீதியிலான பொருளாதார மந்த நிலைக்குள் (இரண்டு காலாண்டுகளாகத் தொடர்ந்து பொருளாதார மந்தநிலை) நுழைந்துள்ளது.
- ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, இந்தியாவின் பொருளாதாரம் இரண்டாவது காலாண்டிலும் (ஜூலை முதல் செப்டம்பர் வரை) சரிந்துள்ளது.
- செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.6 சதவீதமாக சுருங்கி உள்ளது.
- ஏப்ரல் முதல் ஜூன் வரை பொருளாதாரம் சுமார் 24 சதவீதம் வரை சரிந்துள்ளது.
- மந்தநிலை என்ற சொல் பொருளாதாரத்தின் பொதுவான நடவடிக்கைகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க சரிவைக் குறிக்கிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நிலையைக் கணக்கில் கொண்டு, இது இரண்டு காலாண்டுகளாக தொடர்ச்சியான பொருளாதார வீழ்ச்சியின் நிலையாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## ரிசர்வ் வங்கி புத்தாக்க மையம்

- இன்போசிஸின் முன்னாள் இணைத் தலைவரான கிரிஸ் கோபாலகிருஷ்ணன் அவர்கள் ரிசர்வ் வங்கி புத்தாக்க மையத்தின் முதல் தலைவராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- ரிசர்வ் வங்கி புத்தாக்க மையமானது நிதிச் சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கான அணுகலை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையில் ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கும்.

## லட்சுமி விலாஸ் வங்கி

- சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது 30 நாட்கள் கால அளவிற்கு இந்திய லட்சுமி விலாஸ் வங்கியின் மீது ஒரு தற்காலிகச் செயல் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.
- இது சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு வங்கியாகும்.
- லட்சுமி விலாஸ் வங்கியானது சிங்கப்பூரின் டிபிஎஸ் வங்கியுடன் இணைக்கப்பட உள்ளது.
- வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்தம்) சட்டமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இதன்படி ரிசர்வ் வங்கியானது தற்காலிக செயல் நிறுத்தத்தை மேற்கொள்ளாமலும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

## தனியார் துறை வங்கிகள் - சீர்திருத்தங்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது இந்தியாவில் உள்ள தனியார் துறை வங்கிகளுக்கான பெருநிறுவன நிர்வாக அமைப்பு முறை மற்றும் தற்பொழுதுள்ள உரிமை வழிகாட்டுதல்களை ஆய்வு செய்ய உள்ளகப் பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இது ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தின் இயக்குநரான பிரசன்ன குமார் மொஹந்தி அவர்களால் தலைமை தாங்கப்படுகின்றது.

## பிரதான் மந்திரி மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டம்

- இந்தத் திட்டத்தின் திறன் மேம்பாட்டுக் கூறுகளை உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ஆத்ம நிர்பர் பாரத் அபியான் என்ற ஒரு திட்டத்தின் கீழ் இது தொடங்கப்பட்டது.
- இது உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தால் செயல்படுத்தப் படுகிறது.
- இது மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது 2020-21 ஆண்டு முதல் 2024-25 ஆண்டு வரை ஒரு ஐந்து ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்பட உள்ளது.
- மேலும் 2022 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாடு, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய இது உதவும்.
- சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் இருபது வெவ்வேறு வேளாண் காலநிலைப் பகுதிகள் உள்ளன.
- மழை, மண் வகைகள், வெப்பநிலை மற்றும் நீர் ஆகியவை கிடைப்பதன் அடிப்படையில் வேளாண்-காலநிலைப் பகுதிகள் வரையறுக்கப் படுகின்றன.

## கிரானா திட்டம்

- மாஸ்டர் கார்டு மற்றும் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க நிறுவனம் (United States Agency for International Development-USAID) ஆகியவை "கிரானா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- இந்தத் திட்டமானது பெண் தொழில்முனைவோர்களுக்கான வருவாய் அதிகரிப்பு, டிஜிட்டல் பணவழங்கீடுகள் மற்றும் நிதியியல் உள்ளடக்கத்தை விரிவுபடுத்தல் ஆகியவற்றிற்காகப் பணியாற்ற இருக்கின்றது.
- இது உத்தரப் பிரதேசத்தில் உள்ள கான்பூர், லக்னோ, மற்றும் வாரணாசி போன்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்படும் ஒரு 2 ஆண்டு காலத் திட்டம் ஆகும்.
- இந்தியாவில் மிக அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.
- மேலும், இந்தியாவில் உத்தரப் பிரதேசமானது அதிக எண்ணிக்கையிலான எம்எஸ்எம்இ (MSME) வகை நிறுவனங்களைக் கொண்டுள்ளது.
- USAID என்பது சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க நிறுவனம் என்பதைக் குறிக்கின்றது.
- இது அயல்நாட்டு உதவி மற்றும் மேம்பாட்டு உதவி ஆகியவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு மிக்க ஒரு தனிச்சுதந்திர நிறுவனமாகும்.

## நுண் நீர்ப்பாசனத் திட்டங்கள்

- மத்திய வேளாண் துறை அமைச்சகமானது இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ. 3,971.31 கோடி மதிப்பிலான மானியக் கடன்களுக்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்தக் கடன்கள் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட நுண் நீர்ப்பாசன நிதியின் கீழ் வழங்கப் படுகின்றது.
- இதில் அதிகபட்சக் கடன் தொகையானது தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## சஹாகர் பிரக்யா

- இந்திய அரசானது ஆத்ம நிர்பர் பாரத் அபியானில் மிகப்பெரிய ஒரு பங்களிப்பை அளிக்கும் முதன்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் நோக்கத்துடன் இதனைத் தொடங்கியுள்ளது.
- இது நாட்டில் இதே போன்று உள்ள துறைகளில் தொடர்பு கொண்டுள்ள விவசாயிகளுக்காக வேண்டிய முன்னெடுப்புகளைக் கட்டமைக்கும் திறனுள்ள ஒரு புத்தாக்கத் திட்டமாகும்.
- இதன் கீழ், நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள முதன்மைக் கூட்டுறவு அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தினால் பயிற்சி அளிக்கப் படவுள்ளனர்.

## தேசிய உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி


- மத்திய அமைச்சரவையானது ரூ.6000 கோடி அளவிலான மூலதனத்தை தேசிய உள்கட்டமைப்பு முதலீட்டு நிதிக்குள் உட்செலுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது ஆத்ம நிர்பர் (சுயசார்பு இந்தியா) பாரத் அபியானின் ஒரு பகுதியாகும்.

- இந்த நடவடிக்கையானது 1 இலட்சம் கோடி நிதி ஆதாரத்தை உருவாக்குவதற்கு வழிவகை செய்யும்.
- இந்த நிதியானது 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய அரசினால் உருவாக்கப் பட்டது.
- இந்த நிதியை உருவாக்குவதன் முக்கிய நோக்கம் புதிதாக மற்றும் ஏற்கனவே உள்ள திட்டங்களில் முதலீடு செய்தலை அதிகரிப்பதாகும்.
- இது சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்புத் திட்டங்களை உள்ளடக்கி இருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்திஜென் திட்டம் 2019

- அறிவியல்சார் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி மன்றமானது (Council of scientific and Industrial Research- CIIR) 2019 ஆம் ஆண்டில் இந்திஜென் (IndiGen) திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- இந்தத் திட்டமானது இந்தியாவில் உள்ள பல்வேறு மக்கள் குழுக்களிடமிருந்துப் பெறப்பட்ட மரபணுத் தொடர் வரிசைகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள, ஆரோக்கியமாக உள்ளனர் என்று தானாகவே அறிவிக்கப்பட்ட, 1029 இந்தியர்களின் மரபணுத் தொடராக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இந்தத் திட்டமானது நோய்த் தடுப்பு மற்றும் நோய்க் கண்டறிதல் குறித்த மருத்துவ நடவடிக்கைகளுக்குப் பொருந்தக் கூடிய தீர்வுகளைக் கண்டறியவுள்ளது.
- இது மரபணுத் தொற்று நோயியல் பற்றி அறிய வழிவகை செய்யும்.
- இதன் கீழ், இந்த ஆய்வானது CSIR, மத்திய மரபணு மற்றும் மூலக்கூறு உயிரியியல் மையம் (CSIR-CCMB) மற்றும் மரபியல் & ஒருங்கிணைந்த உயிரியல் மையம் (CSIR-IGIB) ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வின்படி, உலக அளவில் ஒப்பிடுகையில் 32.6 இந்திய மரபணுத் தொடராக்கக் கூறுகள் தனித்துவம் மிக்கவையாக உள்ளன.
- இந்தியாவில் உள்ள மரபணுப் பன்முகத் தன்மை மற்றும் அதிகமான மக்கள் அடர்த்தி ஆகியவை இதற்குக் காரணமாக உள்ளன.
- உலகில் மரபணுத் திட்டத்தைத் தொடங்கிய முதலாவது நாடு ஐக்கிய இராஜ்ஜியம் ஆகும்.




## ஹைட்ரஜன் உற்பத்தி தொழில்நுட்பம்

- இந்திய அறிவியல் நிறுவனம் மற்றும் இந்திய எண்ணெய்க் கழக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஆகியவை உயிரிவாயு உருவாக்கம் (biomass gasification) சார்ந்த ஹைட்ரஜன் உற்பத்தித் தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இது எரிபொருள் மின்கலனின் (Fuel Cell) தரத்தில் ஹைட்ரஜனை மலிவு விலையில் உற்பத்தி செய்யவுள்ளது.
- ஃபரிதாபாத்தில் உள்ள இந்திய எண்ணெய் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் இந்தத் தொழில்நுட்பம் விளக்கிக் காட்டப்பட உள்ளது.

## SERB - POWER முன்னெடுப்பு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் அவர்கள் இந்த முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது இந்தியக் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி & வளர்ச்சி ஆய்வகங்களில் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான நிதியளிப்புத் திட்டங்களில் பாலின பாகுபாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பெண் விஞ்ஞானிகளுக்காக என்று பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்டதாகும்.
- SERB என்பது அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (Science and Engineering Research Board) என்பதைக் குறிக்கின்றது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- POWER என்பது ஆய்வு ஆராய்ச்சியில் பெண்களுக்கான வாய்ப்புகளை ஊக்கப் படுத்துதல் (Promoting Opportunities for Women in Exploratory Research) என்பதைக் குறிக்கின்றது.




## 16 சைக்

- இந்தச் சிறுகோளானது முழுவதுமாக உலோகத்தால் செய்யப் பட்டிருக்கலாம் என்று சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் படங்கள், இந்தச் சிறுகோளின் மேற்பரப்பானது பூமியின் உட்புற மையத்தைப் போலவே பெரும்பாலும் இரும்பு மற்றும் நிக்கல் ஆகியவற்றைக் கொண்டிருக்கக் கூடும் என்பதைக் காட்டுகிறது .

- இது தங்கம், கோபால்ட், பிளாட்டினம், ரெனியம் மற்றும் இரிடியம் போன்ற அரிய உலோகங்களாலும் ஆனது.
- இது செவ்வாய்க் கிரகத்திற்கும் வியாழனுக்கும் இடையில் உள்ள சிறுகோள் பட்டையில் சுற்றுகின்ற ஒரு சிறுகோளாகும்.
- இது சைக் (Psyche) எனும் பண்டைய கிரேக்க பெண் தெய்வத்தின் ஆன்மாவின் பெயரைக் கொண்டுள்ளது.




## இந்திய கடலோரக் காவல்படைக் கப்பல் சி-452

- இது இந்தியக் கடற்படையில் சேர்க்கப் படவுள்ளது.
- இது எல் அண்ட் டி நிறுவனத்தால் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது.
- முன்னதாக, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் கோவாவில் ஐ.சி.ஜி.எஸ் சாச்செட் கப்பல், சி-451 மற்றும் சி-450 என்ற இரண்டு இடைமறிக் கப்பல்கள் ஆகியவற்றை (interceptor boats) கப்பல் படையில் சேர்த்தார்.
- இந்தியக் கடலோரக் காவல் படையானது 1978 ஆம் ஆண்டில் கடலோரக் காவல்படைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.




## பினாகா ஏவுகணை அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ஒரு மேம்படுத்தப்பட்ட பினாகா ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது.

- ஒடிசாவின் சந்திப்பூர் ஏவுதளத்திலிருந்து (ஒருங்கிணைந்த சோதனை தளம்) இதன் சோதனை நடத்தப் பட்டது.
- சிவபெருமானின் வில்லின் பெயர் கொண்டு இந்த ஏவுகணை பினாகா எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இவை ஏற்கனவே இந்திய ராணுவத்தில் இருக்கும் பல்ம பீப்பாய் ஏவுகணை ஏவும் அமைப்புகளின் (multi-barrel rocket launcher systems) ஒரு பகுதியாகும்.




## ஒற்றை ஏவுகலன் மூலம் (ராக்கெட்) 13 செயற்கைக் கோள்கள்

- சீனாவானது ஒற்றை ஏவுகலனில் 13 செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளது.
- இந்த 13 செயற்கைக் கோள்களில், 10 செயற்கைக் கோள்கள் அர்ஜென்டினாவைச் சேர்ந்ததாகும்.
- ஒரு நாட்டினால் அயல்நாட்டைச் சேர்ந்த அதிக செயற்கைக் கோள்களைச் செலுத்தும் மிகப்பெரிய நிகழ்வு இதுவே ஆகும்.
- இந்தச் செயற்கை கோள்கள் லாங் மார்ச் 6 என்ற ஒரு ஏவுகலன் மூலம் விண்ணில் செலுத்தப் பட்டன.

## லேஷ்மானியா டோலாவானி


- சிஎஸ்ஐஆர்-சிடிஆர்ஐ விஞ்ஞானி ஒருவர் லேஷ்மானியா டோனோவானியின் உயிர் வாழ்தல் வழிமுறைகளை ஆய்வு செய்தல் குறித்த தனது பணிகளுக்காக ஒரு விருதினை வென்றுள்ளார்.



- லேஷ்மானியா டோனோவானி என்பது பேருண்ணிகளைத் தாக்கும் ஒரு வகை புரோட்டோசோவா ஒட்டுண்ணியாகும்.
- இந்த உள்ளுறுப்பு லேஷ்மானியாசிஸ் (காலா அசார்) என்பதின் காரணப் பொருளாக விளங்குகின்றது.

## வேகமான ரேடியோ அலை வெடிப்புகள்

- சமீபத்திய ஆய்வுகளின் படி, செறிந்த ரேடியோ அலைகள் தற்போது பால்வீதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இவை வேகமான ரேடியோ அலை வெடிப்புகள் (FRB - fast radio bursts) என்று அழைக்கப் படுகின்றன.
- மற்ற அண்டங்களில் இவை அடிக்கடி கண்டறியப்பட்டுள்ளன.




- சமீபத்திய ஆய்வுகளின் படி அமெரிக்கா மற்றும் கனடா உள்ள இரண்டு ரேடியோ அலை தொலைநோக்கிகள் இதைக் கண்டறிந்துள்ளன.
- இதற்கு FRB200428 என்று பெயரிடப் பட்டுள்ளது.
- பல்வேறு கோட்பாடுகள் நியூட்ரான் நட்சத்திரங்களால் இவை ஏற்படுகின்றன என்றும் கூறுகின்றன.
- நியூட்ரான் நட்சத்திரங்கள் என்பது சூப்பர்நோவாக்கள் எனப்படும் வெடிப்பில் அழிந்த நட்சத்திரங்களின் எச்சங்களாகும்.
- சமீபத்திய ஆய்வானது FRBகள் உண்மையில் 'மேக்னட்டார்' எனப்படும் ஒரு அரிய வகை நியூட்ரான் நட்சத்திரத்தால் உருவாக்கப் படுன்றன என்பதை அடையாளம் காட்டுகிறது.
- இவை பூமியிலிருந்து சுமார் 30,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள எஸ்.ஜி.ஆர் 1935 + 2154 எனப்படும் மேக்னட்டாரில் இருந்து வந்தவையாகும்.
- இது பால்வீதியின் மையத்தில், வுல்பெகுலா எனும் விண்மீன் கூட்டத்தில் அமைந்து உள்ளது.
- மேக்னட்டார்கள் பிரபஞ்சத்தில் உள்ள மிகவும் சக்திவாய்ந்த காந்தங்களாகும்.

## அனைத்து வானிலை புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோள்

- பி.எஸ்.எல்.வி-சி 49 ராக்கெட்டைப் பயன்படுத்தி இஸ்ரோவானது அனைத்து வானிலை புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளான ஈஓஎஸ்-01 என்ற செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தி உள்ளது.
- ஏவப்பட்ட இந்த புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளானது ராடார் மூலம் புகைப் படமெடுக்கும் ஒரு செயற்கைக் கோளாகும்.

- மூன்று விண்கலத் தொகுப்பில் இது மூன்றாவது ஆகும்.
- ரைசாட் -2 பி மற்றும் ரைசாட் -2 பிஆர் 1 ஆகியவை மற்ற இரண்டு ஆகும்.
- இந்த இரண்டு செயற்கைக் கோள்களும் 2019 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்டன.
- விண்மீன் தொகுப்பில் உள்ள இந்த மூன்று செயற்கைக் கோள்களும் அனைத்து வானிலைகளையும் உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களுடன் 24 மணி நேரச் சேவையை வழங்கும்.
- இந்த செயற்கைக் கோள் ரேடார் மூலமான படமாக்கத்தைப் பயன்படுத்துவதால், மேகங்கள், மூடுபனி அல்லது சூரிய ஒளி இல்லாததால் இது பாதிக்கப்படாது.
- மூன்று செயற்கைக் கோள்களும் நகர்ப்புற நிலப்பரப்பு, வன நிலம் மற்றும் விவசாய நிலங்களைப் படமாக்கம் செய்ய எக்ஸ்-பேண்ட் (X-band) வகை ரேடார்களைப் பயன்படுத்துகின்றன.




## மலேரியா நோய் வெடிப்பு முன்னறிவிப்பு

- இந்திய வானிலை ஆய்வு மையமானது அடுத்த பருவ மழைக் காலத்திலிருந்து மலேரியா நோய் வெடிப்பு முன்னறிவிப்பை வழங்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்தத் துறையானது தனது முதலாவது ஆய்வை நாக்பூரில் மேற்கொண்டது.
- உலக மலேரியா அறிக்கையின்படி, உலக மலேரியா பாதிப்பில் 85% பாதிப்பை இந்தியா கொண்டுள்ளது.
- மேலும், தேசிய சுகாதாரத் தளமானது மிகப் பெரும்பான்மையான மலேரியா நோய் பாதிப்புகள் நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ளதாக அறிவித்து உள்ளது.
- இங்கு அடர்ந்த காடுகள், பழங்குடியினப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகள் அதிகம் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

- இதில் சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களான மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கியுள்ளன.

### *தடுப்பு மருந்து*

- மலேரியா நோய்த் தடுப்பு மருந்தானது 'ஆர்டிஎஸ், எஸ்' எனப்படுகின்றது.
- இது மாஸ்குய்ரிக்ஸ் என்று விளம்பரப்படுத்தப் பட்டுள்ளது. இது 2015 ஆம் ஆண்டில் ஐரோப்பிய மருந்து நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்து இந்தியாவில் பதிவு செய்யப் படவில்லை.
- இந்தத் தடுப்பு மருந்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்த முதலாவது நாடு மலாவி ஆகும்.

## உயிர் வாழ்வதற்கு உகந்த வெளிக்கோள்கள்

- கெப்ளர் விண்கலத்திலிருந்துப் பெறப்பட்ட ஒரு சமீபத்திய தரவானது அதிக எண்ணிக்கையிலான அளவில் உயிர் வாழ்வதற்கு உகந்த வெளிக்கோள்கள் இருப்பதைக் காட்டுகின்றது.
- வெளிக்கோள்கள் என்பது நமது சூரியக் குடும்பத்திற்கு வெளியே அமைந்த கோள்களாகும்.
- கெப்ளர் திட்டமானது 2009 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டது.
- இது நாசாவின் முதலாவது கோள்களைத் தேடுவதற்கான ஒரு ஆய்வுத் திட்டமாகும்.
- கெப்ளர் என்பதற்குப் பிறகு நாசாவின் சூரியக் குடும்பத்திற்கு வெளியே உள்ள வெளிக்கோள்களை ஆய்வு செய்யும் செயற்கைக்கோளானது (Transiting Exoplanet Survey Satellite - TESS) விண்ணில் செலுத்தப் பட்டுள்ளது.
- TESS ஆனது 2018 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் விண்ணில் செலுத்தப் பட்டுள்ளது.
- TESS என்பது புதிய கோள்களைத் தேடிடும் நாசாவின் ஒரு ஆய்வுத் திட்டமாகும்.

## EOS-01

- இது ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்துச் செலுத்தப்பட்டது.
- இது பிஎஸ்எல்வி – சி49 விண்கலத்தில் 9 சர்வதேச நாடுகளின் செயற்கைக் கோள்களுடன் முதன்மைச் செயற்கைக் கோளாகச் செலுத்தப் பட்டுள்ளது.
- EOS-01ன் செலுத்துதலானது பிஎஸ்எல்வியின் 51வது திட்டமாகும் (PSLV-C49).
- EOS-01 ஆனது ஆரம்பத்தில் RISAT-2BR2 என்று பெயரிடப் பட்டது.
- இஸ்ரோ ஆனது தனது புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோள்களுக்காக வேண்டி புதிய பெயரிடல் முறைக்கு மாறுகின்றது.
- எனவே இனிமேல் அனைத்து புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள்களும் EOS தொடர் என அழைக்கப் படும்.
- கார்டோசாட் செயற்கைக் கோள் தொடரானது நில அமைப்பு மற்றும் வரைபடமிடல் ஆகியவற்றுக்கான தரவுகளை அளிக்கின்றது.
- ஓஷன்சாட் செயற்கைக்கோள் தொடரானது கடல் கண்காணிப்பை மேற்கொள்கின்றது.

- EOS-01-ன் செலுத்துதலானது ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திலிருந்து செலுத்தப்பட்ட 76வது செலுத்து வாகனத் திட்டமாகும்.
- இஸ்ரோ ஆனது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜிசாட் – 30 என்ற தகவல் தொடர்பு செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தி இருந்தது.
- இது ஏரியன் ஏவு வாகனத்தைப் பயன்படுத்தி பிரெஞ்சு கயானாவில் இருந்து செலுத்தப் பட்டது.




## கொரோனாவின் மூலக் காரணமாக மிங்க் (Minks)

- மனிதர்களுள் பிறழ்ந்த மாறுபாடுடைய கொரோனா வைரஸ் (mutated coronavirus) பரவுவதைத் தடுக்க வேண்டி தமது நாட்டில் மிங்க் என்ற விலங்கை முழுமையாகக் கொன்றிட டென்மார்க் நாடானது முடிவு செய்துள்ளது.
- வைரஸின் இந்தப் புதிய பிறழ்ந்த மாறுபாடானது மனிதர்களில் எதிர்மங்களை உருவாக்கும் திறனைக் குறைத்துள்ளது.
- இது தடுப்பூசியின் செயல்திறனைக் குறைக்கக் கூடும்.
- டென்மார்க் நாடானது உலகில் மென்மயிர் உற்பத்தி செய்யும் நாடுகளில் மிகப் பெரிய ஒரு நாடாக உள்ளது.

## தீயைக் கண்டறிதல் மற்றும் தீயை அணைக்கும் அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது பேருந்துகளில் தீயைக் கண்டறிதல் மற்றும் தீயை அணைக்கும் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- 30 விநாடிகளுக்குள் பேருந்துகளில் ஏற்படும் தீயை இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு கண்டறிய முடியும்.

- மேலும், இதனால் 60 விநாடிகளில் தீயை அணைக்க முடியும்.
- டெல்லியை மையமாகக் கொண்ட பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தீ வெடிபொருள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான மையத்தினால் இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப் பட்டுள்ளது.

## முப்பது மீட்டர் தொலைநோக்கி திட்டம்


- இந்திய வானியலாளர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான இயற்பியல் நோபல் பரிசு பெற்ற ஆண்ட்ரியா கெஸுடன் "முப்பது மீட்டர் தொலைநோக்கித் திட்டத்திற்காக" ஒன்றிணைந்துள்ளனர்.
- அமெரிக்காவின் ஹவாயில் இந்தத் தொலைநோக்கி நிறுவப் பட்டுள்ளது.
- இது இந்தியா, சீனா, ஜப்பான், கலிபோர்னியா மற்றும் கனடா ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு பன்னாட்டுக் கூட்டுத் திட்டமாகும்.
- இது புற ஊதா முதல் நடு அகச்சிவப்பு அவதானிப்புகளுக்கு வேண்டி வடிவமைக்கப் பட்டு உள்ளது.

## புவி மேற்பரப்பு நிறை

- சமீபத்தில் நாசாவானது புவியின் நிறையானது 2004-09 ஆண்டுக் காலகட்டத்துடன் ஒப்பிடப்படும் போது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மாறுபட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த மாறுதல்கள் நீர், பனிக்கட்டி மற்றும் பனி ஆகிவற்றின் மாறுதல்களால் ஏற்பட்டவையாகும்.
- நாசாவின் கூற்றுப் படி, கடல் மட்டத்தின் அதிகரிப்பானது புவி நிறையின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப் படுகின்றது.
- நிலப் பரப்பு மீதான இயக்கத்தில் ஏற்பட்ட மாற்றமானது பனி மற்றும் பனிப் பிரதேசப் பகுதிகளில் அதிகமாகக் காணப் படுகின்றது.
- இந்த மாறுதல்கள் கிரேஸ் (GRACE) என்ற திட்டத்தினால் கணக்கிடப் பட்டன.
- இது நாசா மற்றும் ஜெர்மனியின் ஒரு கூட்டுத் திட்டமாகும்.

## "TataMD CHECK"

- டாடா மருத்துவம் மற்றும் நோய் கண்டறிதல் நிறுவனமானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக இந்தப் புதிய நோய்க் கண்டறிதல் சோதனைப் பொருளை உருவாக்கி உள்ளது.



- உலகின் முதலாவது 'CRISPR CaS-9' அடிப்படையிலான நோய் கண்டறிதல் பொருள் இதுவாகும்.
- இது அறிவியல்சார் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் – மரபணு மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.
- இது பெலுடாவினால் (FELUDA) இயக்கப் படுகின்றது.

## BNT162b2

- இது எம்ஆர்என்ஏ (mRNA) அடிப்படையிலான ஒரு கொரோனா வைரஸ் தடுப்பூசி ஆகும்.
- கோவிட்-19 நோய்த் தொற்றைத் தடுப்பதில் இது 90%க்கும் அதிகமான செயல்திறன் கொண்டது என்று கண்டறியப் பட்டுள்ளது.
- இதை ஃபைசர் (அமெரிக்காவை மையமாகக் கொண்ட மருந்து நிறுவனம்) மற்றும் பயோஎன்டெக் நிறுவனம் (ஜெர்மன் உயிரியல் நிறுவனம்) ஆகியவை இணைந்து தயாரிக்கின்றன.

## உலகின் முதல் 6ஜி செயற்கைக்கோள்

- சீனா வெற்றிகரமாக "உலகின் முதலாவது 6ஜி செயற்கைக் கோளை" விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.
- இது ஷாங்க்சி மாகாணத்தில் உள்ள தைவான் செயற்கைக்கோள் செலுத்து மையத்திலிருந்து விண்வெளி சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது.
- இது சீனாவின் லாங் மார்ச் என்ற செயற்கைக் கோள் தொடரின் 351வது ராக்கெட் ஆகும்.
- 6ஜி தொழில்நுட்பம் 5ஜி தொழில்நுட்பத்தை விட 100 மடங்கு வேகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது விண்வெளியில் டெராஹெர்ட்ஸ் அலைகளின் தொழில்நுட்பத்தைச் சோதிக்கும்.
- டெராஹெர்ட்ஸ் அலைகள் உயர் அதிர்வெண் கதிர்வீச்சு (high-frequency radiation) அலைகள் ஆகும்.
- இது ஒரு விநாடிக்கு 50 ஜிகாபிட் என்ற வேகத்தில் தரவைக் கடத்த அனுமதிக்கிறது.



## வாகிர் நீர்மூழ்கிக் கப்பல்

- இந்தியக் கடற்படையானது ஐந்தாவது ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பலான "வாகிர்" என்ற கப்பலை தெற்கு மும்பையின் மசகன் கப்பல்துறையில் துவக்கி வைத்து உள்ளது.
- மணல் மீனின் பெயரையொட்டி இதற்கு வாகீர் என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.
- இது கல்வாரி வகுப்பின் ஆறு நீர்மூழ்கிக் கப்பல்ளுள் ஒன்றாகும்.
- இந்த நீர்மூழ்கிக் கப்பல்களைப் பிரெஞ்சு நாட்டின் கடற்படை வடிவமைத்துள்ளது.
- இது இந்தியக் கடற்படையின் Project-75 என்ற ஒரு திட்டத்தின் கீழ் இந்தியாவில் கட்டப் பட்டு வருகிறது.
- ஐ.என்.எஸ் வாக்சிர் என்பது 6 ஆவது கப்பலாகும்.
- இது இன்னும் கட்டுமானத்தில் உள்ளது.




## ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நாசா

- ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ டிராகன் காப்ஸ்யூல் மற்றும் பால்கன் 9 ராக்கெட் ஆகியவற்றுக்கு நாசா அதிகாரப் பூர்வமாகச் சான்றளித்துள்ளது.
- ஒரு விண்வெளி நிறுவனம் வழங்கிய முதல் விண்கலச் சான்றிதழாக இது உருவெடுத்துள்ளது.
- இதனால் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது இப்போது விண்வெளி நிலையத்திற்கு சீராக விமானங்களை இயக்க முடியும்.


## விரைவான எதிர்வினையாற்றும் நில-வான் ஏவுகணை

- ஒடிசாவில் உள்ள சந்திப்பூர் சோதனைத் தளத்தில் அனைத்து வானிலைகளிலும் விரைவான எதிர்வினையாற்றும் நிலத்திலிருந்து வானில் இருக்கும் இலக்கைத் தாக்கும் வகையிலான ஏவுகணையைச் சோதித்தது.
- இது 15 கி.மீ உயரத்தில் இருக்கும் ஒரு வான்வழி இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது.

## லியோனிட் விண்கல் பொழிவு

- லியோனிட் விண்கல் பொழிவானது (Leonid Meteor Shower) இந்தியாவில் நவம்பர் 17, 2020 முதல் நவம்பர் 18, 2020 வரை தனது உச்சத்தை எட்டியது.
- 2020 ஆம் ஆண்டில், இந்தப் பொழிவு நவம்பர் 6 முதல் நவம்பர் 30 வரை செயல்படுகின்றது.

- டெம்பல்-டட்டில் (Tempel-Tuttle) என்ற வால்நட்சத்திரத்திலிருந்து லியோனிட்ஸ் வெளிப் படுகிறது.
- இந்த வால் நட்சத்திரம் சூரியனைச் சுற்றி வர 33 ஆண்டுகள் ஆகும்.
- லியோனிட்கள் லியோ என்ற ஒரு விண்மீன் தொகுப்பிலிருந்து உருவாகின்றன.
- லியோனிட் விண்கல் பொழிவானது பிரகாசமாகவும் மற்றும் வினாடிக்கு 71 கி.மீ வேகத்திலும் பயணிக்கிறது.




## திட்டம் க்ரூ 1

- இது நாசாவின் வர்த்தகக் குழு திட்டத்தின் கீழ் செயல்படும் முதல் செயல்பாட்டுத் திட்டமாகும்.
- ஸ்பேஸ்எக்ஸ் ஆனது திட்டம் க்ரூ 1 என்பதின் கீழ் நான்கு விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பியது.
- மீண்டும் பயன்படுத்தக் கூடிய ஸ்பேஸ்எக்ஸ் பால்கன் 9 ராக்கெட்டானது அந்த விண்கலத்தைச் செலுத்த பயன்படுத்தப்பட்டது.
- அந்தக் குழுவினர் அந்த விண்கலத்திற்கு “Resilience” என்று பெயரிட்டனர்.
- க்ரூ டிராகன் காப்ஸ்யூல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு நாசாவால் சான்றளிக்கப்பட்ட ஒரு முதல் விண்கலமாகும்.

## nCOP2 தடுப்பூசி

- உலக சுகாதார நிறுவனமானது இந்தத் தடுப்பூசியை அதன் அவசரகாலப் பயன்பாட்டுப் பட்டியல்களில் சேர்த்துள்ளது.
- இதை இந்தோனேசியாவின் பயோ ஃபார்மா உருவாக்கியது.
- போலியோ வைரஸ் திரிபுக்கு (polio virus strain) சிகிச்சையளிக்க இது உருவாக்கப் பட்டு உள்ளது.
- இது ஒரு வாய்வழி பயன்பாட்டு போலியோ தடுப்பூசி வகை 2 ஆகும்.
- புதிய அவசரகாலப் பயன்பாட்டுப் பட்டியல் முறையை உலக சுகாதார அமைப்பு உருவாக்கியுள்ளது.
- இது 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட எபோலா வைரசின் திடீர்ப் பெருக்கத்திற்குப் பதிலளிக்கும் விதமாக அமைந்துள்ளது.
- பயோ ஃபார்மாவின் இந்தத் தடுப்பூசியானது இந்தப் பட்டியலின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட முதல் தடுப்பூசி ஆகும்.

## பரம் சித்தி



- இது உலகில் மிகவும் சக்தி வாய்ந்த, விநியோகிக்கப்படாத கணினி அமைப்பைக் கொண்ட முதல் 500 கணினிகளைக் கொண்ட பட்டியலில் 63வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- ஒரு விநியோகிக்கப்படாத கணினி அமைப்பில் உள்ள அனைத்து கூறுகளும் (சாதனங்களும்) ஒரே இடத்தில் இருக்கும்.
- பரம் சித்தியைப் பொறுத்த வரையில் அனைத்து சாதனங்களும் புனேவில் அமைந்து உள்ளன.
- இது ஒரு உயர் கணினித் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு மீவேகக் கணினி ஆகும்.
- இது தேசிய மீவேகக் கணினித் திட்டத்தின் கீழ் இருக்கும் மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- இது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை ஆகியவற்றினால் கூட்டாக மேம்படுத்தப் பட்டுள்ளது.
- இந்த மீவேகக் கணினியானது 5.267 பெட்டாபிளாப் (petaflops) வேகத்தைக் கொண்டு உள்ளது.
- தேசிய மீவேகக் கணினித் திட்டமானது 2015 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவானது தற்பொழுது தேசிய மீவேகக் கணினித் திட்டத்தின் 3வது நிலையை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் 3 நிலைகளில் நாட்டில் 70 மீவேகக் கணினிகளை அமைத்தல் என்பதாகும்.
- முதலாவது மீவேகக் கணினியானது வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- இது "பரம் சிவா" என்று பெயரிடப்பட்டுள்ளது.

## இந்தியாவின் எச்ஐவி தடுப்பு மாதிரி

- இது "சமூக ஒப்பந்தம்" (Social Contracting – அரசிடம் நிதியுதவி பெறுதல்) என்ற ஒரு கருத்துருவின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டமானது 1992 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- தற்பொழுது இந்தியாவானது 2030 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோயை ஒழிக்கும் நோக்கம் கொண்ட ஒரு தேசிய உத்திசார் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டின் படி, எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட 3வது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

## ககன்யான்

- இஸ்ரோ ஆனது 2021 ஆம் ஆண்டின் இறுதியில், முதலாவது விண்வெளி வீரர்களற்ற ககன்யான் விண்கலத்தைச் செலுத்த உள்ளது.
- மேலும் இஸ்ரோவானது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கு முன்பாக 2022 ஆம் ஆண்டில் இரண்டாவது விண்வெளி வீரர்களற்ற விண்கலத்தை அனுப்ப உள்ளது.




## P-8I

- இந்தியக் கடற்படையானது அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து ஒன்பதாவது P-8I கண்காணிப்பு விமானத்தை கோவாவின் கடற்படைத் தளத்தில் பெற்றுள்ளது.
- P-8 விமானத்திற்கான முதலாவது மற்றும் மிகப்பெரிய வாடிக்கையாளர் இந்தியக் கடற்படை ஆகும்.
- P-8I என்பது போயிங்கின் P-8A போஸிடன் விமானத்தின் ஒரு வகையாகும்.
- இது அமெரிக்கக் கடற்படையின் மிக வயதான P-3 என்ற விமானத்திற்கு மாற்றாக வடிவமைக்கப் பட்டு உள்ளது.

## அலைவாங்கி விண்வெளித் திட்டம்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது (ESA - European Space Agency) அலைவாங்கி ஒரு என்ற திட்டத்தை (Ariel) முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- அலைவாங்கி என்பது வளிமண்டலத் தொலை உணர்வி அகச்சிவப்பு வெளிக்கோள் மீதான ஒரு பெரு ஆய்வு (Atmospheric Remote-sensing Infrared Exoplanet Large-survey) என்பதைக் குறிக்கின்றது.
- இது 2029 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.
- இது ஒரு 4 ஆண்டு காலத்தில் 1000றக்கும் மேற்பட்ட வெளிக் கோள்களின் மீது ஒரு மிகப்பெரிய ஆய்வை நடத்த உள்ளது.



## கோவேக்ஸின் மருந்திற்கான மூன்றாம் கட்ட சோதனை

- பாரத் பயோடெக் நிறுவனமானது கோவேக்ஸின் மருந்திற்கான மூன்றாம் கட்ட மருத்துவச் சோதனை தொடங்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கொரானா வைரஸ் நோய்த் தடுப்பிற்காக நடத்தப்படும் ஒரு மிகப் பெரிய மருத்துவச் சோதனை இதுவாகும்.
- மேலும் இதற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகத்தினாலும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of Medical Research - ICMR) அமைப்புடன் இணைந்து நடத்தப்பட உள்ளது.
- கோவேக்ஸின் என்பது இந்தியாவின் ஒரு உள்நாட்டு கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்தாகும்.
- இது தேசிய நச்சுயிரியல் மையம் (NIV - National Institute of Virology) மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது பாரத் பயோடெக்கின் பிஎஸ்எல்-3 (உயிரிப் பாதுகாப்பு நிலை - 3) என்ற ஒரு உயிரிக் கட்டுப்பாட்டு மையத்தில் உருவாக்கப் பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இது ஒரு வெரோ செல் உற்பத்தித் தளத்தில் தயாரிக்கப்படுகின்றது.

## mRNA

- அமெரிக்காவின் மாடெர்னா பயோடெக் நிறுவனமானது RNA அல்லது mRNA செய்தி அமைப்பைப் பயன்படுத்தி கோவிட் - 19 நோய்த் தடுப்பு மருந்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.
- ஆனால் mRNA ஆனது இதுவரை எந்தவொரு நோய்க்கும் பரிந்துரைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.
- மாடர்னா மற்றும் பிபிசர் (Pfizer) ஆகிய இரண்டு நிறுவனங்களும் தமது நோய்த் தடுப்பு மருந்துகளில் mRNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.
- நோய்த் தடுப்பு மருந்தை உருவாக்குவதில் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுவது இதுவே முதன்முறையாகும்.
- mRNA என்ற புரதத்தின் வரிசையாக்கமானது கோவிட்-19 வைரஸின் முள் போன்ற ஒரு புரதத்துடன் சேர்த்து குறிமுறையாக்கப் பட்டுள்ளது.

## உலகளாவிய ரேடியோ கண்காணிப்பு அமைப்பு

- இந்தியப் பிராந்தியக் கண்காணிப்பு அமைப்பானது (Indian Regional Navigation Satellite System- IRNSS) இந்தியக் கடல் பகுதியில் சர்வதேசக் கடல்சார் அமைப்பின் (International Maritime Organisation - IMO) செயல்பாடுகளுக்காக IMO அமைப்பினால் மேற்கொள்ளப் படும் உலகளாவிய ரேடியோ கண்காணிப்பு அமைப்பின் ஒரு கூறாக ஏற்றுக் கொள்ளப் பட்டு உள்ளது.
- இது குளோனாஸ் மற்றும் ஜிபிஎஸ் போன்று இடம் குறித்த தகவல்களைப் பெறுவதற்கு வேண்டி IRNSS அமைப்பைப் பயன்படுத்திட கப்பல்களை அனுமதிக்கின்றது.
- இந்தக் கண்காணிப்பு அமைப்பானது இந்தியக் கடல் பகுதியில் 1500 கிலோ மீட்டர் வரை தனது பணியை மேற்கொள்கின்றது. இது இங்கு ஜிபிஎஸ் என்பதற்கு மாற்றாக விளங்குகின்றது.
- IRNSS அமைப்பின் செயல்பாட்டுப் பெயர் நேவிக் (NAVIC) என்பதாகும்.

- இது தனது சுற்று வட்டப் பாதையில் 8 தொகுப்புகளை (வலையமைப்புகளை) கொண்டுள்ளது.
- எனினும் IRNSS ஒரு உலகளாவிய கண்காணிப்பு அமைப்பு இல்லை, மாறாக இது ஒரு பிராந்தியக் கண்காணிப்பு அமைப்பு ஆகும்.
- அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியவற்றிற்குப் பிறகு உலகில் ஒரு தனிச்சுதந்திர மற்றும் பிராந்திய செயற்கைக் கோள் கண்காணிப்பு அமைப்பைக் கொண்ட 4வது நாடு இந்தியா ஆகும்.
- IMO என்பது ஐக்கிய நாடுகளின் ஒரு அமைப்பாகும்.

## பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய பதிப்பு

- இந்தியாவானது நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் வகையிலான புதிய பிரம்மோஸ் ஏவுகணையை அந்தமான் தீவில் சோதனை செய்துள்ளது.
- இது நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் மீயொலி வேக ஏவுகணையாகும்.
- இந்த ஏவுகணையின் வரம்பானது முந்தைய 290 கிலோ மீட்டரிலிருந்து 400 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- இதன் வேகமானது 2.8 மாக் அல்லது ஒலியின் மூன்று மடங்கு வேகம் என்ற அளவில் பராமரிக்கப் படுகின்றது.
- பிரம்மோஸ் II ஏவுகணையானது மாக் 7-8 என்ற வேகத்துடன் தற்போது மேம்பாட்டு நிலையின் கீழ் உள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் ஏவுகணைத் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அமைப்பில் இந்தியா உறுப்பினர் ஆன பின்பு, 800 கிலோ மீட்டர் வரம்பு கொண்ட பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய பதிப்பை கட்டமைக்க வேண்டி ரஷ்யாவானது இந்தியாவுடன் இணைய இருக்கின்றது.
- பிரம்மோஸ் ஏவுகணையின் பெயரானது இந்தியாவின் பிரம்மபுத்திரா மற்றும் ரஷ்யாவின் மாஸ்கோ ஆகிய 2 நதிகளிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.
- உலகில் உள்ள விரைவான கப்பல் எதிர்ப்பு ஏவுகணை இதுவாகும்.
- இந்த ஏவுகணையை கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானம் மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றிலிருந்து ஏவ முடியும்.

## வருணாஸ்திரா நீர்மூழ்கி ஏவுகணை

- வருணாஸ்திரா என்ற ஏவுகணையானது விசாகப் பட்டினத்தில் அமைந்துள்ள அதன் உற்பத்தி நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் இந்தியக் கடற்படையிடம் வழங்கப் பட்டுள்ளது.
- வருணாஸ்திரா என்பது இந்தியாவின் முதலாவது கனரக நீர்மூழ்கி ஏவுகணை ஆகும்.
- இது வெடிக்கும் ஆயுதங்களுடன் கூடிய ஒரு நீர்மூழ்கி ஏவுகணை வகையாகும்.
- இந்தியாவின் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட முதலாவது நீர்மூழ்கி ஏவுகணை இதுவாகும்.
- இது இந்தியாவின் ஒரு மேம்படுத்தப்பட்ட கனரக நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணை ஆகும்.
- நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணையான இது மின்சாரத்தால் இயக்கப் படுகின்றது.
- மணிக்கு 70 கிலோ மீட்டர் வேகம் வரை பயணிக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணையானது 40 கிலோ மீட்டர் தூர வரம்பைக் கொண்டுள்ளது.


- இது 250 கிலோ கிராம் எடையுள்ள ஆயுதங்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- இது விசாகப் பட்டினத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தியப் பாதுகாப்புத் தொழிற்துறையின்படி, புவியிடங்காட்டி அடிப்படையிலான உதவி செய்தலைக் கொண்ட உலகின் ஒரே நீர்மூழ்கி ஏவுகணை இதுவாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## 2 புதிய ராம்சார் தளங்கள்

- சமீபத்தில், கபர் தல் ஈரநிலம் (பீகார்) மற்றும் அசன் பாதுகாப்பக காப்பு நிலம் (உத்தரகாண்ட்) ஆகியவை ராம்சார் தளங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த 2 தளங்கள் சேர்க்கப் பட்டதின் மூலம் இந்தியாவில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. தெற்கு ஆசியாவில் இதுவே அதிகமாகும்.
- சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்கள் ராம்சார் நிலங்களாக அறிவிக்கப் படுகின்றன.



## இந்தியாவில் மணல் மேடு பூங்கா

- உலக வங்கியின் ஆதரவுடன் நாட்டின் முதலாவது மணல்மேடு பூங்காவை கோவா ஆரம்பிக்க உள்ளது.
- மணல் மேடு என்பது காற்றின் செயல்பாட்டால் உருவாக்கப்பட்ட புவியியல் படிவுகளாகும்.
- இந்தப் புவியியல் அமைப்புகள் கடலின் தாக்கங்களிலிருந்துப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இயற்கையின் முதல் நிலைத் தளமாகச் செயல்படுகின்றன.




## சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டம்

- இந்திய வனவிலங்கு மையமானது குஜராத் வனத் துறையுடன் இணைந்து சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டப் பரிந்துரையை உருவாக்கியுள்ளது.
- இந்த பரிந்துரையின் கீழ் எதிர்காலத்தில் சாத்தியமான சிங்கங்கள் இடமாற்றத்திற்காக பின்வரும் 6 புதிய தளங்களை அடையாளம் கண்டுள்ளது.
  - மாதவ் தேசியப் பூங்கா, மத்தியப் பிரதேசம்
  - சீதாமாதா வனவிலங்குச் சரணாலயம், இராஜஸ்தான்
  - முகுந்த்ரா மலைகள் புலிகள் காப்பகம், இராஜஸ்தான்
  - காந்தி சாகர் வனவிலங்குச் சரணாலயம், மத்தியப் பிரதேசம்
  - கும்பல்கர் வனவிலங்குச் சரணாலயம், ராஜஸ்தான்
  - ஜெசோர் – பாலராம் அம்பாஜி வனவிலங்குச் சரணாலயம் மற்றும் அதை ஒட்டியுள்ள நிலப் பகுதி, குஜராத்
- சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டமானது ஆசியச் சிங்கங்களின் பாதுகாப்பிற்காக 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தொடங்கப்பட்டது.
- இதன் கடைசி எஞ்சிய இனமானது குஜராத்தின் ஆசியச் சிங்க நிலப்பகுதியில் உள்ளது.

## சர்தார் விலங்கியல் பூங்கா

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குஜராத்தின் நர்மதை மாவட்டத்தில் உள்ள கெவாடியாவில் ஆரோக்கிய வனம், சர்தார் படேல் விலங்கியல் பூங்கா, ஏக்தா அங்காடி மற்றும் குழந்தைகள் ஊட்டச் சத்துப் பூங்கா ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.
- சர்தார் படேல் விலங்கியல் பூங்கா பிரபலமாக மிருக உலா என்றும் அறியப்படுகிறது.

## மஞ்சள் தூசு

- சமீபத்தில் வட கொரிய அதிகாரிகள் சீனாவிலிருந்து வீசும் "மஞ்சள் தூசு" எனப்படும் மர்மமான மேகங்களுடனான தொடர்பைத் தவிர்ப்பதற்காக வீட்டிலேயே இருக்குமாறு தங்கள் குடிமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.
- மஞ்சள் தூசு என்பது சீனா மற்றும் மங்கோலியாவில் உள்ள பாலைவனங்களில் காணப்படும் ஒரு வகை மண் ஆகும்.

## புது தில்லியில் பசுமைப் பட்டாசுகள்

- நவம்பர் 14 அன்று கொண்டாடப்படும் தீபாவளியானது இந்தியாவின் முதலாவது பசுமைத் தீபாவளியாக இருக்கும்.
- பசுமைப் பட்டாசுகள் மட்டுமே தேசியத் தலைநகர்ப் பகுதியில் தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.
- இந்தப் பட்டாசுகள் சாதாரணப் பட்டாசுகளை விட 30% குறைவாக மாசுபடுத்தும் திறன் கொண்டது.
- கடுமையான புகை மற்றும் உமிழ்வுகளுக்குக் காரணம் இரசாயன பேரியம் நைட்ரேட் என்பதாகும்.
- மேலும் பசுமைப் பட்டாசுகள் லித்தியம், ஆர்செனிக், ஈயம் போன்ற தடை செய்யப் பட்ட இரசாயனங்களைக் கொண்டிருப்பதில்லை.
- இவை பாதுகாப்பு நீர் வெளியேற்றி, பாதுகாப்பான தெர்மைட் பட்டாசு மற்றும் பாதுகாப்பான குறைவான அலுமினியப் பட்டாசுகள் என்றும் அழைக்கப் படுகின்றன.
- பசுமைப் பட்டாசுகள் நீராவியை வெளியேற்றுகின்றன. எனவே இவை மாசுத் துகள்கள் மேலே எழும்புவதை அனுமதிப்பதில்லை.
- பட்டாசுப் புகையானது முக்கியமாக சல்பர் டை ஆக்ஸைடு, மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகியவற்றின் உமிழ்வுகளிலிருந்து வெளி வருகின்றன.
- நாக்பூரில் உள்ள சிஎஸ்ஐஆர்-தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி மையம் இந்தப் பட்டாசுகளைத் தயாரித்துள்ளது.

**Toxic nature**

Conventional firecrackers contain chemicals which produce effects like bright lighting and colours. However, these chemicals can have adverse effects on human health and the environment

| Initial ingredient | Use in crackers | Health hazards |
|---|---|---|
| Charcoal, potassium nitrate and sulphur | Black powder which is the primary fuel in the cracker | The dust released is hazardous when inhaled; different compounds formed can be carcinogenic |
| Strontium and lithium | Colouring agent (Red) | Strontium can replace calcium in the body which can be toxic; Lithium releases harmful fumes |
| Barium | Colouring agent (Orange) | Fumes can cause respiratory and other health issues |
| Nitrates, chlorates/ perchlorates | Oxidising agents | The compounds can hamper the growth of small children; they remain airborne for days and can be poisonous |

## புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள்

- யுனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிர்க்கோளக் காப்பகத் திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பு மன்றமானது 18 நாடுகளில் 25 புதிய தளங்களை உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பில் சேர்த்துள்ளது.
- இப்போது உலகெங்கிலும் உள்ள 129 நாடுகளில் 714 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.
- அன்டோரா (ஆர்டினோ), கபோ வெர்டே (ஃபோகோ மற்றும் மயோ), கொமொரோஸ் (மவாலி), லக்சம்பர்க் (மினெட்), டிரினிடாட் மற்றும் டொபாகோ (வடகிழக்கு டொபாகோ) ஆகிய நாடுகள் இந்த ஆண்டு முதல், மனிதன் மற்றும் உயிர்க்கோளத் திட்டத்தின் வலையமைப்பில் தங்கள் முதல் உயிர்க் கோளக் காப்பகத்துடன் இணைகின்றன.
- நான்கு உறுப்பு நாடுகள் அந்த வலையமைப்பிலிருந்து 11 தளங்களைத் திரும்பப் பெறுமாறு கோரியுள்ளன.
- அவை,
  - ஆஸ்திரேலியா - உலுரு ஐயர்ஸ் ராக்-மவுண்ட் ஓல்கா, குரோஜிங்கலாங், ரிவர்லேண்ட் (முன்பு புக்மார்க்), கோஸ்கியுஸ்கோ மற்றும் பெயரிடப் படாத ஒன்று (மாமுங்கரி)
  - பல்கேரியா - அலி போடோச், டுப்கி-ஜிந்த்ஜிரிட்சா, மந்தரிட்ஸா மற்றும் பரங்கலிட்சா
  - காங்கோ ஜனநாயகக் குடியரசு - லுஃபிரா மற்றும்
  - மெக்சிகோ - இஸ்லாஸ் டெல் கோல்போ டி கலிபோர்னியா ஆகும்.
- உயிர்க்கோளக் காப்பகங்கள் ஐ.யூ.சி.என் அமைப்பின் கீழ் வரும் 'ஐந்தாம் வகை பாதுகாக்கப்பட்ட பகுதிகளின்' கீழ் வருகின்றன.
- உயிர்க்கோளக் காப்பகங்கள் ஒரு பொதுவான தேசியப் பூங்கா அல்லது வனவிலங்குச் சரணாலயத்தை விட இயற்கை வாழ்விடத்திற்கான மிகப் பெரிய பகுதிகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *மனிதன் மற்றும் உயிர்க்கோளத் திட்டம் (MAB) பற்றி*

- MAB (Man and the Biosphere Programme) என்பது அரசுகளுக்கிடையேயான ஓர் அறிவியல் திட்டமாகும்.
- இது 1971 ஆம் ஆண்டில் பாரீஸைத் தலைமையிடமாகக் கொண்ட யுனெஸ்கோ அமைப்பால் தொடங்கப்பட்டது.
- இது 34 யுனெஸ்கோ உறுப்பு நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சுழல் தலைமை அமைப்பைக் கொண்டு இருக்கின்றது.
- தற்போதைய தலைமை நைஜீரியா ஆகும்.

## புதிய இறால் இனங்கள்

- தேசிய மீன் மரபணு வள பணியகத்துடன் தொடர்புடைய விஞ்ஞானிகள் இதுவரை இந்திய நீரில் காணப்படாத நான்கு வகையான இறால்களை அடையாளம் கண்டுள்ளனர்.
- இது லட்சத்தீவு தீவுகளின் அகட்டித் தீவில் உள்ள பவளப் பாறைகளில் காணப் பட்டது.
- இந்த இரண்டு இனங்களும் முறையே அகட்டித் தீவு மற்றும் அரேபியக் கடல் ஆகியவற்றின் பெயருக்கேற்ப பெரிக்லிமெனெல்லா அகட்டி மற்றும் யூரோகரிடெல்லா அரேபியானேசிஸ் என்று பெயரிடப் பட்டுள்ளன.



## பன்னா உயிர்க் கோளக் காப்பகம்

- யுனெஸ்கோ ஆனது பன்னா புலிகள் காப்பகத்திற்கு "உயிர்க் கோளக் காப்பகம்" என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- பன்னா என்பது இந்தியாவில் யுனெஸ்கோவின் 12வது உயிர்க்கோளக் காப்பகமாகும்.
- இது கடந்த 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கையைச் சுழியத்திலிருந்து 54 ஆக உயர்த்தியுள்ளது.
- 2009 ஆம் ஆண்டில், இங்குள்ள புலிகளின் முழு எண்ணிக்கையானது வேட்டையாடுதல் மூலம் முழுவதுமாக ஒழிக்கப்பட்டு இருந்தது.
- 2 பெண் புலிகள் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பாந்தவகார்க் தேசியப் பூங்கா மற்றும் கன்ஹா தேசியப் பூங்கா ஆகியவற்றிலிருந்து இங்கு இடமாற்றம் செய்யப் பட்டன.
- பன்னா ஆனது 2011 ஆம் ஆண்டில் இந்தியாவினால் உயிர்க்கோளக் காப்பகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது பச்மார்கி மற்றும் அமர்கந்தக் ஆகியவற்றிற்குப் பிறகு மத்தியப் பிரதேசத்தில் உள்ள மூன்றாவது காப்பகம் ஆகும்.

| Name | States/ UT | Year |
|---|---|---|
| **Nilgiri Biosphere Reserve** | Tamil Nadu, Kerala and Karnataka | 2000 |
| **Gulf of Mannar Biosphere Reserve** | Tamil Nadu | 2001 |
| **Sundarbans Biosphere Reserve** | West Bengal | 2001 |
| **Nanda Devi Biosphere Reserve** | Uttarakhand | 2004 |
| **Nokrek Biosphere Reserve** | Meghalaya | 2009 |
| **Pachmarhi Biosphere Reserve** | Madhya Pradesh | 2009 |
| **Simlipal Biosphere Reserve** | Odisha | 2009 |
| **Great Nicobar Biosphere Reserve** | Andaman & Nicobar Islands | 2013 |
| **Achanakmar-Amarkantak Biosphere Reserve** | Chhattisgarh, Madhya Pradesh | 2012 |
| **Agasthyamalai Biosphere Reserve** | Kerala and Tamil Nadu | 2016 |
| **Khangchendzonga National Park** | Sikkim | 2018 |

### *சமீபத்தையப் பிரச்சினை*

- மத்திய அரசானது மத்தியப் பிரதேச மாநில அரசு மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசு ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் காப்பகத்தின் வழியாக கென் நதியை பெட்வா நதியுடன் இணைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது நாட்டின் முதலாவது நதிநீர் இணைப்புத் திட்டமாகும்.
- இது 283 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தௌத்கான் அணையின் கட்டமைப்பை உள்ளடக்கியுள்ளது.
- இது பந்தேல்கண்ட்டின் வறட்சிப் பகுதிகளுக்கு நீர் அளிக்கின்றது.

- பன்னா ஆனது காடுகள் மற்றும் சதுப்பு நிலப் பகுதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது மத்தியப் பிரதேசத்தில் பன்னா மற்றும் சத்தர்பூர் மாவட்டங்களில் 576 கிலோ மீட்டர் அளவில் பரவியுள்ளது.
- இது ஒரு முக்கியமான புலிகள் வாழ்விடம் மற்றும் பன்னா புலிகள் காப்பகத்தைக் கொண்டுள்ளது.
- இது கஜுராகோ நினைவுச் சின்னங்கள் என்ற ஒரு யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னத்தையும் கொண்டுள்ளது.
- இது 1993 ஆம் ஆண்டில் இந்தியாவின் 22வது புலிகள் காப்பகமாகவும் மத்தியப் பிரதேசத்தில் 5வது புலிகள் காப்பகமாகவும் அறிவிக்கப் பட்டது.
- இந்தியாவில் உள்ள 18 உயிர்க் கோளக் காப்பகங்களில் 12 காப்பகங்கள் உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பின் ஒரு பகுதியாக உள்ளன.




## மன்சார் ஏரி மேம்பாட்டுத் திட்டம்

- ஜம்மு-காஷ்மீரில் மன்சார் ஏரி மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசானது சமீபத்தில் துவக்கியது.
- சுரின்சார் ஏரியும் மன்சார் ஏரியும் இரட்டை ஏரிகளாகக் கருதப்படுகின்றன.
- சுரின்சார்-மன்சார் ஏரிகள் நவம்பர் 2005 ஆம் ஆண்டில் ராம்சார் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இடம் பெற்றன.
- இது ஜம்முவில் அமைந்துள்ளது.
- இது ஒரு நன்னீர் ஏரி மற்றும் ஒரு இயற்கை ஏரி ஆகும்.




## யமுனையில் அம்மோனியாவின் அளவுகள் அதிகரிப்பு


- யமுனையாற்றில் அம்மோனியா அளவானது, ஒரு மில்லியனுக்கு 3 பகுதிகள் (parts per million - ppm) என்ற அளவினை எட்டியுள்ளது .
- இந்தியத் தர நிர்ணயப் பணியகத்தின் படி, இது ஏற்றுக் கொள்ளத் தக்க வரம்பான 0.5 ppm என்ற அளவை விட கிட்டத்தட்ட ஆறு மடங்கு அதிகமாகும்.
- அம்மோனியா ஒரு நிறமற்ற வாயுவாகும்.
- இது ஹைட்ரஜன் மற்றும் நைட்ரஜனைக் கொண்டுள்ளது.
- உரங்கள், நெகிழிகள், செயற்கை இழைகள், சாயங்கள் மற்றும் பிற பொருட்களின் உற்பத்தியில் இது ஒரு தொழில்துறை இரசாயனமாக பயன்படுத்தப்படுகிறது.
- கரிமக் கழிவுப் பொருட்களின் சிதைவிலிருந்து சுற்றுச்சூழலில் இயற்கையாகவே அம்மோனியா உருவாகிறது.




## 2050 ஆம் ஆண்டில் கடுமையான நீர் பற்றாக்குறை

- இந்தியாவின் 30 நகரங்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள நூறு நகரங்கள் 2050 ஆம் ஆண்டிற்குள் 'கடுமையான நீர் பற்றாக்குறை' அபாயத்தை எதிர்கொள்ள இருக்கின்றன.
- இது இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் சமீபத்திய ஒரு அறிக்கையின் படி வெளியானதாகும்.
- இதில் அடையாளம் காணப்பட்ட நகரங்களில் பாதிக்கும் மேற்பட்டவை சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

- இந்திய நகரங்கள்: ஜெய்ப்பூர், இந்தூர், தானே, ஸ்ரீநகர், ராஜ்கோட், பெங்களூரு போன்றவையாகும்.
- தற்போது, அதிக நீர் ஆபத்தில் இருக்கக் கூடிய உலக மக்கள் தொகை 17% ஆகும்.




## காலநிலை மாற்றம் குறித்த இந்திய சிஇஓ மன்றம்

- இந்த மன்றத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் தலைமை வகித்தார்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலம் 450 ஜிகாவாட் மின் உற்பத்தியை அடையும் இந்தியாவின் இலக்கையும் ஜவ்டேகர் சுட்டிக் காட்டினார்.
- இந்தியாவின் தலா தனி நபர் கரிம உமிழ்வுகளானது மிகவும் குறைவாக உள்ளது.
- வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடப் படுகையில் இந்தியாவானது உமிழ்வுகளை வெளியிடுவதில் குறைந்த அளவு பங்களிப்பையே அளித்து இருக்கின்றது.
- இந்தியாவானது கார்பன் உமிழ்வுகளைக் குறைப்பதற்காக பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ், தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை அறிவித்துள்ளது.
- இந்தியாவானது தனது உமிழ்வுச் செறிவை 35% என்ற அளவிற்குக் குறைக்கவுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு வாக்கில் 175 ஜிகாவாட் புதுப்பிக்கத் தக்க ஆற்றலையும் 100 ஜிகாவாட் சூரிய ஒளி ஆற்றலையும் பெற உள்ளது.

## கடாகீ குழு

- 2020 ஆம் ஆண்டு மே 27 அன்று ஒரு மிகப்பெரிய தீ விபத்தானது இந்திய எண்ணெய் நிறுவனத்தின் பாக்ஜன் எண்ணெய் வயலில் ஏற்பட்டது.
- அந்தத் தீ இதுநாள் வரை அணைக்கப் படவில்லை.
- கனடாவைச் சேர்ந்த ஒரு சுரங்க நிறுவனமானது இந்தத் தீயை அணைப்பதற்காக வரவழைக்கப் பட்டுள்ளது.
- கடாகீ குழுவானது இந்தத் தீ விபத்து குறித்து ஒரு அறிக்கை அளிப்பதற்காக தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

## காற்றுத் தர மேலாண்மைக்கான ஆணையம்


- ❖ தில்லியின் முன்னாள் தலைமைச் செயலாளரான M.M. குட்டி என்பவர் தேசியத் தலைநகரப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றுத் தர மேலாண்மைக்கான ஆணையத்தின் (Capital Region and Adjoining Areas - CAQM) தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ CAQM ஆனது தில்லி, பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் நிலவும் காற்று மாசு குறித்த சிக்கலைக் களைய உள்ளது.
- ❖ CAQM ஆனது பல்வேறு மாசுபாடு-கண்காணிப்பு அமைப்புகளைக் களைந்த பின்னர் உருவாக்கப் பட்டுள்ளது.
- ❖ இதில் மிக முக்கியமாக 22 வருடமாக இருந்த சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையமும் அடங்கும்.
- ❖ இவ்வாணையம் டெல்லி தேசிய தலைநகரப் பிராந்தியத்தில் காற்று மாசுபாட்டை குறைப்பதில் பங்காற்றியது.

## கோட்டூர் யானைகள் புனர்வாழ்வு மையம்

- ❖ கோட்டூர் யானைகள் புனர்வாழ்வு மையமானது கேரளாவின் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ளது.
- ❖ யானைகளுக்கான உலகின் மிகப்பெரிய நல மற்றும் சீராக்க மையம் இதுவாகும்.
- ❖ இந்தத் திட்டமானது நெய்யார் அணைப் பகுதியில் பல்வேறு நீர்த் தேக்கங்கள் மற்றும் தடுப்பு அணைகளின் கட்டுமானத்தையும் உள்ளடக்கி உள்ளது.

## இமயமலையில் தார் உருண்டைகள்

- ❖ இமயமலை-திபெத்திய பீடபூமியில் தார் உருண்டைகள் இருப்பதாக ஓர் ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.



- இவை சிறிய அளவில் ஒளி உறிஞ்சும் கார்பனேசியத் துகள்கள் ஆகும். இவை பனி மற்றும் பனிக்கட்டிகளில் உயிர்வாழ் அல்லது புதைபடிவ எரிமங்களை எரிப்பதால் உருவாகின்றன.
- இவை பனிப்பாறை உருகுவதை விரைவுபடுத்துகின்றன.
- இவை புதைபடிவ எரிமங்களை எரிக்கும் போது வெளியேற்றப்படும் பழுப்புக் கரிமத்திலிருந்து உருவாக்கப் படுகின்றன.

## பெருந் தடுப்புப் பவளத்திட்டு

- ஷிமிட் பெருங்கடல் பயிற்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் ஆஸ்திரேலியாவின் பெருந் தடுப்புப் பவளத் திட்டில் (Great Barrier Reef) இருந்து பிரிந்துள்ள ஒரு பெரிய பவளப் பாறைகளைக் கண்டுபிடித்துள்ளனர்.
- கடந்த 120 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் நிகழ்வு இதுவாகும்.
- அமெரிக்காவின் எம்பயர் ஸ்டேட் என்ற கட்டிடத்தை விட இந்தப் பாறை உயரமாக உள்ளது.
- பிரிக்கப்பட்ட இந்த திட்டுகள் கடல் தளத்தோடு சேர்ந்தே உள்ளது. ஆனால் அவை பெருந் தடுப்புப் பவளத் திட்டின் முக்கிய பாகத்தின் ஒரு பகுதியாக இல்லை.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த பிரிக்கப்பட்ட பாறைகளுடன் சேர்த்து, இப்போது மொத்தமாக எட்டு பிரிக்கப்பட்ட பாறைகள் உள்ளன.




## புயல்கள் இல்லாத அக்டோபர் மாதம் – 2020

- அக்டோபர் முதல் டிசம்பர் காலப் பகுதியானது வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் பகுதிகளில் புயல்கள் ஏற்படுவதற்கான உகந்த மாதங்களாக விளங்குகின்றன.
- இந்த ஆண்டு அக்டோபர் மாதமானது எந்தவொரு புயலையும் சந்திக்கவில்லை.
- கடல் வானிலை மாற்றங்கள் தென் சீனக் கடல் பகுதியில் இருந்து வங்காள விரிகுடாவில் நுழைந்து அதன் பின் இந்தியக் கடற்கரையை நோக்கி நகரும்.
- இந்த ஆண்டு புயல் தீவிரமடைவதற்கான எந்தவொரு சூழ்நிலையும் ஏற்படவில்லை.
- மேலும் நிலநடுக்கோட்டுப் பசிபிக் கடல் பகுதியில் வலுவற்ற லா நினா சூழ்நிலைகள் நிலவுகின்றன.
- மேலும் மேடன் ஜுலியன் அலைவுகளின் (Madden Julian Oscillation - MJO) தாக்கமும் இங்கு காணப்படுகின்றது.
- MJO என்பது வெப்ப மண்டலப் பகுதியின் ஊடாக கிழக்கு நோக்கி நகரும் சூறாவளி வானிலை நிகழ்வின் ஒரு பகுதியாகும்.

- இது மழைப் பொழிவு, காற்று, கடல் மேற்பரப்பு வெப்ப நிலை மற்றும் மேகக் கூட்டம் ஆகியவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் ஏறத்தாழ 80 புயல்கள் ஏற்படுகின்றன.
- இதில் 5 புயல்கள் வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடலில் ஏற்படுகின்றன.
- இவை இரண்டும் சேர்ந்து வட இந்தியப் பெருங்கடல் என்று அழைக்கப்படுகின்றன.
- வட இந்தியப் பெருங்கடலில் ஏற்படும் சூறாவளிகள் இயற்கையில் இரு முகட்டுத் தன்மையுடையதாக உள்ளன.
- இவை ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரை (பருவ மழைக்கு முன்பு) மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை (பருவ காலத்திற்குப் பின்பு) என இரண்டு காலங்களில் ஏற்படுகின்றன.

## கங்கை நதியில் 49% அதிக பல்லுயிர்ப் பெருக்கம்

- சமீபத்தில் இந்திய வனவுயிர் அறக்கட்டளை மையமானது கங்கை நதி குறித்த ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்வின்படி, கங்கை நதியின் 49% பகுதியானது அதிகப் பல்லுயிர்ப் பெருக்கம் கொண்டதாக உள்ளது.
- இந்த ஆய்வானது மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்படும் தேசியத் தூய்மை கங்கைத் திட்டத்தின் சார்பாக இந்திய வனவுயிர் அறக்கட்டளை மையத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- உத்தரகாண்ட்டில் உள்ள ராஜாஜி தேசியப் பூங்கா, பீகாரில் உள்ள விக்ரமஷீலா கங்கை ஓங்கில் (டால்பின்) சரணாலயம், ஹஸ்தினாபூர் வனவிலங்குச் சரணாலயம் ஆகியவை இந்த 10% உயர் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளாகும்.
- கங்கை நதியில் கங்கை ஓங்கில்கள் மற்றும் நீர்நாய்கள் எண்ணிக்கையில் அதிகரித்து உள்ளன.
- இது கங்கை நதியில் மாசுபாட்டு அளவானது குறைந்துள்ளதையும் அந்த நதியானது ஆரோக்கியமான நிலையில் உள்ளதையும் குறிக்கின்றது.

## பன்னாட்டுப் பறவைத் திருவிழா - 2021

- பன்னாட்டுப் பறவைத் திருவிழாவானது உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூரில் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளது.
- இது பறவைகளைப் பார்ப்பதற்காக வேண்டி ராம்கர்தால் ஏரியில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும்.

## அமூர் வல்லூறுகள்

- மணிப்பூர் மாநிலத்தில் அமூர் வல்லூறுகளை வேட்டையாடுதல், விற்பனை செய்தல் மற்றும் வளர்த்தல் ஆகியவற்றைத் தடை செய்வதாக அம்மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- இவை "இந்திய வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972" என்ற சட்டத்தின் கீழ் பாதுகாக்கப் படுகின்றன.
- இவை நீண்ட தூரம் இடம்பெயரும் பறவை இனங்களாகும்.
- இவை ஓய்விற்காக மணிப்பூர் மற்றும் நாகாலாந்திற்கு வருகை புரிகின்றன.

- இவை குளிர்காலம் துவங்கிய பின்னர் சுமார் இரண்டு மாதங்களுக்கு வடகிழக்கு மாநிலங்களில் தங்கும் சைபீரியப் பறவைகளாகும்.
- குளிர்காலத்திற்குப் பிறகு, இவை தென்னாப்பிரிக்காவிற்குப் புறப்படுகின்றன.
- நாகாலாந்தில் உள்ள டோயாங் ஏரியும் இந்தப் பறவைகளுக்கான ஒரு சரணாலயம் ஆகும்.
- ஆகவே, நாகாலாந்து "உலக வல்லூறுகளின் தலைநகரம்" என்று அழைக்கப் படுகிறது.




## லோனார் மற்றும் சுர் சரோவர் ஏரி

- மகாராஷ்டிராவில் உள்ள லோனார் ஏரி மற்றும் உத்தரப் பிரதேசத்தின் ஆக்ராவில் உள்ள சுர் சரோவர் ஏரி ஆகியவை ராம்சார் தளப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- நாட்டில் உள்ள ஒரேயொரு பள்ள ஏரி (Crater lake) லோனார் ஏரி ஆகும்.
- இந்தப் பள்ளமானது தக்காணப் பீடபூமியின் தக்காணப் பொறிகளுக்குள் அமைந்து உள்ளது.
- பென்கங்கா மற்றும் பூர்ணா ஆகிய 2 சிறிய நீரோடைகள் லோனார் ஏரியில் கலக்கின்றன.
- லோனார் ஏரியானது சயானோ பாக்டீரியாவின் இருப்பின் காரணமாக பொதுவாக பச்சை நிறத்தில் காணப்படுகின்றது.
- இந்த ஏரியானது 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் மாறியது.
- இதற்குக் காரணம் ஹேலோபிலிக் ஆர்க்கியா (halophilic archaea) அல்லது ஹேலோ ஆர்க்கியா (haloarchea) எனப்படும் உப்பை விரும்பும் பாக்டீரியாவின் இருப்பு ஆகும்.
- இந்த பாக்டீரியாக்கள் அதிக உப்புத் தன்மையுடன் தொடர்புடையது ஆகும்.
- எனினும் இந்த ஏரியின் இளஞ்சிவப்பு நிறமானது நிரந்தரமானதல்ல.
- சூர் சரோவர் ஏரியானது கீதம் ஏரி என்றும் அழைக்கப் படுகின்றது.
- ராம்சார் ஒப்பந்தமானது யுனெஸ்கோவினால் ஈரானில் 1971 ஆம் ஆண்டில் கையெழுத்திடப் பட்டது.
- இந்த இரண்டு ஈரநிலங்களின் உள்ளடக்கத்தையும் சேர்த்து இந்தியாவில் உள்ள மொத்த தளங்களின் எண்ணிக்கை 41 ஆகும்.
- இதுவே தெற்கு ஆசியப் பகுதியில் மிக அதிகமானதாகும்.

## அந்தமானில் புதிய மரத்தவளை இனம்

- இந்தியத் தாவரவியல் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அந்தமான் தீவு மற்றும் இந்தியாவின் வடகிழக்கு ஆகிய பகுதிகளில் காணப்படும் ஒரு புதிய மரத் தவளை இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- ரோகானிக்சாலஸ் விட்டாடஸ் (உரித்த குமிழி கூட்டுத் தவளை) ஆனது அந்தமான் தீவில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இது இலங்கையைச் சேர்ந்த உயிரின வகைப் பிரிப்பாளரான ரோகன் பெத்தியாகோடாவின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- அந்தமான் தீவில் ஒரு மரத் தவளை இனம் கண்டறியப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.




## இந்தியாவின் முதலாவது குவியத் திட்டம் (ஒருங்கிணைக்கப் பட்டது)

- வேளாண் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கான பசுமை ஆற்றலை உற்பத்தி செய்வதற்காக இந்தியாவின் முதலாவது குவியத் திட்டமானது கோவாவில் அமைக்கப்பட உள்ளது.
- இந்தத் திட்டமானது காலநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், செயற்கை நுண்ணறிவு ஆகிய மூன்றும் ஒன்று சேர்க்கப் பட்ட கருத்துருக்களை அடிப்படையாகக் கொண்டு அதிகரித்து வரும் ஆற்றல் தீர்வுகளின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் கார்பன் நீக்கத்திற்கு வழிவகுக்கும் தீர்வுகளை வழங்கும் வகையில் எல்இடி விளக்குகள், சூரிய ஒளி ஆற்றல் மற்றும் ஆற்றல் சேமிப்பு போன்ற துறைகளை இணைப்பதாகும்.
- அமைப்புசார், சமூகம், நிறுவனம் மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு ஆகியவை ஒருங்கிணைக்கப்படும் திட்டங்கள் குவியத் திட்டங்கள் என்று குறிக்கப்படுகின்றன.
- இந்தியாவானது 2022 ஆம் ஆண்டில் 40 ஜிகாவாட் என்ற அளவில் மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தி ஆற்றல் பொருத்தப்படுவதற்கான ஒரு இலக்கை நிர்ணயித்துள்ளது.
- இந்தியாவானது 2022 ஆம் ஆண்டில் 450 ஜிகாவாட் என்ற அளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அடைவது என்ற ஒரு முதன்மை இலக்கை நிர்ணயித்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 36.17% நிறுவப்பட்ட மின்சார உற்பத்தியானது புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்துப் பெறப் பட்டதாகும்.
- இந்தியாவின் தேசிய அளவிலான நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு இலக்கு என்பது புதைபடிவம் அல்லாத எரிபொருளிலிருந்து 40% என்ற அளவிற்கு மொத்த மின்சார உற்பத்தியை 2030 ஆம் ஆண்டில் அடைவதாகும்.

## நிகர்நிலைக் காடுகள்

- ❖ கர்நாடகா மாநில அரசானது அம்மாநிலத்தின் நிகர்நிலைக் காடுகள் பிரிவில் மொத்தமுள்ள 9.94 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 6.64 இலட்சம் ஹெக்டேர் காடுகளை மிக விரைவில் மறு வகைப்படுத்த உள்ளது.
- ❖ நிகர்நிலைக் காடுகளை வரையறை செய்வதில் மாநிலங்கள் முழு சுதந்திரத்தைக் கொண்டுள்ளன.
- ❖ நிகர்நிலைக் காடுகள் என்பது வரலாற்று ஆவணங்கள் அல்லது அரசு ஆவணங்களின் காடுகளாக வகைப்படுத்தப்படாத, ஆனால் காடுகளாகக் காட்சியளிக்கும் ஒரு வகை நிலப் பகுதிகளாகும்.
- ❖ நிகர்நிலைக் காடுகள் இந்தியாவில் உள்ள மொத்த வனப் பகுதியில் 1% அளவினைக் கொண்டுள்ளன.
- ❖ வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 என்ற சட்டத்தின் படி வனப் பகுதியின் பாதுகாப்பானது இந்திய உச்சநீதிமன்றத்தினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.
- ❖ 1996 ஆம் ஆண்டில், கோதவர்மன் என்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றமானது நிகர்நிலைக் காடுகளை அடையாளம் கண்டு, அவற்றை வகைப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

## மேகாலயாவின் ஒளிரும் காளான்கள்

- ❖ வடகிழக்கு இந்தியாவின் காடுகளில் மேற்கொள்ளப் பட்ட காளான் ஆவணமாக்கல் என்ற ஒரு திட்டத்தின் கீழ் பயோலூமினசென்ட் அல்லது ஒளி உமிழும் வகைக் காளான்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- ❖ இந்தப் புது வகை காளான், முதன்முதலில் மேகாலயாவின் கிழக்கு காசி மலைகள் மாவட்டத்தில் மவ்லின்நொங்கில் ஒரு நீரோடைக்கு அருகிலும் பின்னர் மேற்கு ஜெயந்தியா மலைகள் மாவட்டத்தில் கிராங் ஷூரி என்ற பகுதியிலும் காணப்பட்டது.
- ❖ இது இப்போது உலகில் அறியப்பட்ட 97 ஒளி உமிழும் பூஞ்சை வகைகளில் ஒன்றாகும்.
- ❖ ஒரு உயிரினத்தால் வெளிப்படும் ஒளியின் நிறம் அதன் வேதியியல் பண்புகளைப் பொறுத்தது ஆகும்.
- ❖ பூஞ்சையின் ஒளி உமிழ்விற்குக் காரணம் லூசிஃபெரேஸ் என்ற ஒரு நொதியாகும்.



## பிலிபித் புலிகள் காப்பகம்

- ❖ உத்தரப் பிரதேசத்தின் பிலிபித் புலிகள் காப்பகமானது ‘முதலாவது சர்வதேச விருது TX2’ என்ற விருதினை வென்றுள்ளது.
- ❖ இது 4 ஆண்டுகளில் தனது புலிகளின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரித்தற்காக வேண்டி வழங்கப்பட்டு இருக்கின்றது.

- 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கையை இருமடங்காக மாற்றுவதற்கு என்று ஒரு இலக்கானது நிர்ணயிக்கப் பட்டிருந்தது.
- இது 2018 ஆம் ஆண்டில் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தினால் மேற்கொள்ளப் பட்ட புலிகள் கணக்கெடுப்பு என்பதின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- உலகளாவியப் புலிகள் மன்றம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், புலிகள் பாதுகாப்புத் தரத்திற்கான நிர்ணயங்கள் மற்றும் சிங்கங்களின் பங்கு ஆகியவை இதன் பங்காளர்களாகும்.
- புலிகள் வாழும் வரம்பைச் சேர்ந்த எந்தவொரு நாடும் பத்து ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதில் வெற்றி பெறவில்லை.
- தற்பொழுது புலிகள் சுதந்திரமாக நடமாடி வரும் வகையில் 13 புலிகள் வாழும் வரம்பு நாடுகள் உள்ளன.
- இந்தியா, பூடான், வங்க தேசம், கம்போடியா, இந்தோனேசியா, சீனா, ரஷ்யா, மலேசியா, லாவோஸ், தாய்லாந்து, மியான்மர், வியட்நாம் மற்றும் நேபாளம் ஆகியவை இந்தப் புலிகள் வரம்பு நாடுகளாகும்.

## நிவர் புயல்

- நிவர் புயலானது புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது.
- இந்த வெப்பமண்டலச் சூறாவளியானது அதி தீவிரப் புயல் எனும் நிலையிலிருந்து தீவிரப் புயலாக மாறியது.
- நிவர் என்ற பெயரானது ஈரான் நாட்டினால் வழங்கப் பட்டுள்ளது.
- நிவர் என்பது நிசர்கா (வங்க தேசம்) மற்றும் கதி (இந்தியா) ஆகியவற்றிற்கு அடுத்து வழங்கப்பட்ட 3வது பெயராகும்.
- இது 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வட இந்தியப் பெருங்கடல் புயல்களுக்கான புதிய பெயர்ப் பட்டியலிலிருந்து பயன்படுத்தப் பட்டது.
- இது 13 நாடுகளிலிருந்து, ஒவ்வொரு நாடும் பரிந்துரைத்த 13 பெயர்களின் ஒரு தொகுப்புடன், 169 பெயர்களைக் கொண்டுள்ளது.
- தாய்லாந்து நாட்டினால் பரிந்துரைக்கப்பட்ட ஆம்பன் புயலானது 2004 ஆம் ஆண்டின் தொடரில் இருந்த ஒரு கடைசிப் பெயராகும்.

**New List of Names for Tropical Cyclone over North Indian Ocean**

| Place | List 1 | List 2 | List 3 | List 4 | List 5 | List 6 | List 7 | List 8 | List 9 | List 10 | List 11 | List 12 | List 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Bangladesh | Nisarga | Biparjoy | Arnab | Upakul | Barshon | Rajani | Nishith | Urmi | Meghala | Samiran | Pratikul | Sarobor | Mahanisha |
| India | Gati | Tej | Murasu | Aag | Vyom | Jhar | Probaho | Neer | Prabhanjan | Ghurni | Ambud | Jaladhi | Vega |
| Iran | Nivar | Hamoon | Alvan | Sepand | Booran | Anahita | Azar | Pooyan | Arsham | Hengame | Savas | Tahamtan | Toofan |
| Maldives | Burevi | Midhili | Kaani | Odi | Kenau | Endheri | Riyau | Guruva | Kurangi | Kuredhi | Horangu | Thundi | Faana |
| Myanmar | Tauktae | Michaung | Ngamann | Kyarthit | Sapakyee | Wetwun | Mwaihout | Kywe | Pinku | Yinkaung | Linyone | Kyeekan | Bautphat |
| Oman | Yaas | Remal | Sail | Naseem | Muzn | Sadeem | Dima | Manjour | Rukam | Watad | Al-jarz | Rabab | Raad |
| Pakistan | Gulab | Asna | Sahab | Afshan | Manahil | Shujana | Parwaz | Zannata | Sarsar | Badban | Sarrab | Gulnar | Waseq |
| Qatar | Shaheen | Dana | Lulu | Mouj | Suhail | Sadaf | Reem | Rayhan | Anbar | Oud | Bahar | Seef | Fanar |
| Saudi Arabia | Jawad | Fengal | Ghazeer | Asif | Sidrah | Hareed | Faid | Kaseer | Nakheel | Haboob | Bareq | Alreem | Wabil |
| Sri Lanka | Asani | Shakhti | Gigum | Gagana | Veramaha | Garjana | Neeba | Ninnada | Viduli | Ogha | Salitha | Rivi | Rudu |
| Thailand | Sitrang | Montha | Thianyot | Bulan | Phutala | Aiyara | Saming | Kraisan | Matcha | Mahingsa | Phraewa | Asuri | Thara |
| United Arab Emirates | Mandous | Senyar | Afoor | Nahhaam | Quffal | Daaman | Deem | Gargoor | Khubb | Degl | Athmad | Boom | Saffar |
| Yemen | Mocha | Ditwah | Diksam | Sira | Bakhur | Ghwyzi | Hawf | Balhaf | Brom | Shuqra | Fartak | Darsah | Samhah |

# மாநிலச் செய்திகள்

## தரணி இணையதளம்

- தெலுங்கானா அரசானது தரணி என்ற இணையதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது நிலப் பதிவுகளை எண்ம முறையில் சேமித்து வைப்பதற்கும், சொத்துக்களைப் பதிவு செய்வதற்குமான நாட்டின் முதல் வகையான முயற்சியாகும்.
- தகவல் தொழில்நுட்பத்தை தனது வருவாய்த் துறையில் பயன்படுத்திய முதல் மாநிலமாக தெலுங்கானா திகழ்கிறது.




## காய்கறிகளுக்கான குறைந்த பட்ச ஆதார விலையை (MSP) நிர்ணயித்த முதலாவது மாநிலம்

- 16 வேளாண் பொருட்களுக்கு MSP விலையை நிர்ணயித்த முதலாவது மாநிலம் கேரளா ஆகும்.
- இது காய்கறிகள், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- அடிப்படை விலையானது காய்கறிகளின் உற்பத்தி விலையை விட 20% அதிகமாக இருக்கும்.



- மேலும் தொடர்ச்சியாக MSP விலையைத் திருத்த விதிமுறைகளும் உள்ளன.
- உள்ளாட்சி அமைப்புகள் காய்கறிகளைக் கொள்முதல் செய்து, அவற்றை விநியோகப் படுத்தும் பணியை மேற்கொள்ளும்.

## கெவாடியா சுற்றுலாச் சுற்றுப் பகுதி

- தற்போது 'கெவாடியா சுற்றுலாச் சுற்றுப் பகுதி' (Kevadia Tourism Circuit) என்று அழைக்கப் படுகின்ற, ஒற்றுமைச் சிலை இருக்கின்ற பகுதியைச் சுற்றி சில சுற்றுலாத் திட்டங்களைப் பிரதமர் மோடி அவர்கள் சமீபத்தில் துவங்கி வைத்தார்.
- கெவாடியா குஜராத்தின் பழங்குடி நர்மதை மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமமாகும்.
- இது நர்மதை ஆற்றில் உள்ள சர்தார் சரோவர் அணை நீர்த் தேக்கத்தின் தாயகமாகும்.
- குஜராத்தில் உள்ள கெவாடியாவில் குழந்தைகளுக்கான உலகின் முதல் தொழில் நுட்பம் சார்ந்த ஊட்டச்சத்துப் பூங்காவைப் பிரதமர் திறந்து வைத்தார்.

## கேரளாவில் 10% ஒதுக்கீடு

- கேரள அரசுப் பணியாளர் தேர்வாணையமானது அதன் மாநில அரசுப் பணிகளில் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவினைச் சேர்ந்த நபர்களுக்கு 10% இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த உள்ளது.
- இது பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப் படும் 50% இட ஒதுக்கீட்டைப் பாதிக்கக் கூடாது.
- இது அரசியலமைப்பின் 103வது திருத்தத்திற்கு ஏற்ப உள்ளது.

## லுஹ்ரி முதல் கட்ட நீர்மின் திட்டம்

- 210 மெகாவாட் திறன் கொண்ட லுஹ்ரி முதல் கட்ட நீர்மின் திட்டத்திற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சட்லெஜ் ஆற்றின் மீது இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லா மற்றும் குலு மாவட்டங்களில் அமைந்துள்ளது.

## பசுமையை நோக்கிச் செல்லுங்கள் பிரச்சாரம் – ஆந்திரப் பிரதேசம்

- "பசுமையை நோக்கிச் செல்லுங்கள்" (Go Electric Campaign) பிரச்சாரமானது ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் எரிசக்தி பாதுகாப்புத் திட்டத்துடன் இணைந்து எரிசக்தி திறன் பணியகத்தால் தொடங்கப் பட்டுள்ளது.
- மின்சார வாகனங்களின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக வேண்டி மாநிலம் முழுவதும் 400 மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை ஆந்திரப் பிரதேச அரசானது அமைக்க உள்ளது.
- எரிசக்தி திறன் பணியகத்தின் "பசுமையை நோக்கிச் செல்லுங்கள்" பிரச்சாரத்துடன் ஒருங்கிணைந்து இது அடையப்பட இருக்கின்றது.
- மின்னேற்ற நிலையங்கள் மற்றும் மின்சார வாகன உள்கட்டமைப்புகள் ஆகியவற்றை அமைப்பதன் மூலம் மின்சார வாகனத் துறையில் முதலீட்டை ஈர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

## சுற்றுலா வசதி மையம்

- கேரளாவின் குருவாயூரில் "சுற்றுலா வசதி மையத்தை" மத்திய சுற்றுலா அமைச்சகம் துவக்கி வைத்தது.
- சுற்றுலா அமைச்சகத்தின் பிரசாத் எனும் திட்டத்தின் கீழ் இந்த மையம் கட்டப் பட்டு உள்ளது.
- கடைசி கட்டப் புள்ளியுடனான இணைப்பு, நுழைவுப் புள்ளிகள், சுற்றுச்சூழல் பாதிப்பற்ற போக்குவரத்து முறைகள், விளக்க மையங்கள், ஏடிஎம் / பணப் பரிமாற்றம் மற்றும் பிற அடிப்படைச் சுற்றுலா வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை பிரசாத் திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## தனியார் துறையில் இட ஒதுக்கீடு

- தனியார் துறை வேலைகளில் உள்ளூர் மக்களுக்கு 75% இடஒதுக்கீடு வழங்கும் ஒரு மசோதாவை ஹரியானா அரசானது நிறைவேற்றியுள்ளது.
- மாதத்திற்கு ரூ.50,000க்கும் குறைவாக ஊதியம் தரும் தனியார் நிறுவனங்களில் இந்த இட ஒதுக்கீடு பொருந்தும்.
- ஆயினும், இந்த மசோதா இந்திய அரசியலமைப்பின் பிரிவு 14 மற்றும் 19 என்ற பிரிவுகளை மீறுகிறது.
- இவை சட்டத்தின் முன் சமத்துவத்தையும், இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் எந்தவொரு தொழிலையும் கடைபிடிக்கும் உரிமையையும் வழங்குகின்றன.
- எனவே, இது சட்டமாக மாறுவதற்கு முன்னர் அதற்கு ஜனாதிபதி ராம் நாத் கோவிந்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

## ஹசிரா-கோஹா ரோ-பாக்ஸ் படகுச் சேவை

- இது தெற்கு குஜராத் மற்றும் சௌராஷ்டிரா பகுதிக்கான ஒரு நுழைவு வாயிலாகச் செயல்பட உள்ளது.
- இது கோஹா மற்றும் ஹசிரா ஆகியவற்றிற்கான தொலைவை 370 கிலோ மீட்டர்களிலிருந்து 90 கிலோ மீட்டர்களாக குறைக்க உள்ளது.




## திரும்ப அழைத்தலுக்கான உரிமை

- ஹரியானா மாநிலமானது ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் தனது பணியைச் சரிவர செய்யாத பட்சத்தில் அவரைத் திரும்ப அழைத்தலுக்கான உரிமை குறித்த ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இது இரகசிய வாக்குப் பதிவின் மூலம் மேற்கொள்ளப் பட உள்ளது. அவர்களைத் திரும்ப அழைத்தலானது அவர்களுக்கு எதிராக 2/3 உறுப்பினர்களின் ஆதரவு (எதிராக வாக்களித்தல்) என்பதன் அடிப்படையில் மேற்கொள்ளப் பட இருக்கின்றது.
- ஹரியானா பஞ்சாயத்து ராஜ் (2வது திருத்தம்) மசோதா, 2020 என்ற மசோதா ஆனது அம்மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- இந்தத் திருத்தமானது வாக்காளர்களுக்கு உறுப்பினர்களின் பொறுப்புடைமையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்த ஊராட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீட்டை வழங்குகின்றது.
- இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே "மிகவும் பின்தங்கியவர்களுக்கு" 8% இடஒதுக்கீட்டை வழங்குகின்றது.

## பீகார் தேர்தல் முடிவுகள் 2020

- இந்தியத் தேர்தல் ஆணையமானது பீகார் மாநிலத்திற்கான தேர்தல் முடிவுகளை அறிவித்துள்ளது.
- தேசிய ஜனநாயகக் கூட்டணி 125 இடங்களை வென்று ஒரு முழுமையான பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் படி, பாஜக 72 இடங்களையும், ஜனதா தளம் (ஒன்றுபட்டது) 42 இடங்களையும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் 75 இடங்களையும் வென்று உள்ளது.
- தேஜஸ்வி யாதவ் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதா தளம் என்ற கட்சியானது பீகாரில் மிகப்பெரிய ஒரு கட்சியாக உருவெடுத்துள்ளது.

## சேச்சா சமதன் - ஒடிசா

- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் 'சேச்சா சமதன்' செயலியைத் தொடங்கி வைத்து உள்ளார்.
- இந்தச் செயலியானது விவசாயிகள் எதிர்கொள்ளும் பாசன பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்னா விதிமுறை

- ஜார்க்கண்ட் மாநிலச் சட்டமன்றம் பழங்குடியினருக்கான சர்னா விதிமுறை குறித்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சர்னாவை ஒரு தனி மதமாகச் சேர்க்க முற்படுகிறது.
- சர்னாவைப் பின்பற்றுபவர்கள் இயற்கையை வணங்குபவர்கள் ஆவர்.
- அவர்கள் தங்களை இந்துக்கள் என்று கருதுவதில்லை.
- அவர்கள் பல ஆண்டுகளாக ஒரு தனி மத அடையாளத்திற்காக போராடி வருகின்றனர்.

## கேரளாவின் ஒளியிழை வலைப்பின்னல் திட்டம்

- டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும், அரசுப் பொது அலுவலகங்களுக்கும் இலவச இணைய வசதியை வழங்குவதை கேரள அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இணைய அணுகலை 'குடிமக்களின் உரிமை' என்று ஆக்குவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற இந்தத் திட்டம் முயல்கிறது.

## பசு அமைச்சரவை

- மாநில அரசானது பசு அமைச்சரவையை அமைக்கும் என்று மத்தியப் பிரதேச மாநில முதல்வரான சிவராஜ் சிங் சௌகான் அவர்கள் அறிவித்துள்ளார்.
- இது அம்மாநிலத்தில் பசு இனத்தை ஊக்குவிப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் வேண்டி பணியாற்ற இருக்கின்றது.
- அசாம், கேரளா, கோவா, அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், திரிபுரா, நாகாலாந்து மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் பசு வதையின் மீது எந்தவொரு கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்க வில்லை.
- எனினும், சில மாநிலங்கள் காளைகள் மற்றும் காளை மாடுகளின் வதையை அனுமதிக்கின்றது.
- அந்த மாநிலங்கள் பின்வருமாறு: தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கோவா, ஒடிசா, மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகியனவாகும்.

## விஜயநகரம் மாவட்டம்

- கர்நாடகா மாநிலமானது நிர்வாகத்தை எளிமையாக்குவதற்காக பெல்லாரி மாவட்டத்திலிருந்து விஜய நகரம் எனப்படும் ஒரு புதிய மாவட்டத்தைப் பிரிக்க உள்ளது.
- இந்தப் பகுதியில் ஆட்சி செய்த விஜயநகரப் பேரரசின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- துங்கபத்திரா நதிக் கரையில் அமைந்துள்ள இது, ஹம்பியில் உள்ள நினைவுச் சின்னங்களை உள்ளடக்கியுள்ளது.
- ஹம்பி ஆனது யுனெஸ்கோ ஒரு உலகப் பாரம்பரியச் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## இந்தியா - சர்வதேச செர்ரி மலர்த் திருவிழா

- ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திருவிழாவானது மேகாலயா மாநிலத்தால் நடத்தப் படுகின்றது.
- இந்தியாவில் நடத்தப்படும் ஒரே செர்ரித் திருவிழா இதுவாகும்.
- இந்த ஆண்டு இந்தத் திருவிழாவானது கோவிட் – 19 தொற்றின் காரணமாக ரத்து செய்யப் பட்டுள்ளது.

## அபயம் செயலி

- இந்தச் செயலியை ஆந்திரப் பிரதேச மாநில அரசு தொடங்கியுள்ளது.
- இது அவசர காலச் சூழ்நிலைகளில் அபாய ஒலியை எழுப்புவதற்கு வேண்டி வாடகை மோட்டார் வண்டிகள் மற்றும் தானியங்கி இழுவை வண்டிகள் ஆகியவற்றில் பயணிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உதவுகின்றது.




## கேரள காவல் துறைச் சட்டம், 2011

- கேரள அரசானது புதிய அவசரச் சட்டத்தை நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது.
- இது 118A என்ற ஒரு புதிய பிரிவினைச் சேர்ப்பதற்காக கேரள காவல் துறைச் சட்டம், 2011 என்ற சட்டத்தைத் திருத்துகின்றது.
- பிரிவு 118A ஆனது இணைய தளங்களில் வெறுக்கத்தக்க தகவலை உருவாக்குபவர்களுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் ரூ.10,000 அபராதம் விதிப்பதற்குப் பரிந்துரை செய்து இருந்தது.

## ஹவேரி இரயில் நிலையம்

- இது சுதந்திரப் போராட்ட வீரரான மகாதேவ் மயிலார் என்பவரின் நினைவாக கர்நாடக மாநில அரசினால் மறு பெயரிடப்பட்டுள்ளது.
- ஏற்கெனவே கர்நாடகாவின் ஹூப்ளி இரயில் நிலையமானது 'ஸ்ரீ சித்தரூத்தா சுவாமி இரயில் நிலையம் – ஹூப்ளி' என்று மறுபெயரிடப்பட்டுள்ளது.
- இந்திய அரசின் மத்திய உள்துறை அமைச்சகமானது இந்தப் பெயர் மாற்றத்திற்கு எந்தவித ஒரு ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை.
- கர்நாடக மாநில அரசானது தேவநாகரி (இந்தி), ரோமன் (ஆங்கிலம்) மற்றும் பிராந்திய மொழிகளில் புதிய பெயர்களின் எழுத்துகள் குறித்து ஒரு அரசாணையை வெளியிட உள்ளது.



HISTORY AND LANDMARKS

| Stations | Proposed names |
|---|---|
| Haveri Railway Station | Mailara Mahadeva |
| Gadag Junction | Gadag-Betgeri |
| Gangavathi Railway Station | Kishkinda |
| Belagavi Railway Station | Belavadi Mallamma |

FOR THE WARRIOR: The railway station in Bengaluru has been named after Krantiveera Sangolli Rayanna. Rayanna was a warrior in the Kittur and was the Shetsanadi (sainik) of the kingdom of Kittur ruled by Rani Chennamma and fought the British till his death

Proposals must be sent to Union home ministry'

Any proposal on the renaming of stations must originate from the state government and sent to the Union home ministry, which will then take a call on it after discussions with the ministry of science and technology. This is to ensure clarity on spellings in English and Hindi. Once the proposal gets the necessary approval, the state government will be asked to issue a gazette notification. We are not aware of any proposal for renaming other railway stations.

Suresh Angadi | MINISTER OF STATE FOR RAILWAYS

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## போஸ்டனின் மூன்றாம் இந்தியா சர்வதேச திரைப்பட விழா

- இந்த விழாவில் மறைந்த நடிகரான ஓம் பூரி அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- மலையாள திரைப்படமான 'காந்தி', சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றது.
- சிறந்த நடிகர் ஆண்கள் பிரிவில் விருதானது விக்டர் பேனர்ஜி என்பவரால் வெல்லப் பட்டது.
- சிறந்த நடிகர் பெண்கள் பிரிவில் விருதானது ஷைலாஜா அம்பு என்பவருக்கு வழங்கப் பட்டது.





## கேசுபாய் படேல் (1928-2020)

- குஜராத்தில் பாஜகவின் முதல் முதல்வராக இருந்த கேசுபாய் படேல் (92) சமீபத்தில் காலமானார்.
- அவர் 1995 ஆம் ஆண்டு மார்ச் முதல் 1995 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலும் மற்றும் 1998 ஆம் ஆண்டு மார்ச் முதல் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலும் குஜராத்தின் முதல்வராக இருந்தார்.
- அவருக்குப் பின் குஜராத் முதல்வராக 2001 ஆம் ஆண்டு அக்டோபரில் நரேந்திர மோடி பதவியேற்றார்.



## சீன் கானரி

- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு நடிகரான சீன் கானரி அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- இவர் ஜேம்ஸ் பாண்ட் என்ற 007 பிரிட்டிஷ் முகவராக சித்தரிக்கப் பட்டதற்காக மிகவும் வெகு சிறப்பாக அறியப் படுகின்றார்.
- இந்த மாதிரியான கதாபாத்திரத்தில் நடித்த முதல் நபர் இவரே ஆவார்.
- இந்தக் கதாபாத்திரம் நாவலாசிரியரான இயான் பிளெமிங் அவர்களால் உருவாக்கப் பட்டுள்ளது.



## 28 ஆவது எழுத்தச்சன் புரஸ்காரம்

- எழுத்தாளர் பால் சக்கரியா அவர்கள் 28 ஆவது எழுத்தச்சன் புரஸ்காரம் என்ற விருதிற்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இந்த விருதானது மலையாள மொழியின் தந்தை துஞ்சத்து எழுத்தச்சன் என்பவரின் பெயரால் வழங்கப் படுகிறது..
- இது கேரள அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதாகும்.
- 1993 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது கேரள சாகித்ய அகாடமியால் வழங்கப் படுகிறது.

## எம்மெட் லீஹி விருது

- 2020 ஆம் ஆண்டிற்கான எம்மெட் லீஹி விருதானது புனேவின் மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த தினேஷ் கத்ரேக்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் இவராவார்.
- 1967 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிறுவப்பட்ட இந்த சர்வதேச விருதானது, பதிவுகள் மற்றும் தகவல் மேலாண்மைத் துறையில் நபர்களின் சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது.



## நாம் வெல்லும் வரை (Till We Win) - புத்தகம்

- இது எய்ம்ஸ் இயக்குனர் ரந்தீப் குலேரியாவின் ஒரு புதிய புத்தகமாகும்.
- இது இதர மற்ற இரண்டு மருத்துவர்களான சந்திரகாந்த் லஹாரியா மற்றும் ககன்தீப் காங் ஆகியோரால் இணைந்து எழுதப் பட்டுள்ளது.

- இது கோவிட் -19 தொற்றுக்கு எதிரான இந்தியாவின் போராட்டம் மற்றும் வரவிருக்கும் நாட்களில் தொற்றுநோயை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய ஒரு உறுதியான கருத்தை வழங்கும்.




## 14வது ஆசிய திரைப்பட விருதுகள் 2020

- தென் கொரியாவின் பூசனில் நடந்த 14வது ஆசிய திரைப்பட விருதுகளில் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்ற படமாக சிறந்த படத்திற்கான ஆஸ்கார் விருதைப் பெற்ற 'பாரசைட்' (Parasite) படமானது உருவெடுத்துள்ளது.
- 14வது ஆசிய திரைப்பட விருதுகளில் பின்னணி இசைக்கான சிறந்த விருதை இந்தியத் திரைப்படமான கல்லி பாய் என்ற திரைப்படம் பெற்றுள்ளது.
- இது சோயா அக்தர் என்பவரால் இயக்கப் பட்டுள்ளது.




## நேபாள இராணுவத்தின் கௌரவ ஜெனரல் பட்டம்

- இராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம்.நாரவனேவுக்கு நேபாள ராணுவத்தின் கௌரவ ஜெனரல் பதவியானது அந்நாட்டு அதிபர் பித்யா தேவி பண்டாரி அவர்களால் வழங்கப் பட்டது.
- நேபாளத்தின் காத்மாண்டுவில் உள்ள ஜனாதிபதியின் அலுவல்பூர்வ இல்லமான 'ஷீத்தல் நிவாஸில்' நடந்த ஒரு சிறப்பு விழாவில் அவர் கௌரவிக்கப் பட்டார்.
- 1950 ஆம் ஆண்டில் இந்தப் பட்டத்துடன் கௌரவிக்கப் பட்ட முதல் இந்திய இராணுவத் தலைவர், தலைமை கமாண்டர் ஜெனரல் கே.எம். கரியப்பா ஆவார்.
- கடந்த ஆண்டு ஜனவரியில், நேபாள இராணுவத் தலைவர் ஜெனரல் பூர்ண சந்திர தாபாவும் இந்திய இராணுவத்தின் கௌரவ ஜெனரலாக கௌரவிக்கப் பட்டார்.



## ஹாக்கி இந்தியாவின் தலைவர்

- வடகிழக்கிலிருந்து ஹாக்கி இந்தியா என்ற அமைப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தலைவர் மணிப்பூரைச் சேர்ந்த ஞானேந்திரோ என்பவராவார்.
- இவர் முஸ்தாக் அகமது என்பவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹாக்கி இந்தியா என்பது இந்தியாவில் ஹாக்கியை ஊக்குவிப்பதற்கென்று உள்ள ஒரே அமைப்பாக இந்திய அரசினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.



## காந்திய இளம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது காந்திய இளம் தொழில்நுட்ப விருதுகளை .(GYTI - Gandhian Young Technological Innovation) இரண்டு பிரிவுகளில் அறிவித்துள்ளது
- SITARE GYTI - ஆராய்ச்சி ஆய்வுகளின் முன்னேற்றத்திற்கான மாணவர்களின் கண்டுபிடிப்புகள் - உயிரியல் தொழில்நுட்ப தொழில் ஆராய்ச்சி உதவிக் குழு (BIRAC - Biotechnology Industry Research Assistance Council), உயிரியல் தொழில்நுட்பத் துறை (DBT - Department of Biotechnology) என்பதின் கீழ் காந்திய இளம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு.
- SRISTI GYTI - நிலையான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் - SRISTI வழங்கிய காந்திய இளம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு.


## இலண்டன் உலகப் பயணச் சந்தை விருது

- இலண்டன் உலகப் பயணச் சந்தை விருதானது கேரளச் சுற்றுலாத் துறைக்கு "உயர் பாராட்டு விருதை" வழங்கி கௌரவித்துள்ளது.
- கேரளச் சுற்றுலாத் துறையானது பொறுப்பு மிக்க சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான தனது சிறப்புமிகு நடவடிக்கைகளுக்காக வெகுவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.




## இலக்கியத்திற்கான ஜேசிபி விருது

- மலையாள எழுத்தாளரான S. ஹரீஸ் என்பவரால் எழுதப்பட்ட "மௌஸ்டாக்" என்ற புத்தகமானது இந்த விருதை வென்றுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒரு இந்திய இலக்கிய விருதாகும்.
- இது ஆங்கிலேயக் கட்டமைப்பு உற்பத்திக் குழுவான ஜேசிபி என்ற நிறுவனத்தால் நிதியளிக்கப் படுகின்றது.
- இது "இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க இலக்கிய விருது" என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது ஒவ்வொரு ஆண்டும் ரூ.25 இலட்சம் நிதித் தொகையுடன் வழங்கப்படுகின்றது.



## டாக்டர் துளசி தாஸ் சுக் விருது 2020

- ❖ தேசிய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனமானது (இந்தியா) லக்னோவில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர்-சி.டி.ஆர்.ஐயின் ஒரு முதன்மை விஞ்ஞானியான டாக்டர் சதீஷ் மிஸ்ராவை "டாக்டர் துளசி தாஸ் சுக் விருது 2020" என்ற விருதிற்குத் தேர்வு செய்து உள்ளது.
- ❖ மலேரியா ஒட்டுண்ணியின் வாழ்க்கைச் சுழற்சி குறித்த தனது ஆராய்ச்சிப் பணிகளுக்காக வேண்டி அவருக்கு இந்த விருது வழங்கப் படுகிறது.

## டாடா இலக்கியம் வாழ்க! 2020 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது

- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான இந்த விருது ரஸ்கின் பாண்ட் என்பவருக்கு வழங்கப்பட இருக்கிறது.
- ❖ இது மும்பையின் மிகப்பெரிய சர்வதேச இலக்கிய விழாவாகும்.
- ❖ ரஸ்கின் பாண்ட் என்பவர் பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்த ஒரு இந்திய எழுத்தாளர் ஆவார்.
- ❖ அவர் உத்தரகாண்ட் மாநிலத்தின் முசோரியில் வசிக்கிறார்.
- ❖ இந்தியாவில் குழந்தைகளுக்கான இலக்கியத்தின் வளர்ச்சியில் அவரது பங்கை இந்தியக் குழந்தைகள் கல்விக்கான மன்றம் அங்கீகரித்துள்ளது.




## குழந்தைகளுக்கான சர்வதேச அமைதிப் பரிசு 2020

- ❖ வங்கதேசத்தைச் சேர்ந்த சதாத் ரஹ்மானுக்கு இந்த ஆண்டுக்கான அமைதிப் பரிசு வழங்கப் பட்டது.
- ❖ இந்தப் பரிசு குழந்தைகளின் உரிமைகள் என்ற ஒரு அறக்கட்டளையின் நிறுவனர் மார்க் டல்லார்ட்டின் முன்முயற்சியாகும்.
- ❖ நெதர்லாந்தை மையமாகக் கொண்ட இது குழந்தைகளுக்கு உதவி அவர்களுக்குத் துணையாக இருக்கும் வகையிலான ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- ❖ இத்தாலியின் ரோம் நகரில் நடந்த அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் கலந்து கொண்ட 2005 ஆம் ஆண்டு உலக உச்சி மாநாட்டின் போது இந்தப் பரிசு தொடங்கப் பட்டது.

- அப்போதிருந்து, ஒவ்வோர் ஆண்டும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் ஒருவர் இப்பரிசை வழங்குகிறார்.



## 2020 ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை விருது

- பூடானின் அன்னை ராணியான கியாலும் சங்கே சோடன் வாங்சுக் (Gyalyum Sangay Choden Wangchuck) என்பவர் 2020 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை விருதுக்காக தனிநபர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- "ஹெல்ப்ஏஜ் இந்தியா" என்ற நிறுவனமானது இந்த விருதின் நிறுவனம் சார்ந்த வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளது.
- "ஹெல்ப்ஏஜ் இந்தியா" நிறுவனமானது கடந்த 40 ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள பின்தங்கிய மூத்த குடிமக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.
- இந்த விருது 1981 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது மக்கள் தொகை மற்றும் மகப்பேறு சுகாதாரத் துறைகளில் அளிக்கப் பட்ட சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கின்றது.

## ஜான் தாமஸ் கோஸ்லின் பெரேரா (97)

- இவர் ஒரு முன்னாள் இந்தியக் கடற்படைத் தலைவர் ஆவார்.
- இவர் சமீபத்தில் காலமானார்.
- இரண்டாம் உலகப் போரின் போது பணியாற்றி தற்போது உயிர் வாழ்ந்து கொண்டிருந்த கடைசி மனிதர்களுள் இவரும் ஒருவராவார்.
- இவர் பாகிஸ்தானிற்கு எதிராக 1971 ஆம் ஆண்டின் போரில் கராச்சி நகரின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதற்காக நினைவு கூரப்படுகின்றார்.

## எடின்பெர்க் விருது

- கொள்கை வகுக்கும் ஒரு மையமான அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் தலைமை இயக்குநரான சுனிதா நரைன் அவர்கள் இந்த ஆண்டின் எடின்பெர்க் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இந்த விருதானது ஸ்காட்லாந்தின் தலைநகரமான எடின்பெர்க் நகர மன்றத்தினால் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- மேலும் நரைன் அவர்கள் உலக பொதுக் கவன ஈர்ப்பு அறிக்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தேசிய காலநிலைத் தலைவர் விருதுகளில் 2019 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து "தேசியக் காலநிலைத் தலைவராக" தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- இந்த விருதானது ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் சிறப்பானப் பங்களிப்புகளை மேற்கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப் படுகின்றது.




## புக்கர் பரிசு 2020

- இது தற்போது ஐக்கியப் பேரரசு, அயர்லாந்து, அமெரிக்கா மற்றும் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கான ஒரு வருடாந்திர இலக்கியப் பரிசாகும்.
- ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அயர்லாந்து அல்லது ஐக்கியப் பேரரசில் வெளியிடப்பட்ட புதினங்களுக்கு (நாவல்) இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.
- பிரிட்டிஷ் எழுத்தாளர் டக்ளஸ் ஸ்டுவர்ட் தனது முதல் புதினமான ஷக்கி பெயினுக்கு (Shuggie Bain) ஐக்கியப் பேரரசின் புக்கர் பரிசை வென்று உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான ஐக்கியப் பேரரசின் புக்கர் பரிசு 'தி டெஸ்டமெண்ட்ஸ்' (The Testaments) என்ற புதினத்திற்காக மார்கரெட் அட்வுட் அவர்களுக்கும், 'கேர்ள், வுமன், அதர்' (Girl, Woman, Other) என்ற புதினத்திற்காக பெர்னார்டைன் எவரிஸ்டோ அவர்களுக்கும் கூட்டாக வழங்கப் பட்டது.
- இது முன்னர் "புக்கர்-மெக்கானெல் பரிசு" (1969-2001) என்றும் அதன் பிறகு மேன் புக்கர் பரிசு (2002-2019) என்றும் அழைக்கப்பட்டது.



- 1997 ஆம் ஆண்டில், இந்தியாவைச் சேர்ந்த அருந்ததி ராய் அவர்கள் தனது "தி காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ்" (The God of Small Things) என்ற புதினத்திற்காக புக்கர் பரிசை வென்றார்.

- ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு, ஐக்கியப் பேரரசு அல்லது அயர்லாந்தில் வெளியிடப்படும் ஒரு புத்தகத்திற்கு சர்வதேச புக்கர் பரிசு வழங்கப்படுகிறது.
- டச்சு மொழியில் எழுதப்பட்ட "தி டிஸ்கம்போர்ட் ஆப் ஈவினிங்" என்ற புத்தகத்திற்காக மரீகே லூகாஸ் ரைன்வெல்ட் என்பவர் 2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசை வென்றுள்ளார்.
- இதை மைக்கேல் ஹட்சிசன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார்.

## வாதாயன் வாழ்நாள் சாதனை விருது

- மத்தியக் கல்வி அமைச்சர் ரமேஷ் போக்ரியால் அவர்களுக்கு வாதாயன் வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட உள்ளது.
- இந்த விருதானது அவரது கவிதை மற்றும் பிற இலக்கியப் படைப்புகளுக்காக வேண்டி மத்தியக் கல்வி அமைச்சருக்கு வழங்கப்பட இருக்கிறது.
- இவர் இதற்கு முன்னர் இலக்கியம் மற்றும் நிர்வாகத் துறையில் அவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவை,
  - முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மூலம் சாகித்ய கௌரவ் சம்மான் விருது,
  - முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வழங்கிய சாகித்ய பாரதி விருது,
  - பாரத் கௌரவ் சம்மான் விருது,
  - மொரீஷியஸால் இந்திய வம்சாவளியினருக்கு வழங்கப் படும் குளோபல் அமைப்பின் சிறந்த சாதனையாளர் விருது,
  - சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவில் உக்ரேனில் வழங்கப்பட்ட விருது,
  - துபாய் அரசாங்கத்தால் நல்லாட்சி விருது,
  - நேபாளத்தின் ஹிமால் கௌரவ் சம்மான் விருது என்பவையாகும்.



## சர்வதேச எம்மி விருதுகள் 2020

- "தில்லி குற்றம்" என்ற ஒரு இணையதள தொடரானது சிறந்த நாடகத் தொடர் விருதை வென்றுள்ளது.
- ஒரு சர்வதேச எம்மி விருதினை வென்ற முதல் இந்திய நாடகம் இதுவேயாகும்.

- இது சர்வதேச தொலைக்காட்சிக் கலைகள் மற்றும் அறிவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் ஒரு விருதாகும்.
- இது தொலைக்காட்சித் தொடர்கள் புதிதாக தயாரிக்கப்பட்டு அமெரிக்காவிற்கு வெளியே ஒளிபரப்பப் படும் சிறந்த தொலைக்காட்சித் தொடர்களுக்கு வேண்டி வழங்கப் படுகின்றது.




### மரடோனா (60) – மறைவு

- இவர் அர்ஜென்டினா நாட்டின் கால்பந்து வீரராவார்.
- மரடோனா நான்கு ஃபிஃபா உலகக் கோப்பைப் போட்டிகளில் (1982, 1986, 1990, 1994) விளையாடி உள்ளார்.
- 1986 ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடந்த உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடிய அவர் அர்ஜென்டினா அணியின் தலைவராக விளையாடி இறுதிப் போட்டியில் மேற்கு ஜெர்மனி அணியை வீழ்த்தினார்.
- '20 ஆம் நூற்றாண்டின் ஃபிஃபா விளையாட்டு வீரர்' என்ற விருதை கூட்டாக வென்ற இரண்டு வெற்றியாளர்களில் இவரும் ஒருவராவார்.
- டியாகோ மரடோனா மற்றும் பீலே (பிரேசில்) ஆகிய இருவரும் அந்த விருதை கூட்டாக வென்றவர்கள் ஆவர்.



# விளையாட்டுச் செய்திகள்

## ஷேன் வாட்சன் ஓய்வு

- சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆஸ்திரேலிய நாட்டு வீரரான ஷேன் வாட்சன் அவர்கள் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- 2007 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலியாவின் அணியில் இவர் இருந்தார்.
- ஐ.பி.எல். போட்டிகளில், ராஜஸ்தான் ராயல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் போன்ற அணிகளில் வாட்சன் விளையாடி உள்ளார்.




## ரபேல் நடால் – 1000வது வெற்றி

- ரோலக்ஸ் பாரிஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் ரபேல் நடால் அவர்கள் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 04 அன்று பெலிசியானோ லோப்பஸ் என்பவரை வீழ்த்தி தனது 1000வது பட்டத்தை வென்றுள்ளார்.
- இதன் மூலம், ஜிம்மி கோனோர்ஸ் (1274-283), ரோஜர் பெடரர் (1242-271) மற்றும் இவான் லெண்டில் (1068-242) ஆகியோர் வரிசையில் ஒப்பன் வகை போட்டிகளில் இச்சாதனையை நிகழ்த்திய 4வது வீரர் ரபேல் நடால் ஆவார்.



## ஐபிஎல் 2020 வெற்றியாளர்

- 2020 ஆம் ஆண்டின் இந்தியன் பிரீமியர் லீக் ஆனது' ட்ரீம் 11 இந்தியன் பிரீமியர் லீக் 2020' என அழைக்கப்படுகிறது.
- இது ஐ.பி.எல்லின் பதின்மூன்றாவது ஆண்டு போட்டித் தொடராகும்.
- இந்தப் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப் பட்டன.
- இறுதிப் போட்டியானது மும்பை இந்தியன்ஸ் மற்றும் டெல்லி கேபிட்டல்ஸ் அணிகள் ஆகியவற்றுக்கு இடையே துபாயில் நடைபெற்றது.
- நடப்புச் சாம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிப் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- மும்பை இந்தியன்ஸுக்கு இது ஐந்தாவது ஐபிஎல் பட்டமாகும்.
- ஒரு போட்டியின் இறுதிச் சுற்றில் டெல்லி கேபிட்டல்ஸ் அணி இடம் பெற்றது இதுவே முதல் முறையாகும்.

Fair play award: Mumbai Indians

Orange Cap: K. L. Rahul of Kings XI

Purple Cap:Kagiso Rabada of Delhi Capitals.

Emerging player of the season: Devdutt Padikkal of Royal Challengers Banglaore

Most Valuable Player: Jofra Archer of Rajasthan Royals.

Game-changer of the season: KL Rahul

Super striker of the season: Kieron Pollard of Mumbai Indians

Most sixes award: Ishan Kishan of Mumbai Indians

Power player of the season: Trent Boult of Mumbai Indians.




**MUMBAI INDIANS' FIVE IPL TITLES**

| Year | Opponent | Venue | Winning margin |
|---|---|---|---|
| 2013 | Chennai Super Kings | Kolkata | 23 runs |
| 2015 | Chennai Super Kings | Kolkata | 41 runs |
| 2017 | Rising Pune Supergiants | Hyderabad | 1 run |
| 2019 | Chennai Super Kings | Hyderabad | 1 run |
| 2020 | Delhi Capitals | Dubai | 5 wkts |

## ITTF மகளிர் உலகக் கோப்பைப் பட்டம்

- சீனாவின் சென் மெங் என்பவர் முதல் ITTF மகளிர் உலகக் கோப்பைப் பட்டத்தை வென்றுள்ளார்.
- சீனாவின் வீஹாயில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மற்றொரு சீனப் பெண் வீரரான சன் யிங்ஷாவை அவர் தோற்கடித்தார்.

- 1926 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சர்வதேச மேசைப் பந்தாட்டக் கூட்டமைப்பு (ITTF - International Table Tennis Federation) என்பது அனைத்து தேசிய அளவிலான மேசைப் பந்தாட்டச் சங்கங்களையும் நிர்வகிக்கும் ஒரு கூட்டமைப்பாகும்.



## மகளிர் உலகக் கோப்பை

- சர்வதேசக் கால்பந்துக் கூட்டமைப்பு மன்றமானது '17 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பை – 2021' போட்டியை இரத்து செய்துள்ளது.
- இந்தப் போட்டி இந்தியாவினால் நடத்தப்பட இருந்தது.
- தற்பொழுது இந்தியாவானது 2022 ஆம் ஆண்டு 17 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பையை நடத்த உள்ளது.
- மேலும் FIFA (International Federation of Association Football) அமைப்பானது 2021 ஆம் ஆண்டின் 20 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பையையும் ரத்து செய்துள்ளது.
- இது கோஸ்டா ரிக்காவில் நடத்தத் திட்டமிடப் பட்டிருந்தது.
- தற்பொழுது 2022 ஆம் ஆண்டில் FIFA-ன் 20 வயதுக்குட்பட்டோர் மகளிர் உலகக் கோப்பையை நடத்த கோஸ்டா ரிக்காவிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.


## சர்வதேச கிரிக்கெட்டுக்கான குறைந்தபட்ச வயது

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலானது சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கான குறைந்த பட்ச வயதை அறிவித்துள்ளது.
- அதன்படி தற்போது, ஒரு வீரர் ஆண்கள் மற்றும் பெண்கள் கிரிக்கெட் அணியில் இணைய அல்லது 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச கிரிக்கெட் அணியில் சேர குறைந்தபட்சம் 15 வயதினைக் கொண்டிருக்க வேண்டும்.
- பாகிஸ்தானின் ஹசன் ரஸா சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடிய மிகவும் இளம் வயது கிரிக்கெட் வீரர் ஆவார்.
- சச்சின் டெண்டுல்கர் இந்தியாவிற்காக டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய மிகவும் இளம் வயது இந்தியராவார்.
- அவர் தனது பதினாறாவது வயதில் கராச்சியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று அறிமுகமானார்.

# முக்கிய தினங்கள்


## தமிழ்நாடு தினம் / மாநில உருவாக்க தினம் – நவம்பர் 01

- தமிழ்டு மாநிலமானது தனது இரண்டாவது மாநில உருவாக்கத் தினமான "தமிழ்நாடு தினத்தை" இந்த ஆண்டு நவம்பர் 01 அன்று அனுசரித்தது.
- தமிழ்நாடு மாநிலமானது 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின்படி அப்போதைய மதராஸ் மாகாணத்திலிருந்து 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று உருவாக்கப் பட்டது.
- இறுதியில் மதராஸ் மாநிலமானது 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப் பட்டது.
- 1936 ஆம் ஆண்டில் மொழி அடிப்படையில் உருவாக்கப் பட்ட முதலாவது மாநிலம் ஒரிசா (ஒடிசா) ஆகும்.
- அதன் பிறகு, 1953 ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரதேசம் மொழியியல் அடிப்படையில் உருவாக்கப் பட்டது.





## புதுச்சேரி விடுதலை தினம் – நவம்பர் 01

- புதுச்சேரி ஒன்றியப் பிரதேசமானது 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இந்தியா விடுதலை அடைந்த பிறகு, 7 ஆண்டு கால நீண்ட போராட்டங்களுக்குப் பின்னர் அந்நியரிடமிருந்து விடுதலை பெற்றது.
- இந்த இணைப்பானது பிரெஞ்சு நிர்வாகத்தினால் நடத்தப்பட்ட ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் ஜனநாயக ரீதியாகத் தீர்மானிக்கப் பட்டது.
- 1954 ஆம் ஆண்டு அக்டோபர் 18 அன்று, சட்டசபைப் பிரதிநிதிகள், நகராட்சி உறுப்பினர்கள் மற்றும் கவுன்சிலர்கள் ஆகியோர் அதனை இந்தியாவுடன் இணைப்பதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- பின்னர், மீதமுள்ள நான்கு குடியிருப்புகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் ஆகியவற்றை இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தமானது 1954 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று கையெழுத்திடப்பட்டது.
- இது 1954 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டில், புதுச்சேரி அரசானது நவம்பர் 01 ஆம் தேதியானது புதுச்சேரி விடுதலை நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.




## 10வது உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு வாரம் - அக்டோபர் 24 முதல் 31 வரை

- இந்த வாரத்தின் அனுசரிப்பின் மூலம், யுனெஸ்கோ மற்றும் WHO ஆகியவை தவறான தகவல்கள் மற்றும் குறையுள்ள தகவல்களைச் சமாளிக்க கூட்டாக இணைகின்றன.
- இது யுனெஸ்கோ தலைமையில் கொரியக் குடியரசால் நடத்தப்பட்டது.
- இது "தவறான தகவல் தொற்றைத் தடுப்பது (Resisting Disinfodemic) : அனைவராலும் மற்றும் அனைவருக்குமான ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப் பட்டது.




## உலக சைவ உணவு தினம் – நவம்பர் 01

- இத்தினமானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் தொடங்கப்பட்ட சைவ உணவுச் சமூகத்தின் நிறுவன தினத்தைக் குறிக்கின்றது.
- உலக சைவ உணவு தினமானது 1979 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக அனுசரிக்கப் பட்டது.
- இது விலங்குகள் நலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பயனளிக்கும் வகையில் சைவ உணவு வாழ்க்கை முறையைப் பின்பற்ற மக்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புலால் உண்ணாதவர்களாகவும் இருந்து (சைவ உணவை உட்கொள்ளுபவர்கள்) பால், நெய், பன்னீர் போன்ற பால் சார்ந்த பொருட்களை உட்கொள்ளாதவர்கள் சைவ உணவுப் பிரியர்கள் எனப்படுகின்றனர்.

## பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – நவம்பர் 02

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பத்திரிக்கையாளர்களைப் பாதுகாத்தல், உண்மையைப் பாதுகாத்தல்" என்பதாகும்.
- நவம்பர் 02 ஆம் தேதியானது 2013 ஆம் ஆண்டில் மாலியில் பிரெஞ்சுப் பத்திரிக்கையாளர் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூர்வதற்காக வேண்டி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.




## உலக சுனாமி விழிப்புணர்வு நாள் - நவம்பர் 05

- இது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் 2015 ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கப் பட்டது.
- 'சுனாமி' என்பது ஜப்பானிய வார்த்தையாகும். இதன் பொருள் "துறைமுக அலை" (Harbour wave) என்பதாகும்.
- கடந்த 100 ஆண்டுகளில், 58 சுனாமி நிகழ்வுகள் 2.6 லட்சத்திற்கும் அதிகமான உயிரிழப்புகளை ஏற்படுத்தி உள்ளது. அல்லது ஒரு பேரழிவிற்கு சராசரியாக 4,600 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டிற்கான உலக சுனாமி விழிப்புணர்வு நாளின் கருத்துரு "செண்டாய் ஏழு பிரச்சாரம்" (Sendai Seven Campaign) என்பதாகும்.

## பள்ளிகளில் இணைய வழித் துன்புறுத்தல் உள்ளிட்ட வன்முறை மற்றும் கொடுமைப் படுத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – நவம்பர் 05


- 2019 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உறுப்பு நாடுகள் நவம்பர் மாதத்தின் முதலாவது வியாழக் கிழமையை பள்ளிகளில் இணையவழித் துன்புறுத்துதல் உள்ளிட்ட வன்முறை மற்றும் கொடுமைப் படுத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக அறிவித்து உள்ளன.



- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பள்ளிகளில் கொடுமைப்படுத்தலுக்கு எதிராக ஒன்றிணைதல்" என்பதாகும்.

## போர் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் போது சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – நவம்பர் 06

- ஐக்கிய நாடுகளின் கருத்துப்படி, 1% அளவு உலக வெப்பநிலை அதிகரிப்பானது 4.5% உள்நாட்டுப் போருக்கு வழி வகுக்கும்.
- 2007 ஆம் ஆண்டில், சூடானின் டார்பர் என்ற பகுதியில் ஏற்பட்ட பிரச்சினையானது முதலாவது காலநிலை மாற்றப் பிரச்சினையாக அறிவிக்கப் பட்டுள்ளது.




## சிசுப் பாதுகாப்பு நாள் - நவம்பர் 07

- சிசுக்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வைப் பரப்புவதையும், குழந்தைகளைச் சரியான முறையில் கவனித்துக் கொள்வதன் மூலம் அவர்களின் உயிரைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்நாள் கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டின் கருத்துரு: சிசுக்களைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் வளர்த்தல் என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் 'இந்தியாவில் குழந்தை இறப்பு அறிக்கை' என்ற அறிக்கையின் கண்டுபிடிப்புகளின் படி, 2018 ஆம் ஆண்டில் 721,000 குழந்தை இறப்புகள் பதிவாகியுள்ளன. அதாவது ஒரு நாளைக்குச் சராசரியாக 1,975 இறப்புகள் என்பதாகும்.

| Top 10 countries with the highest number (thousands) of new born deaths-2019 | Number of newborn deaths (thousands) |
|---|---|
| India | 522 |
| Nigeria | 270 |
| Pakistan | 248 |
| Ethiopia | 99 |
| The Democratic Republic of the Congo | 97 |
| China | 64 |
| Indonesia | 60 |
| Bangladesh | 56 |
| Afghanistan | 43 |
| United Republic of Tanzania | 43 |

## தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு நாள் - நவம்பர் 07

- இது 2014 ஆம் ஆண்டு முதல் புற்றுநோய், அதன் அறிகுறிகள் மற்றும் அதற்கான சிகிச்சை குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, உலகளவில் மனிதர்களின் இறப்பிற்குப் புற்றுநோய் என்பது இரண்டாவது முக்கிய காரணமாகும்.
- 2018 ஆம் ஆண்டில், உலகளவில் சுமார் 18 மில்லியன் இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர். அவற்றில் இந்தியாவில் மட்டுமே 1.5 மில்லியன் மக்கள் உள்ளனர்.
- 2018 ஆம் ஆண்டில், உலகளவில் 9.5 மில்லியன் அளவிற்கு புற்றுநோய் மூலமான இறப்புகள் நிகழ்ந்தன. அதில் இந்தியாவில் மட்டும் 0.8 மில்லியன் அளவிற்கு புற்றுநோய் மூலமான இறப்புகள் நிகழ்ந்தன.
- இந்த நாள் மேரி கியூரியின் பிறந்த நாளுடன் ஒத்துப் போகிறது.

## தேசியச் சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 09

- அனைத்துக் குடிமக்களுக்கும் நியாயமான மற்றும் நீதி நடைமுறைகளை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வை பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நவம்பர் 9, 1995 முதல் நடைமுறைக்கு வந்த இந்திய நாடாளுமன்றத்தின் சட்ட சேவைகள் அதிகாரச் சட்டம் 1987 என்ற சட்டத்தை நினைவு கூர்கிறது.
- சமூகத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குவதற்காக இது அமைக்கப் பட்டுள்ளது.
- அவை சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு வேண்டி லோக் அதாலத்துகளை ஏற்பாடு செய்ய அமைக்கப் பட்டுள்ளது.
- இந்தியத் தலைமை நீதிபதி இதன் தலைமைத் தலைவராகப் பணியாற்றுகிறார்.
- இந்திய உச்சநீதிமன்றத்தின் இரண்டாவது மூத்த நீதிபதி இந்த அமைப்பின் நிர்வாகத் தலைவராக பணியாற்றுகிறார்.




## உலக சுதந்திர தினம் - நவம்பர் 09

- பெர்லின் சுவரின் வீழ்ச்சியை நினைவு கூறும் வகையில் உலக சுதந்திர தினம் உருவாக்கப் பட்டுள்ளது.
- 1961 ஆம் ஆண்டில் பெர்லினில் பனிப் போரின் போது கட்டப்பட்ட பெர்லின் சுவர் அந்த நகரத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்தது.
- சோவியத் யூனியன் கிழக்கு ஜெர்மனியைக் கட்டுப்படுத்தியது.

- பிரான்ஸ், பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கா ஆகியன மேற்கு ஜெர்மனியை ஆக்கிரமித்து இருந்தன.
- இந்த நாள் 1989 ஆம் ஆண்டில், ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்கள் பெர்லின் சுவரைத் தகர்த்துப் பனிப்போரை முடிவிற்குக் கொண்டு வந்ததைக் குறிக்கிறது.

## அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான உலக அறிவியல் நாள் - நவம்பர் 10

- சமுதாயத்தில் அறிவியலின் முக்கியப் பங்கையும், வளர்ந்து வரும் விஞ்ஞான சிக்கல்கள் குறித்த விவாதங்களில் அதிக அளவில் பொதுமக்களைப் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- இது ஆரம்பத்தில் 1999 ஆம் ஆண்டில் ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடந்த உலக அறிவியல் மாநாட்டில் முன்மொழியப் பட்டது.
- 2001 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ நிறுவனம் அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான உலக அறிவியல் நாளின் அதிகாரப் பூர்வ பிரகடனத்தை வெளியிட்டது.
- அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான முதலாவது உலக அறிவியல் நாள் நவம்பர் 10 - 2002 அன்று கொண்டாடப் பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு "சமூகத்திற்கான மற்றும் சமூகத்துடனான அறிவியல்" என்பதாகும்.




## உத்தரகாண்ட் தினம் – நவம்பர் 09

- இது "கடவுளர்களின் நிலம்" என்றும் "தேவ பூமி" என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது 2000 ஆம் ஆண்டில் அதன் உருவாக்கத்தின் போது "உத்தராஞ்சல்" என்று பெயரிடப் பட்டது.
- பின்னர், இது 2007 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் என்று மறுபெயரிடப்பட்டது.




## சர்வதேச மன அழுத்த விழிப்புணர்வு வாரம் – நவம்பர் 02/06

- இது 1998 ஆம் ஆண்டில் மன அழுத்த விழிப்புணர்வு தினம் ஏற்படுத்தப்பட்டதிற்குப் பிறகு மனஅழுத்தத்தைத் தடுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்த ஆண்டு, இத்தினமானது நவம்பர் 04 அன்று அனுசரிக்கப்பட்டது.




## உலகக் கதிரியக்க நாள் - நவம்பர் 08

- இது 1895 ஆம் ஆண்டில் வில்ஹெல்ம் ரோன்ட்ஜென் அவர்கள் எக்ஸ்-கதிர்வீச்சைக் கண்டுபிடித்த நாளைக் குறிக்கின்றது.
- இந்த நாள் கதிரியக்கவியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- கதிரியக்கவியலாளர்கள் மற்றும் கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்களின் சர்வதேசச் சங்கமானது 2007 ஆம் ஆண்டு முதல் உலகக் கதிரியக்க நாளாக நவம்பர் 8 ஆம் தேதியைக் கொண்டாடுகிறது.




## உலக நோய்த் தடுப்பு நாள் - நவம்பர் 10

- தடுப்பூசி மற்றும் தடுக்கக் கூடிய நோய்களுக்கான தடுப்பூசிகளைச் சரியான நேரத்தில் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இது கொண்டாடப் படுகிறது.
- பயனளிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை, பயன்படுத்தப்படும் தடுப்பூசிகள், மனிதவளப் பங்கேற்பாளர் மற்றும் புவியியல் ரீதியான பரவல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவானது மிகப்பெரிய உலகளாவிய நோய்த் தடுப்புத் திட்டங்களில் ஒன்றைக் கொண்டுள்ளது.
- உலக நோய்த் தடுப்பு வாரமானது ஏப்ரல் 24 முதல் ஏப்ரல் 30 வரை அனுசரிக்கப் பட்டது.

## தேசிய கல்வி நாள் - நவம்பர் 11

- இது இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.
- மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் 1947 ஆம் ஆண்டு முதல் 1958 ஆம் ஆண்டு வரை ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் முதல் கல்வி அமைச்சராக நாட்டிற்குச் சேவை செய்தார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக, இவர் டெல்லியில் மத்தியக் கல்வி நிறுவனம் அமைவதற்குக் காரணமாக இருந்தார்.
- இது பின்னர் டெல்லி பல்கலைக்கழகத்தின் கீழ் கல்வித் துறை என்று அறியப் பட்டது.
- 1953 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழு அமைவதற்கு இவர் முக்கியக் காரணமாவார். மேலும் இவர் பெங்களூரில் இந்திய அறிவியல் நிறுவனத்தை அமைக்க வலியுறுத்தினார்.




## உலக தரத்திற்கான நாள் - நவம்பர் 12

- உலக தரத்திற்கான நாளானது ஆண்டுதோறும் நவம்பர் இரண்டாவது வியாழக் கிழமை அன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்நாளின் கருத்துரு "வாடிக்கையாளர் மதிப்பை உருவாக்குதல்" (Creating customer value) என்பதாகும்.




## தேசிய ஆயுர்வேத தினம் – நவம்பர் 13




- ஆயுர்வேத தினமானது ஒவ்வொரு ஆண்டும் தன்வந்திரி ஜெயந்தி அன்று, 2016 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- 5வது ஆயுர்வேத தினத்தின் முக்கியக் கருத்துரு, "கோவிட் – 19 தொற்றிற்காக ஆயுர்வேதா" என்பதாகும்.
- இந்தத் தினத்தை மத்திய ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி அமைச்சகம் (ஆயுஷ்) அனுசரிக்கின்றது.
- இந்துப் புராணங்களின் படி, மருத்துவத்தின் கடவுள் தன்வந்தரி ஆவார்.

## தேசிய குழந்தைகள் தினம் - நவம்பர் 14

- இந்நாள் குழந்தைகளின் உரிமைகள், குழந்தைகளின் கவனிப்பு மற்றும் அவர்களின் கல்வி குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க இந்தியா முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- இது இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவைப் போற்றும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- அவர் 1889 ஆம் ஆண்டில் இந்நாளில் பிறந்தார்.
- முதல் குழந்தைகள் தினமானது 1954 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- உலகளாவிய குழந்தைகள் தினம் என்ற ஒரு கருத்து வி.கே. கிருஷ்ண மேனன் என்பவரால் பரிந்துரை செய்யப் பட்டது.



- முதலில், இது அக்டோபர் மாதத்தில் உலகளவில் கொண்டாடப் பட்டது.
- 1959 ஆம் ஆண்டிற்குப் பிறகு, நவம்பர் 20 ஆம் தேதியானது குழந்தைகள் தினமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- ஐ.நா பொதுச் சபையால் குழந்தைகளின் உரிமைகள் மீதான பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்ட நாளை இது குறித்தது.
- 1989 ஆம் ஆண்டில், குழந்தைகளின் உரிமைகளுக்கான ஒரு உடன்படிக்கையும் இதே தேதியில் கையெழுத்தானது.

## உலக நீரிழிவு நாள் - நவம்பர் 14

- இது 1991 ஆம் ஆண்டில் சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது.
- இது 2006 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வ ஐக்கிய நாடுகள் தினமாக மாறியது.
- இது 1922 ஆம் ஆண்டில் சார்லஸ் பெஸ்டுடன் இணைந்து இன்சுலினைக் கண்டுபிடித்த சர் ஃபிரடெரிக் பாண்டிங் என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- 2020 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'செவிலியர் மற்றும் நீரிழிவு நோய்' என்பதாகும்.
- இந்தப் பயங்கரமான நோய் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக, 'நீல வட்டம்' என்ற குறியீடானது சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பால் தழுவப் பட்டுள்ளது.
- இந்த நாளில், உலக சுகாதார அமைப்பானது உலக நாடுகளை நீரிழிவில் இருந்து பாதுகாப்பதற்கான திட்டம் (Global Diabetes Compact) ஒன்றை அறிவித்துள்ளது.


## சாலைப் போக்குவரத்து நெரிசலால் பலியானோருக்கான உலக நினைவு நாள் - நவம்பர் 15

- அக்டோபர் 26, 2005 அன்று, ஐக்கிய நாடுகள் சபையானது இந்த தினத்தை ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையன்று ஒரு உலகளாவிய நாளாக கடைபிடிக்குமாறு வேண்டி அங்கீகரித்துள்ளது.
- இது 1993 ஆம் ஆண்டில் பிரிட்டனில் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்குத் தொண்டு செய்யும் நிறுவனமான ரோட் பீஸ் (Road Peace) என்ற ஒரு நிறுவனத்தால் தொடங்கப் பட்டது.
- சாலை விபத்துக்களில் அதிக எண்ணிக்கையில் உயிர்களை இழப்பதில் சீனாவுக்கு அடுத்தபடியான நாடு இந்தியாவாகும்.
- இந்தியாவில், விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுபவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கிட வேண்டி 'இடர்பாட்டில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும் நல்லவர்' என்ற ஒரு சட்டம் இயற்றப் பட்டுள்ளது.
- இந்தச் சட்டம் 'மோட்டார் வாகன சட்டம் 2019' என்ற சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
- சென்னையை மையமாகக் கொண்ட தோழன் என்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் மார்ச் 30 ஆம் தேதியானது (2020) 'இடர்பாட்டில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும் நல்லவர்' என்ற ஒரு சட்ட நாளாகக் கொண்டாடப் பட்டது.

## ஜார்க்கண்ட் நாள் - நவம்பர் 15


- ஜார்கண்ட் மாநிலம் பீகார் மறுசீரமைப்புச் சட்டத்தால் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று இந்தியாவின் 28வது மாநிலமாக உருவாக்கப் பட்டது.

- சோட்டா நாக்பூர் பகுதியானது பீகாரிலிருந்து பிரிக்கப்பட்டு ஜார்க்கண்ட் மாநிலமாக அமைக்கப் பட்டது.
- சோட்டா நாக்பூர் பீடபூமியானது கோயல், தாமோதர், பிராமணி, கர்காய், மற்றும் சுபர்ணரேகா உள்ளிட்ட பல்வேறு நதிகளின் மூலமாகும்.
- ஜார்க்கண்ட் மாநிலம் 'வனங்களின் நிலம்' அல்லது 'புதர் நிலம் ' என்றும் அழைக்கப் படுகிறது.
- நவம்பர் 15 ஆம் தேதியானது பகவான் பிர்சா முண்டாவின் பிறந்த நாளாகவும் அனுசரிக்கப் படுகிறது.
- அவர் முண்டா என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு இந்தியப் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு சுதந்திரப் போராளியாவார்.




## பொதுச் சேவை ஒளிபரப்பு நாள் - நவம்பர் 12

- 1947 ஆம் ஆண்டில் தில்லியின் அகில இந்திய வானொலியின் அரங்கிற்கு மகாத்மா காந்தியின் முதலாவது மற்றும் அவரது ஒரே வருகையின் நினைவாக இது ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப் படுகிறது.
- அகில இந்திய வானொலி என்பது 1936 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாட்டின் ஒரு பொதுத்துறை ஒளிபரப்பு நிறுவனமாகும்.



## சர்வதேச சகிப்புத் தன்மை தினம் – நவம்பர் 16

- இது சகிப்புத் தன்மையின்மையின் அபாயங்கள் குறித்து பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் அறிவிக்கப்பட்ட ஒரு வருடாந்திர அனுசரிப்புத் தினமாகும்.
- 1995 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சகிப்புத் தன்மை ஆண்டைக் குறிப்பதற்காகவும் மகாத்மா காந்தியின் 125வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காகவும் யுனெஸ்கோ ஆனது சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சையை ஊக்குவிப்பதற்காக ஒரு விருதினை உருவாக்கியுள்ளது.
- இது சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சையின் ஊக்குவிப்புற்கான யுனெஸ்கோ-மதன்ஜீத் சிங் விருது என்றும் அழைக்கப்படுகின்றது.
- காங்கோ மக்களாட்சிக் குடியரசில் உள்ள மத்தியத் தீர்வுப் பிரச்சினைகள் என்ற ஒரு மையமானது 2020 ஆம் ஆண்டுப் பதிப்பின் வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.

## தேசியப் பத்திரிக்கை தினம் – நவம்பர் 16

- இது 1966 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தியப் பத்திரிக்கை மன்றத்தின் (Press Council of India - PCI) உருவாக்கத்தை அனுசரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- PCI ஆனது ஊடகத்திற்கான ஒரு தார்மீகக் கண்காணிப்பாளராக செயல்படுகின்றது.
- இது ஒரு சட்டப்பூர்வ மற்றும் பகுதி நீதித்துறை சார் அமைப்பாகும்.

## சர்வதேச மாணவர் தினம் - நவம்பர் 17


- 1939 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று ஜெர்மனியின் நாஜி துருப்புக்கள் ஒன்பது மாணவர் தலைவர்களைத் தூக்கிலிட்டு 1200க்கும் மேற்பட்ட மாணவர்களை செக்கோஸ்லோவாக்கியாவில் உள்ள வதை முகாம்களுக்கு அனுப்பியது.
- 1941 ஆம் ஆண்டு முதல், உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் நவம்பர் 17 ஆம் தேதியை சர்வதேச மாணவர் தினமாகக் கொண்டாடத் தொடங்கினர்.
- இன்றைய நாட்களில், நவம்பர் 17 சர்வதேச மாணவர்களின் பன்முக கலாச்சாரத்தின் கொண்டாட்டத்தைக் குறிக்கிறது.
- இது சர்வதேச மாணவர் வாரத்தின் ஒரு பகுதியாகும்.

## இஸ்லாமிய கலையின் சர்வதேச நாள் - நவம்பர் 18

- இஸ்லாத்தின் கடந்த கால மற்றும் சமகாலக் கலை வெளிப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வையும், நாகரிகத்திற்கு இஸ்லாமியக் கலை அளித்த கலாச்சாரத்தின் பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாட்டின் 40வது அமர்வில் அறிவிக்கப் பட்டது.
- இதை பஹ்ரைன் முன்மொழிந்தது.

## உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் (COPD) – நவம்பர் 18

- இது நாள்பட்ட நுரையீரல் நோய்க்கான உலகளாவிய முன்னெடுப்பினால் (COPD - Chronic Obstructive Lung Disease) ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "COPDயுடன் நலமான வாழ்வு – அனைவருக்கும் அனைத்து இடங்களிலும்" என்பதாகும்.
- உலக சுகாதார அமைப்பின் படி, COPD ஆனது 2030 ஆம் ஆண்டில் உலக அளவில் இறப்பிற்குக் காரணமான மூன்றாவது நோயாக இருக்கும்.
- COPD ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் புகைப் பிடித்தல் (நேரடியான மற்றும் மறைமுக புகைப்பிடித்தல் இரண்டும்) ஆகும்.




## தேசியப் பறவை தினம் – நவம்பர் 12

- இது பறவையியல் ஆய்வாளரான சலீம் அலி என்பவரின் பிறந்த தினமாகும்.
- இவர் 1896 ஆம் ஆண்டில் பம்பாயில் பிறந்தார்.
- இவர் இந்தியாவின் பறவை மனிதர் என்றறியப் படுகின்றார்.
- இந்தியா முழுவதும் முறையான பறவை சார்ந்த ஆய்வுகளை நடத்திய முதலாவது இந்தியர் இவராவார்.
- இவர் பறவையியல் ஆய்வில் புகழ்பெற்ற பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ளார்.
- "இந்தியா மற்றும் பாகிஸ்தான் பறவைகளின் கையேடு" என்பது இவருடைய புகழ்பெற்ற புத்தகமாகக் கருதப்படுகின்றது.
- இவர் பம்பாய் இயற்கை வரலாற்றுச் சமூகம் மற்றும் ராஜஸ்தானில் உள்ள பரத்பூர் பறவைகள் சரணாலயம் (கியோலாடியோ தேசியப் பூங்கா) ஆகியவற்றின் உருவாக்கத்திற்குப் பின்னணியில் உள்ள ஒரு முக்கிய நபராக விளங்குகின்றார்.
- 2016 ஆம் ஆண்டில், இமயமலையின் கிழக்குப் பகுதியில் பொதுவாகக் காணப்படும் இமயமலை காட்டுப் பூங்குருவிக்கு சூதேரா சலீம் அலி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலமானது நவம்பர் 05 முதல் 12 ஆம் தேதி வரையிலான ஒரு வாரத்தை அந்த மாநிலத்தின் பறவை வாரமாகக் கொண்டாடுகின்றது.

## நுண்ணுயிர் எதிர்ப்பிகள் விழிப்புணர்வு வாரம்

- உலக சுகாதார அமைப்பானது நவம்பர் 18, 2020 முதல் நவம்பர் 24, 2020 வரை இதைக் கொண்டாட உள்ளது.
- இது 'நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பாதுகாக்க ஒன்றிணைதல்' என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப்பட உள்ளது.
- ஒட்டுண்ணிகள், பூஞ்சை, வைரஸ் மற்றும் பாக்டீரியாக்கள் மருந்துகளுக்குப் பதிலளிக்காத போது நுண்ணுயிர் எதிர்ப்புத் தடுப்பாற்றல் ஏற்படுகிறது.

- இந்தியாவின் முக்கியப் பிரச்சினை என்னவென்றால், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் கால்நடைகள் மூலம் உணவு முறைக்குள் நுழைகின்றன.
- பால்பொருட்களிலும் மற்றும் கால்நடைகளிலும் இது மிகவும் பொதுவானது.
- இந்தியாவில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மத்திய மருந்து தரநிர்ணயக் கட்டுப்பாட்டு அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளன.




## தேசிய ஒருமைப்பாட்டுத் தினம், நவம்பர் 19

- இது இந்தியாவின் முதலாவது பெண் பிரதமரான இந்திரா காந்தியின் பிறந்த நாளின் நினைவாக அனுசரிக்கப்படுகின்றது.
- இவர் 1917 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று அலகாபாத்தில் பிறந்தார்.

## உலகக் கழிப்பறை தினம் – நவம்பர் 19

- இது 6வது நீடித்த வளர்ச்சி இலக்கான '2030 ஆம் ஆண்டில் அனைவருக்கும் குடிநீர் மற்றும் சுகாதாரம்' என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டில் இந்தத் தினமானது, "நீடித்த சுகாதாரம் மற்றும் காலநிலை மாற்றம்" என்ற கருத்துருவின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இது திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிப்பதையும் பொது மக்களிடையே அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் உலகக் கழிப்பறை தினத்தை அதிகாரப்பூர்வ ஐக்கிய நாடுகள் தினமாக அறிவித்துள்ளது.
- இத்தினத்தை அதிகாரப்பூர்வமாக கடைபிடிக்கும் அமைப்பு ஐக்கிய நாடுகள் நீர் என்ற ஒரு அமைப்பாகும்.





## சர்வதேச ஆண்கள் தினம் – நவம்பர் 19

- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சிறந்த சுகாதாரம்" என்பதாகும்.
- இது முதன்முறையாக 1992 ஆம் ஆண்டில் தாமஸ் ஒஸ்டர் என்பவரால் அனுசரிக்கப் பட்டது.

## உலகத் தத்துவ தினம் – நவம்பர் 19

- இது யுனெஸ்கோவினால் 2002 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டில், இது அதிகாரப்பூர்வ ஐக்கிய நாடுகள் உலகத் தத்துவ தினமாக உருவெடுத்தது.
- இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழன் அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- தத்துவமானது கிரேக்க நாட்டில் தனது தொடக்கத்தைக் கொண்டுள்ளது.




## தேசிய இயற்கை மருத்துவ தினம் – நவம்பர் 18

- இந்தத் தினமானது 2018 ஆம் ஆண்டில் மத்திய ஆயுஷ் துறை (ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) அமைச்சகத்தினால் அறிவிக்கப் பட்டது.
- 1945 ஆம் ஆண்டில் இதே தினத்தன்று மகாத்மா காந்தி அகில இந்திய இயற்கை நலக் கூட்டமைப்பு அறக்கட்டளையின் வாழ்நாள் தலைவராக உருவெடுத்தார்.
- புனேவில் உள்ள தேசிய இயற்கை மருத்துவ நிறுவனமானது இத்தினத்தன்று “காந்தி - ஒரு நோய் குணப்படுத்துபவர்” என்ற புத்தகத்தை வெளியிட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “இயற்கை மருத்துவத்தின் மூலம் உயிர்ச் சக்தியை வலுப்படுத்துதல்” என்பதாகும்.
- இந்த நடைமுறையைத் தானே முன்மொழிந்ததில் மகாத்மா காந்தியும் ஒருவராவார்.
- இவர் இயற்கை நலம் என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இவர் புனேவிற்கு அருகில் உருளிக்கஞ்சன் என்ற இடத்தில் ஓர் இயற்கை மருத்துவ மையமான நிசர்கோபாச்சார் ஆசிரமம் அமைக்க உதவி புரிந்தார்.

## உலக குழந்தைகள் தினம் – நவம்பர் 20

- இது முதன்முறையாக 1954 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- 1959 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது குழந்தை உரிமைகள் பிரகடனம் அல்லது ஜெனீவா குழந்தைகளின் உரிமைகள் மீதான பிரகடனத்தை இதே தினத்தில் ஏற்றுக் கொண்டதால் இத்தினமானது மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.
- மேலும் 1989 ஆம் ஆண்டில் இதே தினத்தன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது குழந்தைகளின் உரிமைகள் மீதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “நமது எதிர் காலத்தில் முதலீடு செய்தல் என்பது நமது குழந்தைகளிடம் முதலீடு செய்தல்” என்பதாகும்.




## திருநர் நினைவு தினம் - நவம்பர் 20

- திருநர் மக்களால் அனுபவிக்கப்படும் தொடர் வன்முறைகள் குறித்து கவன ஈர்ப்பைப் பெறுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இது ஒரு திருநங்கையான வெண்டோலின் ஆன் ஸ்மித் அவர்களால் 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.




## ஆப்பிரிக்காவிற்கான தொழில்மயமாக்கல் தினம் – நவம்பர் 20

- இது 1989 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவிற்கான 2வது தொழிற்துறை வளர்ச்சிக்கு தேவைப்படும் பத்தாண்டு காலம் (1991-2000) என்ற ஒரு செயல் திட்டத்திற்குள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்படுத்தப்பட்டது.
- இது மடகாஸ்கர் தீவு உள்ளிட்ட அதன் முக்கிய நிலப்பகுதியின் புவியியல் சித்திரிப்பிற்கான ஒரு முக்கிய சின்னமாக விளங்குகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, "AFCFTA மற்றும் கோவிட் – 19 காலப் பகுதியில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த தொழில்மயமாக்கம்" என்பதாகும்.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் 21 அன்று ருவாண்டாவின் கிகாலியில் ஆப்பிரிக்க கண்ட தடையற்ற வர்த்தகப் பகுதியை (AFCFTA - African Continental Free Trade Area) உருவாக்குவதற்கான ஒரு ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்டது.



- இது சரக்கு மற்றும் சேவைகளுக்காக வேண்டி ஒரே ஆப்பிரிக்கச் சந்தையை உருவாக்கவும் அதிக எண்ணிக்கையிலான நாடுகளினால் மேற்கொள்ளப்படும் உலகின் ஒரு மிகப்பெரிய தடையற்ற வர்த்தகப் பகுதியை உருவாக்கவும் வழிவகை செய்கின்றது.

## புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான தேசிய வாரம் – நவம்பர் 15/21

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது இந்த வாரத்தை அனுசரித்தது.
- இந்த வார அனுசரிப்பின் கருத்துரு, “எல்லா இடங்களிலும் மற்றும் ஒவ்வொரு சுகாதார மையத்திலும் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்குமான தரம், சமத்துவம், கண்ணியம்” என்பதாகும்.
- இதன் முக்கிய நோக்கம் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் உயிர் வாழ்தல் மற்றும் அவை வளர்ச்சி அடைதலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகும்.
- குழந்தை பிறந்த முதல் 28 நாட்கள் அந்த குழந்தை உயிர் வாழ்வதற்கான ஒரு முக்கியக் காலமாகக் கருதப் படுகின்றது.
- இந்தியாவானது 2035 ஆம் ஆண்டிற்குள் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பை 1000 குழந்தைகளுக்கு 20 என்ற அளவிற்குக் குறைக்க இலக்கு ஒன்றை நிர்ணயித்துள்ளது.

## உலகத் தொலைக்காட்சி தினம் - நவம்பர் 21

- 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை அனுசரித்திட வேண்டி அறிவித்தது.
- இது 1996 ஆம் ஆண்டில் நடந்த முதல் உலகத் தொலைக்காட்சி மன்றம் நடைபெற்ற தேதியை நினைவு கூர்கிறது.
- இதே போன்ற கருத்தை உள்ளடக்கிய வகையில் ஐக்கிய நாடுகள் அனுசரிக்கும் மூன்று நாட்கள் ஏற்கனவே உள்ளன. அவை
    - உலகப் பத்திரிகைச் சுதந்திர தினம்;
    - உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் அமைப்பு தினம்; மற்றும்
    - உலகத் தகவல் மேம்பாட்டுத் தினம் என்பவையாகும்.
- 1927 ஆம் ஆண்டில், பிலோ டெய்லர் ஃபார்ன்ஸ்வொர்த் என்பவர் உலகின் முதல் மின்னணுத் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார்.

## மகளிர் தொழில்முனைவோர் தினம் – நவம்பர் 19

- இது உலகம் முழுவதும் உள்ள அனைத்து மகளிர் தொழில்முனைவோர்களையும் அங்கீகரித்து, ஊக்குவித்து அவர்களைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- மகளிர் தொழில்முனைவோர் தின அமைப்பு (Women’s Entrepreneurship Day Organization-WEDO)/#choosewomen என்ற அமைப்பானது அரசு சாரா, இனம் சாரா மற்றும் அரசியல் சாரா இலாப நோக்கற்ற அமைப்பாக 2013 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது எல்லிஸ் தீவு கௌரவ விருதைப் பெற்றவரான வெண்டி டைமண்ட் என்பவரால் தொடங்கப் பட்டு செயல்படுத்தப் பட்டது.

## உலக மீன்வள தினம் – நவம்பர் 21

- இது மீனவர்கள் கடல் நீருக்குள்ளேயும் அதற்கு வெளியேயும் உயிர் வாழ்வதற்கு உகந்த மற்றும் அந்த மனிதர்களது வாழ்க்கையின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் காட்ட உதவுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மீன்வள மதிப்புக் கூட்டுத் தொடரில் சமூகப் பொறுப்புடைமை" என்பதாகும்.
- இந்தியாவில் முதன்முறையாக, மத்திய மீன் வளத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மீன்வளத் துறையானது உலக மீன்வள தினத்தை அனுசரிக்கின்றது.
- உலகில் மீன்களின் 2வது மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் 4வது மிகப்பெரிய ஏற்றுமதியாளர் நாடு இந்தியா ஆகும்.
- மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பானது இந்தியாவின் ஜிடிபிக்கு 1% பங்களிப்பையும் வேளாண் ஜிடிபிக்கு 5% பங்களிப்பையும் அளிக்கின்றது.
- இந்திய அரசானது ரூ.20,050 கோடி மதிப்பில் பிரதான் மந்திரி மத்சயா சம்பதா யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது 2024-25 ஆம் ஆண்டு வாக்கில் மீன்களின் உற்பத்தியை 22 பில்லியன் டன்கள் என்ற அளவிற்கு எட்டப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## குவாமி ஏக்தா வாரம் - தேசிய ஒருங்கிணைப்பு வாரம்

- இது இந்தியாவில் வகுப்புவாத ஒற்றுமை வாரம் என்றும் அழைக்கப்படுகிறது
- இது நவம்பர் 19 முதல் நவம்பர் 25 வரை கொண்டாடப்படுகிறது.
- இந்த வாரத்தின் முக்கிய கருப்பொருள் 'மதச்சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்பு மற்றும் அகிம்சை' என்பனவாகும்.
- உள்நாட்டு விவகார அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பான வகுப்புவாத ஒற்றுமைக்கான தேசிய அறக்கட்டளையானது குவாமி ஏக்தா வாரத்துடன் வகுப்புவாத நல்லிணக்கப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்து நவம்பர் 25 அன்று வகுப்புவாத நல்லிணக்கக் கொடி நாளை அனுசரிக்கிறது.
  - நவம்பர் 19 ஆம் தேதி தேசத்தின் ஒருங்கிணைப்பு நாள் கொண்டாடப்படுகிறது.
  - நவம்பர் 20 ஆம் தேதி சிறுபான்மையினருக்கு நலன்புரியும் நாள் கொண்டாடப் படுகிறது.
  - நவம்பர் 21 ஆம் தேதி மொழியியல் நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிறது.
  - நவம்பர் 22 ஆம் தேதி பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான நாள் கொண்டாடப் படுகிறது.
  - நவம்பர் 23 ஆம் தேதி கலாச்சார ஒற்றுமைக்கான நாள் கொண்டாடப்படுகிறது.

- நவம்பர் 24 ஆம் தேதி மகளிர் நாள் கொண்டாடப்படுகிறது.
- நவம்பர் 25 ஆம் தேதி பாதுகாப்பு நாள் கொண்டாடப்படுகிறது.

## உலக ஆலிவ் மர நாள் - நவம்பர் 26

- யுனெஸ்கோ மற்றும் சர்வதேச ஆலிவ் மன்றம் ஆகிய இரண்டும் நவம்பர் 26 ஆம் தேதியை உலகின் ஆலிவ் மர தினமாக தேர்வு செய்துள்ளன.
- உலக ஆலிவ் மர தினத்தின் ஆண்டுக் கொண்டாட்டமானது இந்தப் பண்டைய தாவரத்தைப் பாதுகாக்கவும் அதன் நீண்ட கால மதிப்பைப் பாதுகாக்கவும் உதவும்.




## சட்ட நாள் / அரசியலமைப்பு நாள் - நவம்பர் 26

- அரசியலமைப்பு நாளானது 'சம்விதன் திவாஸ்' என்றும் அழைக்கப்படுகிறது.
- இது 1949 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.
- 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று இந்திய அரசியலமைப்பு நிர்ணயச் சபையானது இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டது.
- இது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது.
- 2015 ஆம் ஆண்டு முதல் இது அனுசரிக்கப் பட்டு வருகின்றது.
- 2015 ஆம் ஆண்டு என்பது அம்பேத்கர் அவர்களின் 125வது ஆண்டு பிறந்த தினக் கொண்டாட்டமாகும்.
- இந்திய அரசியலமைப்பு என்பது உலகின் எந்தவொரு இறையாண்மை கொண்ட நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு மிக நீண்ட எழுதப்பட்ட அரசியலமைப்பாகும்.



## தேசிய பால் தினம் - நவம்பர் 26

- இந்தியாவில் டாக்டர் வர்கீஸ் குரியனின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 26 அன்று தேசிய பால் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- அவர் இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தை என்று அறியப்படுகிறார்.
- பால் மற்றும் பால் தொழில் தொடர்பான நன்மைகளை ஊக்குவிப்பதற்கும், பால் மற்றும் பால் பொருட்களின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- முதல் தேசிய பால் தினமானது 2014 ஆம் ஆண்டு 26 நவம்பர் அன்று கொண்டாடப் பட்டது.
- ஆனால் உலக பால் தினமானது ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் ஜூன் 1 அன்று ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப்படுகிறது.





## ஆவாஸ் திவாஸ் மற்றும் ஆவாஸ் வாரம் - நவம்பர் 20

- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 20 ஆம் தேதி "ஆவாஸ் திவாஸ்" என்று கொண்டாட முடிவு செய்யப் பட்டுள்ளது.
- இது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா - கிராமின் என்ற திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டதை நினைவு கூருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2022 ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் வீட்டு வசதி" (Housing for All) வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 72வது நிறுவன தினம்

- தேசிய மாணவர் படையானது தனது 72வது நிறுவன தினத்தை நவம்பர் 22 அன்று கொண்டாடியது.
- இது உலகின் மிகப்பெரிய சீருடை அணிந்த ஒரு இளைஞர் அமைப்பாகும்.
- தனது தலைமையகத்தை புது டெல்லியில் கொண்டுள்ள இது ஆயுதப் படைகளின் ஒரு இளைஞர் படையாகும்.
- இது இந்தியா முழுவதும் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்களைச் சேர்க்கிற ஒரு தன்னார்வ அமைப்பாகும்.
- இது ராணுவம், கடற்படை மற்றும் விமானப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முத்தரப்புச் சேவை அமைப்பாகும்.

- இது 1948 ஆம் ஆண்டின் தேசிய மாணவர் படைச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது.
- இதன் அடிப்படையை இந்திய பாதுகாப்புச் சட்டம் 1917 என்ற சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்ட 'யுனிவர்சிட்டி கார்ப்ஸ்' என்ற அமைப்பில் பார்க்கலாம்.
- நாட்டின் எல்லை மற்றும் கடலோரப் பகுதிகளில் தேசிய மாணவர் படையை விரிவுபடுத்தும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று அறிவித்தார்.




## உலகப் பாரம்பரிய வாரம் - நவம்பர் 19/25

- இது யுனெஸ்கோவால் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இது உயர்ந்த பாரம்பரியத்தைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அதன் பாதுகாப்பிற்காகவும் வேண்டி அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட 38 உலகப் பாரம்பரிய தளங்கள் உள்ளன.
- இதில் 30 கலாச்சார தளங்கள், 7 இயற்கை தளங்கள் மற்றும் ஒரு கலப்பு தளம் ஆகியன அடங்கும்.

## விமானப் போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 23/27

- இந்திய விமான நிலைய ஆணைமானது விமானப் போக்குவரத்து விழிப்புணர்வு வாரத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- விமானப் போக்குவரத்து மீதான பாதுகாப்பு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டி இது கொண்டாடப் படுகிறது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு நீண்டகால இலக்கான உயிரிழப்புகளில்லாத விமானப் பயணத்தை அடைவதையும் வலியுறுத்தும்.

## பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம்

- இந்தத் தினமானது பாலஸ்தீன பொது மக்கள் இன்னமும் பொதுச் சுதந்திரம் மற்றும் அதிகாரம் உள்ளிட்ட சில இயற்கை உரிமைகள் பெறப்படாததை நினைவு படுத்துவதற்காக வேண்டி அனுசரிக்கப் படுகின்றது.
- 1947 ஆம் ஆண்டின் இத்தினத்தில் பொதுச் சபையானது 181(II) என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இது பிரிவுத் தீர்மானம் என அழைக்கப் படுகின்றது
- இந்தத் தீர்மானமானது பாலஸ்தீனத்தில் ஒரு சிறப்பு சர்வதேச ஆட்சியின் கீழ் ஜெருசலத்தை ஒரு சிறப்பு தனி அங்கத்துடன் சேர்த்து "யூதர் மாகாணம்" மற்றும் "அரபு மாகாணம்" என உருவாக்கப்பட வழிவகை செய்கின்றது.

- இந்தத் தீர்மானத்தின் கீழ் அமைக்கப்பட இருக்கும் 2 மாகாணங்களில், தற்பொழுது இஸ்ரேல் மட்டுமே அமைக்கப் பட்டுள்ளது.




## இரசாயனப் போரினால் பாதிப்பிற்கு உள்ளான அனைவருக்குமான நினைவு தினம் – நவம்பர் 30

- இந்தத் தினமானது இரசாயனப் போரினால் பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கு மரியாதை செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது இரசாயன ஆயுதங்களின் ஒழிப்பிற்கு இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்காக இந்த அமைப்பின் பொறுப்பை உறுதி செய்கின்றது. இதன் மூலம் உலகில் அமைதி, பாதுகாப்பு மற்றும் பன்முகத் தன்மை போன்ற இலக்குகளை அடைய இது ஊக்குவிக்கின்றது.
- ஐக்கிய நாடுகளினால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இது 2005 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இரசாயன ஆயுதங்களின் வளர்ச்சி, உற்பத்தி, குவித்தல் மற்றும் அதன் பயன்பாடு மீதான தடை மற்றும் அதன் அழிப்பு குறித்த ஒப்பந்தமானது 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 அன்று நடைமுறைக்கு வந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★